
ஆலய வரலாறு



பாண்டிருப்பு

# ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்

முகில்வண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வரலாறு

2012 ஆம் ஆண்டுக்கான
தமிழியல் விருது பெற்றது

பாண்டிருப்பு

# ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்

கலாபூசணம்
முகில்வண்ணன்
(வே.சண்முகநாதன்)

வெளியீடு:
கண்மணி பிரசுரம்
நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.
கல்முனை. இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KANMANY PUBLICATION**

| | | |
|---|---|---|
| Title | - | Sri Thurawpathi Amman Aalayam |
| Book Type | - | History of the Temple |
| Author | - | Mukilvannan |
| Birth Name | - | Velupillai Sanmuganathan |
| I S B N | - | ISBN 9789555401111 |
| Copy Rights | - | Author |
| First Edition | - | December 2011 |
| Page Setting | - | S. Umaachandran |
| Pages | - | 133 |
| Size | - | B5 |
| Price | - | Rs. 350/= |
| Published | - | Kanmany Publicaion |
| Printers | - | A. J. Printers<br># 44, Railway Station Road,<br>Dehiwala. Sri Lanka. |

**கண்மணி பிரசுரம்**

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் |
| நூல் வகை | - | ஆலய வரலாறு |
| ஆசிரியர் | - | முகில்வண்ணன் |
| இயற்பெயர் | - | வேலுப்பிள்ளை சண்முகநாதன் |
| உரிமை | - | ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | - | மார்கழி 2011 |
| அட்டை, பக்க<br>வடிவமைப்பு | - | உமாச்சந்திரன் |
| பக்கங்கள் | - | 133 |
| அளவு | - | B5 |
| விலை | - | ரூபா. 350/= |
| வெளியீடு | - | கண்மணி பிரசுரம்<br>நெசவு நிலைய வீதி, பாண்டிருப்பு-01.<br>கல்முனை. இலங்கை. |
| அச்சகம் | - | ஏ. ஜே. பிரின்டர்ஸ்<br># 44, புகையிர நிலைய வீதி,<br>தெகிவளை. இலங்கை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**அருச்சுனர் வேலுப்பிள்ளை** அவர்களுக்கு

நீண்ட காலம் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தில் அருச்சுனராக இருந்த அருச்சுனர் வேலுப்பிள்ளை அவர்கள் எனது தந்தை ஆவார். அன்னார் அங்கிருக்கும் போதே மண்ணில் இருந்து உணவருந்து -வதை மாற்றி அதற்காக ஒரு கபடா வீட்டைக் கட்டிக் கொடுத்தவர்.

அத்துடன் கல்லுக் கடைகளைக் கட்டிக் கொடுப்பதற்கு காலாக இருந்தவர். அன்னையுடன் ஏசுவதும் பேசுவதும் அவருக்கு வழக்கமாக இருந்தது. அத்தனை ஆழமான பக்தி கொண்டிருந்தவர். இவ்வாறான ஒரு நூலை நான் இயற்றி இருக்கிறேன் என்று அறிந்தால் மகிழக் கூடியவர். ஆகவே என்னுடன் பேசும் அன்னாருடைய ஆத்மாவுக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வரலாறு எனும் இந்நூலை எழுதியிருக்கும் முகில்வண்ணன் (வே. சண்முகநாதன்) அவர்களின் தந்தையார் இவ்வாலயத்தில் அருச்சுனராக இருந்த படியால் சிறு வயது முதல் ஆலயத்துடன் தொடர்புபட்டவர்.

பின்னர் இளைஞனாக இருக்கும் போதே உதவி முகாமையாக மாறி தனித்து செயற்பட்டவர். முகாமையாக இருந்த காலத்தில் ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய நிர்வாகம் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப்போது ஆலயத்தில் பல கட்டிடங்கள் உயிர்பித்தவர்.

அதன் பின்னர் பரம்பரை தலைமையை மாற்றி ஊரின் தலைவராக முதன் முதல் கடமை ஆற்றி பலரது பாராட்டையும் பெற்றார். கணக்கு காட்டுவதிலும் பணத்தை மிச்சம் பிடித்து சேமிப்பதிலும் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

தலைவராக முன்னரே **'இந்துமதி'** சஞ்சிகையில் ஆலயம் பற்றி ஒரு கட்டுரை எழுதி பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தவர். இத்தனை சிறப்புகளும் உடைய இவரைத் தவிர வேறு எவரும் இந்நூலை ஆக்கிதர முடியாது.

பல காலம் சிரமப்பட்டு விடயங்களை தேடி எடுத்து இதனை சிறப்புறத் தொகுத்து மக்களுக்கு வழங்குகின்றார். அன்னவரின் சேவை பாராட்டுவதற்குரியது. அம்மனின் ஆசியும் அருளும் அவருக்கு நிறையவே கிடைத்திருக்கின்றது. இன்னும் கிடைக்குமென எதிர்பார்கின்றோம்

**உமா சந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**நீடாழி யுலகத்து மறைநாலொ**
**டைந்தென்று நிலை நிற்கவே**
**வாடாத தவவாய்மை முனிராசன்**
**மாபாரதம் சொன்னநாள்**
**ஏடாக வடமேரு வெற்பாக**
**வங்கூரெ ழுத்தாணிதன்**
**கோடாக வெழுதும்பி ரானைப்**
**பணிந்தன்பு கூர்வாமரோ!**

**முருகார்ம லர்த்தாம முடியோனை**
**யடியார்மு யற்சித் திறம்**
**திருகாமல் விளைவிக்கு மதயானை**
**வதனச்செ ழுங்குன்றினைப்**
**புருகூதன் முதலாய முப்பத்து**
**முக்கோடி புத்தேளிரும்**
**ஒருகோடி பூதேவ ருங்கைதொ**
**ழுங்கோவை யுறவுன்னுவாம்!**

இந்த இரண்டு பாடல்களும் இந்த ஆலயத்தைப் பொறுத்து மிக முக்கியமானதாகும். எல்லாவற்றுக்கும் முன்னர் காப்பாகப் பாடப்படும் பாடலாகும். நாம் இங்கே அதனையே வழிபாட்டுப் பாடலாகக் கொள்வோம்

இந்த நூலை எழுதும் எனக்கு ஆலயத்துடன் என்ன தொடர்பு என்பதையும் இங்கே பார்க்கலாம். அப்போது நான் இதனை எழுதுவதின் முக்கியத்துவம் புரியும். முகில்வண்ணன் என்பது எனது புனைபெயர். நான் வேலுப்பிள்ளை சண்முகநாதன். ஆலயத்தில் அருச்சுனராக கட்டுக்கு நின்ற வேலுப்பிள்ளையின் மகன். அவரை எல்லோரும் அருச்சுனர் வேலர் என்று தான் அழைப்பார்கள். அவர் தான் இறக்கும் வரை அருச்சுனராகவே கோவிலில் நின்றார்.

நான் ஆரம்பத்தில் அமரர் இ. அழகையா பணிக்கொணா குடி முகாமைக்கு உதவியாக 1970 களில் இருந்தேன். பின்னர் நானே முகாமையானேன். நான் முகாமையாக இருந்த போது ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில் பரிபாலனம் என்னிடம் தரப்பட்டது.

அப்போது நான் 1975 களில் இந்து இளைஞர் மன்றத்தை ஆரம்பித்து இந்தக் கோவிலை நிர்வகித்ததுடன் ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய உற்சவத்தின் போது எங்கள் உறுப்பினர்களைக் கொண்டு அதன் பாதுகாப்பையும் உறுதி செய்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் அந்த நாட்களில் பொலீஸ் பாதுகாப்பு எமக்கு கிடைக்காமல் இருந்ததேயாகும்.

இந்தக் காலத்தில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய முகப்பில் இருந்த மடத்தை அமரர் திரு. கிருஷ்ணபிள்ளை ஊர்ப்போடியாருடன் சேர்ந்து உடைத்து அதில் ஒரு வாயிற் கோபுரம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினோம்.

தங்கள் அனுமதி இல்லாமல் உடைத்து விட்டோம் என்று ஆலய நிர்வாகிகள் பிரச்சினைப் பட்டனர். அதையும் சமாளித்தேன். நான் முகாமையாக இருந்த போது ஆலய வரலாறு பற்றிய கட்டுரை ஒன்றை எழுதி சிவஸ்ரீ க. ஐ. யோகராஜா ஐயர் ஆசிரியராக இருந்த இந்துமதி சஞ்சிகையில் வெளியிட்டேன்.

அப்போது இது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இவற்றை எல்லாம் எங்கிருந்து பெற்றேன் என்று தலைவர் என்னிடம் விசாரித்தார். அதன் உண்மைத் தன்மையை அறிந்த பின்னர் அவர் மௌனித்து விட்டார்.

அப்போதிருந்தே இந்த ஆலயத்தின் முழு வரலாற்றையும் சேகரித்து வெளியிட வேண்டும் என்று முடிவெடுத்தேன். அன்றிலிருந்து கிடைக்கும் ஆவணங்களைச் சேகரித்து வந்தேன்.

1986 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டுவரை இந்த ஆலயத்தின் பரம்பரையை மாற்றிய தலைவராக இருந்தேன். இதன் விபரத்தை **வழக்காடல்** என்னும் பகுதியில் நீங்கள் காணலாம்.

அதன் பின் ஊரை விட்டுச் சென்று ஆன்மீகத்தில் ஈடுபடலானேன். ஊரில் இருந்து வந்த பலர் என்னை மீண்டும் தலைவராக வந்து செயலாற்றும்படி கோரிக்கை விடுத்தனர். ஆனால் எனக்கு அதற்கு வசதி ஏற்படவில்லை. பின்னர் ஆன்மீக ஈடுபாடு இடந்தரவில்லை.

இருதய சத்திர சிகிச்சையின் பின்னர் ஊருக்குத் திரும்பி வந்து எனது நூல்களை வெளியிட்ட போது ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் சம்பந்தமான ஆவணங்கள் என் கைக்குக் கிடைத்தன. அதனைத் தொடர்ந்து மேலும் தேவையான ஆவணங்களை சேகரித்த போது அதை ஒரு நூலாகவே வெளியிடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன் பலனே இப்போது உங்கள் கைகளில் தவழும் இந்நூல்.

இதற்கு தலைவர் திரு நா. இராஜேந்திரன் அவர்களும் முதலாம் பூசாரியார் திரு.அ. ஜீவரெத்தினம் இரண்டாம் பூசாரியார் திரு. அ. விஜயரெத்தினம் அவர்களும், அருச்சுனர் திரு. வ. இராஜேந்திரகுமார், திரௌபதை வில்வராஜ் மற்றும் திரு. மா. கனகசுந்தரம் அவர்களும் முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். அத்துடன் வேறு சிலரும் அவ்வப்போது எனக்குத் தேவையானதை தந்து உதவினார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக துணைபுரிந்த நூல்கள் மட்டக்களப்பு தமிழகம், மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம், மற்றும் மகாமாரி தேவி திவ்விய கரணி என்பவற்றை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

எனினும் இது ஒரு முழுமை பெற்ற வரலாறாக இருக்க முடியும் என்று நான் கருதவில்லை. இதைவிட ஆழமாகச் செல்லும் எவருக்கும் இது துணையாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

இதில் ஆலயம் பற்றிய அனைத்து விடயங்களையும் சேர்த்து இருக்கிறேன். அது பற்றிய பாடல்களையும் சேகரித்து இருக்கிறேன். இந்த ஆலயம் சம்பந்தப் பட்ட பாடல்கள் எவர் கைவசம் இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் தான் அது தெரியும். மற்றவர்களுக்கு தெரியக் கொடுப்பதில்லை, எனினும் பெரும் சிரமத்தின் மத்தியில் இவற்றைச் சேகரித்துள்ளேன்.

இந் நூலைக் கையில் வைத்திருப்பவர்களுக்கு திரௌபதி அம்மன் சம்பந்தப் பட்ட பாடல்கள் அனைத்தும் தெரிந்திருக்கும். அத்துடன் மகாபாரத நூலில் இல்லாத முடிசூட்டுச் சருக்கம் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

இது மகாபாரதம் படிப்பவர்களுக்கு உதவும். இன்னும் நானறியாதவை இருக்கலாம். அவற்றை யாராவது தந்து உதவினால் அவற்றை இரண்டாம் பதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கருதுகின்றேன். ஏனெனில் இது ஒரு முழுமைபெற்ற வரலாறாக இருப்பதையே விரும்புகின்றேன்.

அல்லது இதனைத் தொடர விரும்புபவர்கள் இதிலுள்ள ஆதாரங்களை எடுத்துக் கையாளலாம். ஆனால் தயவு செய்து எங்கிருந்து எடுத்தீர்கள் என்பதைக் குறிப்பிடுங்கள்.

இதில் ஒரு விசேட அம்சமாக உடப்பூர் திரௌபதை அம்மன் மலரில் வெளிவந்த கட்டுரை ஒன்றினை அதன் முக்கியத்துவம் கருதி மீள்பிரசுரம் செய்கின்றேன். அதனை ஆக்கியவர்களுக்கு நன்றி.

இது தனிப்பட்ட எவரையோ அல்லது சமூகத்தையோ புண்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டதல்ல என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கிடைத்த தகவல்களைக் கொண்டு எழுதப்பட்டவையாகும். இந்த நூலுக்கு உங்கள் முழு ஆதரவையும் தந்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். நன்றி.

எனக்கு எழுத்துப் பிரதி தந்தவர்கள் இதில் காணப்படும் பாடல்களிலிருந்து தங்கள் பிரதிகளைத் திருத்திக் கொள்ளவும். காரணம் இவை பல எழுத்துப் பிரதிகளுடன் ஒப்பு நோக்கித் திருத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதிகள் சரியாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய சிவஸ்ரீ க.ஐ.யோகராஜா ஐயர் அவர்களுக்கும் ஆசியுரை வழங்கிய சிவஸ்ரீ மா.கு. கணேசதுரைக் குருக்கள் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வே. சண்முகநாதன்**
**(முகில்வண்ணன்)**

நெசவு நிலைய வீதி
பாண்டிருப்பு –01
கல்முனை 32300

தொ. பே. 067 2229948
செ. பே. 077 6078786

மின்னஞ்சல்: info@shanmukil.com, shanmukil@yahoo.com
இணையத்தளம்: www.shanmukil.com

குறிப்பு

1. **ஏடாக வடமேரு வெற்பாக** – என்பது ***வில்லி பாரத*** நூலின் படியாகும். **ஏடாக மாமேரு வெற்பாக** – என்பதே ஆலயத்தில் படிப்பதாகும்.

2. நூல் வெளிவருவமற்கு முன்னர் ஆசியுரை வழங்கிய **சிவசிஸ்ரீ மா.கு. கணேசதுரைக் குருக்கள்** ஐயா சிவபதம் அடைந்து விட்டார்கள். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**சிவஸ்ரீ க. ஐ. யோகராஜா ஐயர்.**

**வானோசை, இந்துமதி அர்ச்சனா போன்ற சிற்றிலக்கியங்களின் ஆசிரியரும் சோதிடரும் இலக்கியவாதியுமானவர் வழங்கியது.**

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வரலாறு என்னும் நூல் வெளிவந்திருப்பது என்னை மிகவும் பரவசமடைய வைத்துள்ளது.

**''உள்ளம் பெருங் கோவில் ஊன் உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந் தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''** என்னும் பாடல் போல் திருமூலரின் தெய்வீக உணர்வு நிறைந்தவர் முகில்வண்ணன் அவர்கள்.

*''முகில்வண்ணன்''* வே.சண்முகநாதன் அவர்களின் உள்ளத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் வீற்றிருந்து ஸ்ரீ திரௌபதியின் சிறப்புக்களை ஆன்மீக மக்களாகிய அடியார்க்கு வழங்கி வருவது தெய்வீக சேவையாகும்.

ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தின் பால் பிறப்பிலிருந்தே ஈடுபாடுடையவர். பாண்டவர்களையும் பார்த்தன் என்னும் கிருஷ்ணரையும் எப்படி பிரிக்க முடியாத பந்தமோ அதே போல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்தின் மீது அருச்சுனர் குடும்பத்தைப் பிரிக்க முடியாது.

அருச்சுனர் குடும்பத்தைச் சேர்ந்த முகில்வண்ணன் அவர்கள் பல வருடங்கள் ஆலயத்தின் முகாமையாளராகவும், சில வருடங்கள் ஸ்ரீ திரௌபதி அம்மன், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயங்களின் பரிபாலன சபைத் தலைவராகவும் கடமையாற்றி அன்னை திரௌபதியின் அருளைப் பெற்றவர்.

கட்டிடத் திணைக்களத்திலும் லேடன் கம்பனியிலும் பொறியியலாளராகக் கடமையாற்றியதானால் கோவில் திருப்பணிகளையும் இலகுவாக வடிவமைக்கும் முயற்சியில் உந்தப் பட்டு, ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வயிரவர், சண்டேஸ்வரர், முருகன் கோவில்களை ஆகமக் கோவிலாக்க துணை நின்றவர்.

ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வரலாறுகள் கல்வெட்டுகளைத் தேடி எடுத்து, சாதிகள், குடிகள் பெருமைகளை மக்களுக்கு தெரியப் படுத்தியவர். நான் வெளியிட்ட இந்துமதி, அர்ச்சனா எனும் சஞ்சிகைகள் மூலம் திரௌபதி அம்மன் ஆலய வரலாற்று உண்மைகளை மக்கள் முன் தைரியமாகவும் துணிவுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு கோவில் நடைமுறைகளை சரியாக வெளிக் கொணர உதவிய முதல் மனிதர்.

ஊர்கள் தோறும் நம்மவர்கள் தங்கள் சமூக, சாதி, பிரதேசமென்றும், தனிமனிதராகவும் அழகிய பிரமாண்டதுமான கோயில்களைக் கட்டி வைத்திருந்தாலும் ஆலயங்களின் சிறப்புக்கள் வழிபாட்டு முறைகள் அருளின் தன்மைகளை அவற்றை நேரில் தரிசிப்பவர்கள் மட்டும் தான் உணரமுடியும்.

ஆனாலும் அந்த ஆலயங்கள் பற்றிய விபரங்களை நூலாக வெளியிடும் போது, படிப்பவர்கள் யாவரும் எந்த நாடுகளில் இருந்தாலும் அந்த ஆலயம் பற்றிய விபரங்களை அறிய வரும் போது அந்த ஆலயத்தின்பால் பற்றுவரும் அருள் பெருகும்.

முகில்வண்ணன் அவர்களின் இந்த முயற்சினால் நமது ஆலயத்தின் சிறப்புக்கள் அகில உலகிலும் வாழ்கின்ற நமது உறவினர்களைச் சென்றடையும் போது இளம் சந்ததியினர் எந்தக் காலத்திலும் படித்துப் பக்தி கொள்ள உதவும்.

''சேர்த்து வைத்த புண்ணியங்கள் சந்ததியைச் சென்றடையும்'' என்பதற்கிணங்க ஸ்ரீ திரௌபதி அம்மன் அருளாசிகள் இறை நேசச் செல்வர்கள் அனைவரையும் சென்றடைய என் ஆசிகள்.

**சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர்.**

வீமர் வீதி,
பாண்டிருப்பு – 02.
கல்முனை.
தொ.பே. 067 2222442

*05.08.2011*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

**சிவஸ்ரீ. மாணிக்கக் குருக்கள் கணேசதுரைக் குருக்கள் ஜே.பி.**
**துறைநீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய குரு**

**சிவமயம்**

பாண்டிருப்பு திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன் முகில்வண்ணன் அவர்கள் வெளியிடுகின்ற ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வரலாறு என்னும் நூல் வெளியீடு மிகப் பெரிய சமயத் தொண்டாகும்.

இது மகாபாரதக் கதையுள் அடங்கியதாகும். மகாபாரதம் என்னும் போது அது எம்முடைய சமயத்தில் ஐந்தாம் வேதமாக மதிப்புப் பெற்றுள்ளது என்பது எவரும் அறிந்த விடயமாகும்.

மறை என்பது வேதத்துக்கு மறு பெயர். அதாவது மறைந்து இருக்கும் பொருள்களை வெளிப்படுத்துவதாகும். அதே போல் நமது பாண்டிருப்பில் பழமை வாய்ந்த ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்துள் மறைந்து கிடக்கின்ற செயல்கள், நடைமுறைகள், அதாவது வருடாந்த உற்சவங்கள், தாதன் கல்வெட்டு, முன்னைய வழக்காடல் முதல் ஆலயம் சம்பந்தப் பட்ட பாடல்கள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தையும் இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். ஊரிலுள்ள அனைவரும் இதனை ஒரு பொக்கிஷமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

ஆகவே இத் தொண்டைச் செய்கின்ற முகில்வண்ணன் அவர்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் இன்னும் இது போன்ற தொண்டுகளைச் செய்வதற்கு அன்னாருக்கு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரும் ஸ்ரீ திரௌபதி அம்மனும் நீண்ட ஆயுளையும் சக்தியையும் கொடுக்க வேண்டுமென்று ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ மா.கு. கணேசதுரைக் குருக்கள் ஜே.பி.**
**பாண்டிருப்பு 2.**
**கல்முனை.**

*10.09.2011*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் உரை

**திரு. நா. இராஜேந்திரன் தலைவர்**
**ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார், ஸ்ரீ திரௌபதி அம்மன் தேவஸ்தானம்,**
**பாண்டிருப்பு அவர்கள் வழங்கியது**

**''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''**

பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் பற்றிய வரலாற்றை இங்கு சுருக்கமாகத் தரலாமென்றிருந்தேன். ஆனால் திரு **வே. சண்முகநாதன் முகில்வண்ணன்** அவர்கள் அது பற்றிய விரிவான விபரங்களை பல ஆண்டுகளாகச் சேகரித்து இப்போது நூலாகத் தொகுத்து வெளியிடுகின்றார். ஆகவே, அதனை விடுத்து ஆலய புனரமைப்புப் பற்றிய சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன்.

ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் கண்டி மன்னனான விமலதர்ம சூரியன் காலத்திலே கட்டப்பட்டது. அதனால் இது மிகவும் பழமை வாய்ந்தது.

இவ்வாலயம் இப்போது சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனை புனரமைப்புச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதன் காரணத்தினால் புனரைமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலய நிதி பற்றாக் குறை காரணமாக பூரணமாக நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது. எனவே, அன்புள்ளம் கொண்ட அடியார்கள் பெருமனது கொண்டு இத்திருப்பணிக்கு அன்பளிப்புச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

அன்பளிப்புச் செய்ய வேண்டிய அடியார்கள் **தேசிய சேமிப்பு வங்கி கல்முனைக்** கிளை **கணக்கு இல: 650** இற்கு வைப்புச் செய்து அம்மனின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 067 3673491ம் 067 3673327.

மேலும், இம்மலர் வெளியிடும் ஆசிரியர் **வே. சண்முகநாதன்** (முகில்வண்ணன்) அவர்கள் இக்கிராமத்திலே பிறந்து வளர்ந்தவர். இவர் அருச்சுனர் குடும்பத்தைச் சேர்ந்தவர். 1987ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டுவரை இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக இருந்து திறம்பட நற்பணியாற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சேவையில் மிகவும் ஈடுபாடு உடையவர் மட்டுமில்லாது இவர் ஒரு இலக்கியவாதி, ஒரு எழுத்தாளர் ஆவார்.

இம் மலர் வெளியிடுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதுடன் எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்க வளர்க அவர் தெய்வீகப் பணி!**

**''அனைவருக்கும் அன்னை பராசக்தியின் அருள் பாலிக்க வேண்டுகிறேன்''**

**நா. இராஜேந்திரன்.**
**தலைவர்.**

பாண்டிருப்பு 01.
கல்முனை -32300.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பதிப்புரை

முன்னுரை

அணிந்துரை

ஆசியுரை

தலைவர் உரை

01. பாண்டிருப்பின் வரலாறு
02. ஆலய வரலாறு
03. ஆலய ஆரம்ப காலம்
04. வரலாறு காட்டும் தாதன் கல்வெட்டு
05. ஆலய பரிபாலன வரலாறு
06. ஆலய வழிபாடுகளும் பூசை முறைகளும்
07. தவநிலை செல்லல்
08. தவநிலைப் பாடல்களும், பாசுபதம் பெறும் பாடல்களும்
09. அரவானைப் பலி கொடுத்தல்
10. தீப்பாய்தல்
11. வர்த்தமானிப் பிரகடனம் பண்ணப்படும் கோவில்
12. நிர்வாக எல்லை
13. வரைபடம்
14. வழக்காடல்
15. பட்டாணி கோயில் வரலாறு
16. குடிகளின் வரலாறு
17. பஞ்சாயத்து சபை
18. மருமக்கள் மான்மியம்
19. உடப்பூர் தி. அ. ஆலயம் பற்றிய கட்டுரை
20. பின்னிணைப்புகள்
    1. ஆலய படங்கள்
    2. ஏனைய படங்கள்
    3. அம்மன் அகவல்
    4. அம்மன் காவியம்
    5. அம்மன் தாலாட்டு
    6. முடிசூட்டுச் சருக்கம்
    7. தீப்பள்ளயம் (கவிதை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. பாண்டிருப்பு ஊர் பற்றிய வரலாறு

பாண்டிருப்பில் திரௌபதி அம்மன் கோவில் ஆரம்பிக்க முன்னர் பாண்டிருப்பு என்றொரு கிராமம் இருக்கவில்லை. ஆலமரங்கள் சூழ்ந்த வனமாகவே இருந்தது இந்தக் கிராமம். நாப்புட்டிமுனை என்னும் கிராமம் தான், ஊரும் வனமும் சேர்ந்த கிராமமாக இருந்தது. திக்கதிபர் என்று குறிப்பிடப்படுபவரினால் இப்பிரதேசம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அந்தக் காலத்தில் அவர் ஒரு சிற்றரசர் (திக்கதிபர்) என்று கணிக்கப்பட்டார்.

இது கண்டி இராச்சியத்துக்கு உட்பட்டதாக இருந்தது. அதனாலே கண்டி அரசன் இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருக்கிறான். இவரும் அவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தார் என்பது புலனாகுகின்றது.

பண்டு தொட்டு பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் உறைந்திருக்கின்றனர். இது பாண்டவர்களின் உறையும் இடமாக இருந்ததனால் இவ்வூர் பாண்டிருப்பு என்னும் நாமத்தைப் பெற்றதென்பர் இவ்வூர் முதிய மக்கள்.

**பழம் பெருமை மிக்க இக்கிராமம் மட்டு மா நகருக்கு தெற்கே இருபத்தி ஐந்து மைல் (நாற்பது கிலோ மீற்றர்) தொலைவில் இருக்கும் கல்முனை நகரில் இருந்து ஒரு மைல் தூரத்தில் வடக்காக இருக்கிறது.**

இங்கே ஆலயத்தை அமைக்க வந்த முனிவர் குறுநில மன்னருடன் கடலருகே நிலத்தைப் பார்த்துக் கொண்டு வரும் போது இந்த இடமே தாதன் வேண்டியபடி உரிய வசதிகளுடன் காணப்பட்டது.

அந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை (உருவத்தை) ஆறு பேருக்கு உண்டாக்கி அதனை நம்பும் படி தீ வளர்த்து அதிலிறங்கி மீண்டு காட்டினான். அரசனும் மகிழ்ந்து அங்கே ஆலயம் அமைக்க அனுமதி அளித்தான். அங்கே பாண்டவர்கள் உறுப்பு அமைந்ததால் "பாண்டுறுப்புமுனை" என்னும் நாமம் சூட்டி வங்கர் குலத்துக் கதிபரே பலிபாலிக்கும்படி திட்டஞ் செய்து தன்னிருப்பிடம் சென்றான். வங்கர் குலம் என்பது பணிக்கர் குலமே.

"பாண்டுறுப்புமுனை" (ஆதாரம் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்) என்னும் நாமம் நாளடைவில் திரிபடைந்து இப்போது "பாண்டிருப்பு" என வழங்குவதைக் காணலாம். ஆரம்பத்தில் பாண்டுறுப்புமுனை சரியாக இருக்கும் என்பதற்கு ஆதாரம் இங்குள்ள ஏனைய ஊர்களான கல்முனை, நாப்புட்டிமுனை, மருதமுனை என்னும் இந்த முக்கோணத்துக்குள்ளே இருப்பது தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டுறுப்புமுனை. ஆகவே இந்தப் பெயர் சாத்தியமானதே. ஆயினும் பேச்சுவழக்கிற்கு சிரமமான சொற்களே திரிபடைகின்றன. இதன்படி பாண்டுறுப்புமுனை சிரமமாக இருந்ததால் பாண்டுறுப்பு என்று வந்து பின்னர் பாண்டிருப்பு ஆகி விட்டது. முனையைக் கைவிட்டு விட்டார்கள். நாப்புட்டிமுனை பின்னர் நாய்ப்பிட்டிமுனை என்று வழங்கலாயிற்று.

இந்த ஊரைப் பற்றிய இன்னும் ஒரு விசேசம் என்னவெனில் இங்கே ஆலயம் அமைக்கப்பட்ட பின்னரே இதில் மக்கள் குடியேறினர் என்பதாகும். அதுவும் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் நடந்துள்ளதைக் காண முடியும். அதாவது இங்கு குடியேறியவர்கள் அனைவரும் ஆலய பரிபாலனத்தை அடிப்படையாகக் கொண்டு குடியமர்த்தப்பட்டனர் என்பது புலனாகிறது.

இந்த ஊரில் ஆலய பூசைகளுக்கு உரித்துடைய வெள்ளாளர், முற்குகர் இவர்களின் பிரிவுகளாகிய குடிகள் என்பனவும் அத்துடன் இவ்வாலயத்துக்கு தொண்டு ஊழியம் செய்யும் சாகியங்களும் இருக்கின்றனர். நாவிதர் ஊரின் வடக்கிலும், சாணார் (அல்லது சாண்டார்) பொற்கொல்லர் மற்றும் சலவைத் தொழிலாளிகள் ஊரின் தெற்கிலுமாக இருக்க ஏனைய குடிமக்கள் ஊரின் நடுவில் இருக்கின்றனர்.

இவர்களில் கோவிலில் சேவகம் செய்யும் பறை மேளம் அடிப்பவர்கள் கரவாகுப்பற்று என்னும் பகுதியில் குடியமர்த்தப்பட்டதுடன் இப்பகுதியில் அமைந்துள்ள கோவில் நெற்காணி செய்கைக்காக ஊழியத்தின் கூலிக்காக இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

பிற்காலத்தில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணமாக அந்த மக்கள் அந்தப் பகுதியில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டதுடன் அவர்கள் காணிகளும் கோவிலும் வேறு இனத்தவர்களால் அடாத்தாகக் கைப்பற்றப்பட்டதாக அறிய முடிகின்றது.

அடிக்கடி இவ்வாறான இனக் கலவரம் ஏற்பட்டதன் காரணமாக இம்மக்கள் ஒரு நிரந்தர இடத்தை நாடி குடிபெயர்ந்து விட்டனர். எனினும் இன்று வரை அவர்கள் கோவிலில் ஊழியம் செய்து கூலியைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஊருக்கே இத்தனை பெருமை என்றால் அதில் குடியிருக்கும் திரௌபதி அம்மனுக்கு எத்தனை பெருமை இருக்க வேண்டும். ஊருக்கும் இத்தனை பெருமை இந்த திரௌபதி அம்மனால் தான் என்பதும் குறிப்பிடத் தக்கது. இந்த ஆலயம் வந்த வரலாற்றை இனிப் பார்ப்போம்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. ஆலய வரலாறு

பாண்டிருப்பில் அமைந்துள்ள பாண்டவர்களின் கோவிலில் நடைபெறும் இத்தீப்பள்ளய நிகழ்ச்சியினால் அகில இலங்கையிலும் இவ்வூரின் கீர்த்தி பரவியுள்ளது. அதனை இந்நூல் அகில உலகிற்கிற்கும் எடுத்துச் செல்லப் போகின்றது.

இக் கோவிலில் நடைபெறும் திருவிழாவை மற்றைய கோவில்கள் போன்று தேர், தீர்த்தம், திருவிழா, என அழைப்பதில்லை. இது மட்டக்களப்புத் தமிழில் **''தீப்பள்ளயம்''** என்றே அழைக்கப்படுகின்றது. **''பள்ளயம்''** என்றால் பெரு வேள்வி எனப் பொருள்படும்.

இத் திருவிழாவின் இறுதி நாளன்று திரௌபதி அம்மனுக்கு அளிக்கும் பெரும் தீ வேள்வியே **''தீப்பள்ளயம்''** என்ற பெயர் வரக் காரணமாயிற்று. தீயால் வேள்வி கொடுத்த மக்கள் அம்மனைத் தணிக்கும் பொருட்டு பால் பள்ளயம் வைப்பர். தீப்பாய்ந்து அடுத்த நாள் தீக்குழிக்கு பால் வார்க்கும் நிகழ்வு இடம் பெறும். இதுவே பால்பள்ளயம் எனப்படும்.

கோவில் முன்றலில் இருபது அடி நீளமுடையதும் மூன்று அடி அகலமும் மூன்று அடி ஆழமுமடைய குழி தோண்டப் பட்டு அதிலே பச்சை வீர விறகுக் கட்டைகள் அடுக்கப் பட்டு நெருப்பூட்டப்படும். விறகுகள் அனைத்தும் அனல் கக்கும் தணல்களாக மாறிய பின்னர் கோவிற் பூசகரும் ஐவர் ஐந்து பேரும் திரௌபதியும் தீப்பாய்ந்த பின்னர் ஏனைய பக்தர்கள் தம் நேர்த்திக் கடனை தீப்பாய்ந்து நிறைவேற்றுவர். இதுவே **''தீப்பள்ளயம்''** எனப்படும். இந்தளவுக்கு தீ வளர்த்து பாயும் இடம் இலங்கையில் எங்குமில்லை எனலாம்.

இத் தீ வேள்வியினாலே இக் கோவிலின் கீர்த்தி பரவலாயிற்று. அதை விட ஆதியில் இலங்கையில் திரௌபதி அம்மனுக்கென ஆலயம் முதன் முதலில் அமைந்தது பாண்டிருப்பிலேயாகும். இதனைப் பட்டயங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

அதன் பின்னரே இலங்கையில் பல பாகங்களிலும் திரௌபதி அம்மனுக்கு ஆலயம் எடுத்தனர் என்று அறிய முடிகின்றது. மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் (இன்னும் பல நூல்களிலும் இதே கல்வெட்டு காணப்படுகின்றது) காணப்படும் கல்வெட்டைத் தவிர முன்னாள் தலைவர் அமரர் சிவப்பிரகாசம் பொறியியலாளர் அவர்களிடம் பல செப்பேடுகள் இருந்தன. இவற்றை நான் அவரிடமிருந்து பார்த்தேன். ஆனால் அவை இப்போது எங்கு எப்படி இருக்கிறது என்று அறிய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் ஆராய்ச்சியாளர்களால் அணுகி ஆராயப்பட வேண்டிய பழமை வாய்ந்ததாகும். ஆனால் மட்டக்களப்பின் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும் இக்கோவிலின் வரலாற்றை இதுவரை யாரும் எழுதியதாக இல்லை. வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதற்குக் காரணம் இக் கோவில் வரலாற்றில் இரண்டு அரசர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதைப் பின்னால் பார்ப்போம்.

இன்றைய சந்ததியினருக்கு எல்லாவற்றிலும் அதிக அக்கறை இருக்கின்றது. எதையும் ஆராய்ந்து அறியும் மனப் பக்குவம் அவர்களுக்கு இருக்கிறது. இளம் சந்ததியினர் விளக்கமாக அறியும் பொருட்டு இதனை சற்று விரிவாகப் பார்ப்போம்.

இவ்வாலய வரலாறு மிகத் தொன்மை வாய்ந்ததாலும் வாய்வழியே கூறப்பட்டு வந்ததாலும் இன்றைய இக்கோவில் வரலாற்றை ஊர்மக்கள் கூட சரிவர அறியாமல் இருக்கின்றனர். இதனை இன்றைய தலைமுறையினர் மட்டுமின்றி வருங்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இது ஆராய்ந்து அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

மாருதசேனன் தன்னுடைய புத்திரன் எதிர்மன்னசிங்கன் என்பவனுக்கு தோப்பாவையும் மட்டக்களப்பு உன்னரசுகிரி மன்முனை கோறளை இவைகளை கலி உதித்து நாலாயிரத்து அறுநூற்றி நாற்பதாம் வருஷம் பட்டங்கட்டினான். எதிர்மன்னசிங்கன் இவற்றை திக்கதிபர்கள் வைத்து அரசு புரிந்தான். இக் காலத்திலே சிதைவுற்ற சிவாலயங்களைச் செப்பனிட்டு ஆறுகால பூசைகளையும் செய்வித்து இப்பகுதிகளை அரசு புரிந்தான் என்பது வரலாறு.

இக் காலம் வடநாட்டு கொங்கு நகரிலுள்ள தாதன் என்பான் துவாபர யுக முடிவில் அத்தினாபுரியை அரசு செய்த குருகுலத்ததிபர், நாகர் குலத்து துரியோதனாதிகள் பாண்டுவின் குலத்துத் தருமாதிகளுக்குச் செய்த அட்டூழியங்களை மகாபாரதத்தோடு சேர்த்துப் புலவர்களால் பாடிய இதிகாசத்தையும் மடலில் வரைந்து எடுத்துக் கொண்டு வைஷ்ணவ மதத்தைப் பரப்பும் நோக்கங் கொண்டு காவி கமண்டல தாரியாய் வேடம் பூண்டு இலங்கையில் மட்டக்களப்புப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். (அந்நாளில் மட்டக்களப்பு என்பது சம்மாந்துறை வரை பரந்து இருந்தது என்பது வரலாறு).

இது வரை கடல் வழியாக வரும் மரக்கலங்கள், ஓடங்கள் என்பன முகத்துவாரத்தின ஊடாக கல்லடி ஆற்றின் வழியாக சம்மாந்துறை வரை பயணம் செய்ததாக வரலாறுகள் கூறும். (செம்மண்துறை என்பதே பின்னர் சம்மாந்துறை என்றாகியது என்பர்) பின்னர் நாகமுனை என்ற பெயர் பெற்ற திருக்கோவில் சந்நிதியைக் கண்டு தரிசித்து இங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசத்தை அங்கேயே போதித்தனன்.

இதை அறிந்த திக்கதிபன் ஒருவன் எதிர்மன்னசிங்க நிருபனுக்கு அறிவித்தனன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மன்னசிங்க நிருபன் திருக்கோவிலுக்குச் சென்று தாதனின் குலம் கோத்திரம் நாமம் சுயநாடு இவைகளை விசாரித்தான்.

தாதனும் அரசனை நோக்கி அரசே, என் குலம் வசியன். என் நாமம் தாதன். எனது கோத்திரம் விஷ்ணு. எனது நாடு கோங்கு நகர். நான் பாண்டவர் குலத்து தருமாதியார்களுக்கு நாகர் குலத்துத் துரியோதனர்கள் செய்த தீமைகளைக் காண்பிக்கும் படி வந்தேன் என்றான்.

எதிர்மன்னசிங்க மன்னனும் அதனை அறிய விரும்பினான். இது பற்றி விளக்கிக் கூறிய தாதன், மகாபாரதத்தில் சொன்னபடி பாண்டவர்கள் வனவாசம் செல்லுதல், பார்த்தன் சிவனிடத்தில் பாசுபதம் பெறுதல், அரவானைக் களப்பலி செய்ததும், துரியோதனாதியாரைக் கொன்றதும் பின்பு அக்கினி குளித்து மீண்டும் இந்திரபிரஸ்தம், அத்தினாபுரம் இவைகளை அரசு செய்ததுங் காண்பிக்க வேண்டும். அதற்கு சமுத்திரக் கரை அருகும் ஆல விருட்சம் நிறையப் பெற்ற இடமும் அதற்கு அப்பால் வனமும் இருக்கும் இடத்தில் தான் காண்பிக்க வேண்டும் என்று கூறினான்.

அக்கினி குளித்தல் என்று தாதன் குறிப்பிட்டதே பின்னர் தீப்பள்ளயம் என்றாகியது. பாஞ்சாலி தன் சபதத்தை நிறைவேற்றியதும், துச்சாதனன் தன்னைத் தொட்ட களங்கத்தை நீக்கும் பொருட்டும் தீயிலிறங்கி மீண்டதாகக் கூறுவர். ஆயினும் இதற்கான காரணத்தை உடப்பூர் திரௌபதி அம்மன் ஆலய வரலாறு வேறு விதமாகக் கூறிகின்றது. இதனை உடப்பூர் ஆலய வரலாற்றுப் பகுதியில் காணலாம்.

அரசனும் சம்மதமுற்று அனைவரும் கடலருகாய் வரும்போது, இக் கிராமம் தாதன் வேண்டியபடி உரிய வசதிகளுடன் காணப்பட்டது. அந்த இடத்தில் பாண்டவருக்குரிய உறுப்பை ஆறு பேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீ வளர்த்து அதிலிறங்கி மீண்டு காட்டினான். அரசனும் மகிழ்ந்து ஆலயம் உண்டாக்கிப் ''பாண்டுறுப்புமுனை'' என்னும் நாமம் சூட்டி வங்கர் குலத்திபரே பரிபாலிக்கும்படி திட்டஞ் செய்து தன்னிருப்பிடம் சென்றனன்.

இது ஆலயம் தோன்றிய வரலாறாகும். இதன் மேலதிக விபரத்தை தாதன் கல்வெட்டு மூலம் அறியலாம். அதனைத் தனியே தந்துள்ளேன்.

அதே போன்று திரௌபதி அம்மன் அகவல், திரௌபதி அம்மன் காவியம், திரௌபதி அம்மன் தாலாட்டு என்பனவும் தனித்தனியே தரப்பட்டுள்ளன.

இவ்வாறு நமது திரௌபதி அம்மன் ஆலயத்துக்கு அம்மன் அகவல், அம்மன் காவியம், அம்மன் தாலாட்டு, அம்மன் புலம்பல், அருச்சுனர் தவநிலை, பாசுபதம் பெறல் போன்ற தனித்துவமான பாடல்கள் இருப்பது போன்று உடப்பூர் திரௌபதி அம்மனுக்கு அவர்கள் ஊர் வழக்குப் படி பாடல்கள் அமைந்து இருக்கின்றன. இதனை இங்கே தரமுடியாது வேண்டுபவர்கள் உடப்பூர் வரலாறும் மரபுகளும் என்னும் சிறப்பு மலரில் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. ஆலய ஆரம்ப காலம்

இந்த ஆலயம் பழமை மிக்கது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அதன் ஆரம்ப காலம் எது என்பதுதான் எவருக்கும் தெரியவில்லை. இங்கே காணப்படும் கல்வெட்டில் காணப்படும் அரசர்களின் கால எல்லையைக் கொண்டு அவற்றைக் கணிக்கலாம் என்று கருதுகின்றேன்.

01. இவ்வாலய வரலாற்றுக் காலத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு தாதன் கல்வெட்டில் வரும் கண்டி மாநகரை ஆண்ட விமலதருமசூரியன் என்னும் மன்னன் இவ்வாலயத்தின் அருமை பெருமைகளை அறிந்து இவ்வாலயத்திற்கு வந்து பரவசமடைந்து ஆலயத்துக்கு நன்கொடையாக நிலபுலன்களையும், பொன், வெள்ளி, தங்கம், தந்தம், இரத்தினம் போன்ற பொருட்களையும் காணிக்கையாக ஈந்து சென்றனன் என்பதாக அறியக் கிடைக்கின்றது.

கண்டி நகரை ஆண்ட விமலசூரியனின் ஆட்சிக் காலம் கி.பி. 1594 முதல் கி. பி. 1604 ஆண்டுவரை என்று பல ஆராய்ச்சி நூல்களால் அறியக் கிடைக்கின்றது.

**ஒரு ஆதாரம் மட்டக்களப்பு தமிழகம் நூலாகும். அடுத்தது மட்டக்களப்பு மான்மியம் ஆகும்.**

**விமல தருமனெனும் வேந்த னகமகிழ்ந்து**
**கமல விழிக்கண்ணன் கருணைதங்கு மிப்பதிக்கு**
**வேண்டும் வயல்நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்**
**தூண்டுதும்பிக் கோடுடனே சோதியெழ யீந்துமன்னன்**
**கண்டிநகர் சென்றான்.....**

இது விமலதருமசூரியன் இவ்வாலயத்தக்கு விஜயம் செய்ததைக் குறிக்கும் கல்வெட்டின் ஒரு பகுதியாகும். ஆக அது மேலே சொல்லப்பட்டபடி 1594 இற்கும் 1604 இற்கும் இடைப்பட்ட காலமாகும். இதற்கு முன்னரே இவ்வாலயம் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்ற அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

02. எதிர்மன்னசிங்க மன்னன் முடி சூட்டப் பட்டு ஆட்சி புரிந்த காலம் என்ன என்பதை இனிப் பார்ப்போம். ஏனெனில் தாதனை சந்தித்து ஆலயம் அமைக்க அனுமதி வழங்கியது எதிர்மன்னசிங்க மன்னன் என்பதை தாதன் கல்வெட்டினூடாக் காணலாம். ஆனால் அதன் காலப் பகுதியை நாம் அறிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு எதிர்மன்னசிங்க மன்னனின் ஆட்சிக் காலத்தைக் கணக்கெடுக்க வேண்டும். அவன் முடிசூட்டப்பட்டதை பின்வரும் பாடலால் அறியலாம்:

**கார் தெலைப்பானென யிலங்கைக்**
**கனகமுடி மன்னரெல்லாங் களித்து வாழ்த்தச்**
**சீரிலங்கும் மட்டமெனுங் களப்பு நாட்டைச் சிறந்த**
**கலிபிறந்து நாலாயிரத்தறு நூற்று நாற்பதாண்டில்**
**பார் செழிக்க முடிபுனைந்தான் தோப்பாவைப்**
**பண்டதாக்கி பருதிகுலன் பவனியாய்**
**தேரினிடம் வலந்திரிந்து செங்கோலோச்சு**
**மதிப்பவரசர் மரபனென்னும் எதிர்மன்ன சிங்கன்தானே!**

இதன் படி கலி பிறந்து 4640ம் வருடம் மன்னன் எதிர்மன்னசிங்கன் முடி சூட்டி ஆட்சி பீடம் ஏறினான் என்றும் ஆனாலும் அவனது சரித்திரம் மூலம் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றும் அறியக் கிடைக்கின்றது.

இதனை உற்று நோக்கினால் இக்காலப் பகுதியில் இவ்வாலயம் இம் மன்னனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று துணியலாம். இது கி. பி. 1539 முதல் கி. பி. 1583 காலப்பகுதியாகும். ஆகவே இவ்வாலயம் தோன்றிய காலத்தை இதிலிருந்து நிர்ணயித்து அதன் பழமையை அறிந்து கொள்ளலாம்.

எதிர்மன்னசிங்கனின் கடைசிக் காலமான 1570 – 80 களில் இது கட்டப்பட்டிருக்கலாம் என்று எண்ணினாலும், விமலதருமசூரிய மன்னன் வந்து தரிசித்த அவனது ஆட்சிக் காலத்தை (கி.பி. 1594 – 1604) நோக்குமிடத்து கிட்டத்தட்ட ஒத்திருத்தலைக் காணலாம்.

ஆகவே விமலதரும சூரியன் காலத்துக்கு முன்பே கட்டப்பட்டது என்று நாம் துணியலாம். ஆகவே நிச்சயமாக இது கி. பி. 1570 இல் கட்டப்பட்டது என்று கூறலாம். இது தெட்டத்தெளிவாக இவ்வரலாற்றில் இருந்து காணப்படுகின்றது.

இதன்படி இப்போது இவ்வாலயம் அமைத்து இற்றைக்கு 440 ஆண்டுகளுக்கு முன்னர் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

உடப்பூர் திரௌபதி அம்மன் ஆலய வரலாற்றை நோக்கும் போது அவ்வாலயம் இதற்குப் பின்னரே கட்டப்பட்டிருத்தலைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இதற்குப் பின்னர் மட்டக்களப்பு போரதீவு என்னும் கிராமத்தில் வேறு ஒரு திரௌபதி அம்மன் ஆலயம் அண்மையில் கட்டப்பட்டிருக்கிறது.

கண்ணகி அம்மன் ஆலயங்கள் கட்டப்பட்டிருப்பதைப் போன்று திரௌபதி அம்மன் ஆலயங்கள் பரவலாகக் கட்டப்படவில்லை என்பதும் புலனாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. வரலாறு காட்டும் தாதன் கல்வெட்டு

ஆரம்பத்தில் தாதனால் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில் தாதன் கோவில் என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதே போன்று இவ்வாலயக் கல்வெட்டும் தாதன் கல்வெட்டு என்றே அழைக்கப்பட்டு வந்தது.

**மூடு மந்திரமாய் இருக்கும் அந்தக் கல்வெட்டு என்ன வென்று பார்ப்போம்:**

சீர்மேவு பூவுலகில் திருமால் மதத்தொழுங்கைப்
பார்மேவு தாதன் பகுக்க மனத்திலெண்ணி
அரியோன் பதத்தை அடிபணிந்து தெண்டனிட்டுக்
குருவின் கருவில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனத்தை ஒருப்படுத்திக்
கொடையில் சிறந்த குகனிடத்தில் செல்லவென்று
காவி உடுத்திக் கமண்டலமும் கைப்பிடித்து
ஆவி அடக்கி அஞ்செழுத்தை யுச்சரித்துப்
பல்லோர் துதிக்கப் பாருலகோர் ஈடேற
வில்விசையன் செய்தவத்தை மேன்மைபெறக் காசினியில்
பத்ததி போற்காட்டிப் பகுத்தறிவாய்த் தாதனுந்தான்
சுற்றம் மகிழத் துதித்தெழுந்து தென்னிலங்கை
சென்று மட்டமாநகரில் திருக்கேவில் சந்நிதியைக்
கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே!
கலிங்க குலத்துக் காவலனு மப்பொழுது
இலங்கு திருப்பணிக்கு யீடுபூசை காணையிலே!
பரதநாட்டிற் பிறந்தா னெனவறிந்து பார்வேந்தன்
இரத நடைவீதி யென்னுமிடம் வரவழைத்து
எதிர்மன்ன சிங்க மென்னும் நரபதியும்
கதிதங்கும் இப்பதியில் கண்டதில்லை உந்தனைத்தான்!
ஆர நீரறையும அந்தணனோ சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுட னோதுமென்னத்
தாதன் மனமகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடன் ஓதுகின்றான்
கோங்கு நகர்மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே நானுதித்து பாரதமென்றோர் மதத்தை
வங்கம் கலிங்கம் மலையாள மத்திபுரம்
அங்கங்கு சென்று அரியோ னடியார்க்குக்
காட்டியபின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்குச்
கூட்ட நினைவுகொண்டு துளசி மாலையிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே னெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷ மாகித் தாதன் றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலருகும்
அடைவாகத் தேடி ஆழியரு காய்வரவே
கண்டார்க ளால்வனத்தைக் கடலும் அருகிருக்கத்
தொண்டரொடு தாதன் துதித்து நமஸ்கரித்துப்
பஞ்சாட்சரத்தை பதித்து மனத்தொன்றாக்கிக்
கஞ்சன் முதலாக ஐவர்விந்தஞ் சேர்ந்தமட்டும்
தீட்டி ஒளியாக்கி தீவளர்த்துப் பாய்தபின்பு
காட்டி முறைப்படியே கலிங்கர் குலத்தோர்க்கு
கரிசனையோ நம்பிசிறை கட்டுவதற்குச் சட்டமுடன்
தீர்த்து எதிர்மன்ன சிங்கன் மனமகிழ்ந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம் வனவாசம் கடல்குளித்துத் தீப்பாய்தல்
அம்புவில்லுந் தண்டுடனே ஐவர்கொலு வாக்கிவைத்து
ஆடலோடு பாடி ஆதி துரோபதைக்கு
மாடமுயர் கோயில் வரிசையுட னியற்றி
கும்பிட்டார் தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்று
தம்பட்டம் சல்லாரி தாரைசின்னஞ் சங்குதொனி
உடுக்குச் சிலம்புமணி ஒளிதங்கு தீபம்எழ
அடுக்கு முறையோ டரவான் களப்பலியும்
பத்ததி போற்காட்டி 'பணிக்கன் குலத்தோர்க்கு'
உற்றபுகழ் மேவ உங்களுக்கு முன்னீடு
ஈந்தே னிலங்கை எங்கு முயர்ந்தோங்க
ஆய்ந்து பணிசெய்யென் றகலமன்ன னப்பொழுது
பதினெண் வரிசையோடு பத்தும் பதியுடனே
மதி வெண்ணொளி பரப்ப மாயோன் மதமோங்க
கண்டோர் களிகூரக் காசினியோர் கொண்டாட
என்றும் பாசிதமாயிப் பதியைப் பெற்றதினால்
ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாலியெழப்
பாவாணர் பாடப் பல்லுயிரெல் லாம்வாழ்க!
போதற்ற மாதர்கற்பு குன்றாமல் வாழ்வுயர
மாதத்தில் மூன்று மழை மட்டநகர் பெய்துவர
என்றார் பணிக்கர் குலத்ததிப னேந்தலுடன்
கண்டறிந்து மாயவன் கருணைதனை யுண்மையென்று
''விமலதரு மனென்'' னும் வேந்தன் மனமகிழ்ந்து
கமல விழிக் கண்ணன் கருணைதங்கு மிப்பதிக்கு
வேண்டும் வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
தூண்டுதும்பிக் கோடுடனே சோதியெழ யீந்துமன்னன்
'கண்டி நகர்' சென்றான் காசினியோர் தாமறியப்
பண்டு முறை என்றென்றூர் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தான் **தாதன் கல்வெட்டு** இதனை மூடி மறைத்து வைப்பதினாலும், எம்மூர் மக்கள் இதனை அறியாமல் இருப்பதனாலும், இதனால் பெறப்படும் பல உண்மைகளையும் அறிய முடியாமல் இருப்பதும் இயல்பே! இது பாண்டிருப்பில் வாழும் ஒவ்வொரு மகனிடமும் இருக்க வேண்டும்.

ஆகவே தான் இதனை இங்கு முழுமையாகத் தந்தோம் மேற் கூறிய வரலாற்றை இதில் கண்டு தெளிந்திருப்பீர்கள். இதனை நான் ஒரு கட்டுரையில் வெளியிட்ட போது இது எங்கிருந்து கிடைக்கப் பெற்றது என்பதை அறியப் பலரும் அவாவுற்றதாக அறிந்தேன்.

ஆகவே இதன் மூலத்தை அறிந்து கொள்ள விரும்புபவர்கள் இதனை மட்டக்களப்பு மான்மியம் முதலாம், இரண்டாம் பதிப்புகளில் காணலாம். அத்துடன் இப்போது வெளிவந்திருக்கும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்னும் நூலிலும் காணக் கூடியதாக இருக்கிறது.

இதன்படி **''மட்டுமா நகரில் திருக்கோயில் சந்நிதியைக் கண்டு''** என்று வருகின்ற படியால் மட்டக்களப்பு எனும் நகரம் திருக்கோயில் வரை பரந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

**''வேண்டும் வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்''** என்று வரும் வரிகளை உற்று நோக்கற் பாலது. இதன்படி இவ்வாலயத்திற்கு வேண்டுமட்டும் வயல்நிலங்களை மன்னன் கொடுத்தான் என்பதை அறியமுடிகின்றது. ஏனைய பொருட்கள் எல்லாம் அழியக் கூடியது என்றாலும் வயல் நிலங்கள் அழியக் கூடியதா?

முன்னர் இக்கோயிலை பரிபாலனம் செய்தவர்களுக்கே இது வெளிச்சம். இது போன்ற காரணங்களால் தான் ஊர் மக்கள் பரிபாலனத்தை தம்வசம் வைத்திருக்க விரும்பினார்கள் என்பது இப்போது புரிந்திருக்கும்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. ஆலய பரிபாலன வரலாறு

இனி இவ்வாலயத்தின் பரிபாலனம் பற்றிப் பார்ப்போம். தாதன் இவ்வாலயம் அமைய இருக்கும் இடம் கடலருகாகவும், ஆலமரங்கள் நிறைந்த இடமகவும், அதற்கும் அப்பால் வனமும் இருக்கும் இடமும் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தான். அதன் படி கடலருகாக வரும் போது இந்த இடம் அவன் தேவைகளை நிறைவேற்றுவதாக இருந்தது.

அதன்படி பாண்டுறுப்புமுனை (இப்போதைய பாண்டிருப்பு) என்னுமிடத்தில் ஆலயத்தை அமைத்தான் என்ற உண்மை பெறப்படுகின்றது. இதன் படி பார்க்கும் போது பாண்டுறுப்புமுனையில் யாரும் குடியிருந்திருக்கவில்லை என்பதும் புலனாகிறது.

**அதனால் கல்வெட்டின்படி...**

**''பத்ததி போற் காட்டிப் பணிக்கன் குலத்தோர்க்கு
உற்ற புகழ்மேவ உங்களுக்கே முன்னீடு
ஈந்தேனிலங்கை எங்குமுயர்ந்தோங்க''**

என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இதன்படி இதன் நிர்வாகம் நாப்புட்டிமுனைக்குச் சென்றிருக்க வேண்டும். இப்போதைய நற்பிட்டிமுனையின் ஒரு பகுதி கூட வனமாகத் தான் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் தாதன் கேட்ட வனப் பகுதி இது தான். இங்கு தான் வனவாசம் அன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. இதனை அடுத்து கிராமம் இருந்திருக்க வேண்டும்.

இக்கிராமத்தில் **ஊ்ராக** இருந்த பகுதியிலே **''வன்னிமை''** என்பவர்கள் குடியிருந்திருக்கிறார்கள். வன்னிமை என்பது நீர்ப்பரிபாலன உத்தியோகத்தர்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

ஆகவே ஆலய பரிபாலனமும் அவர்கள் கைக்குச் சென்றிருக்கிறது. அவர்களும் பணிக்கர் குலத்தவராகவே இருந்திருக்கிறார்கள் என்பது தொடர்ந்து வரும் இப்பதவிகள் பணிகொணா குடியிடமே இருந்து வருவதனால் அறிய முடிகின்றது.

இன்னும் இவ்வாலயத்தின் பரிபாலனம் பணிக்கொணா குடித் தலைமையில் இருப்பதும், இக் குடியே பெரும் குடியாக இருப்பதனால் இக்குடிக்கு ஆலய பரிபாலனத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதும் கூடிய **''முகாமைக்காரர்கள்''** இருப்பதையும் அறிய முடிகிறது. அதாவது தலைமைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முகாமையும், ஊரிலுள்ள பணிக்கொணா குடிக்கு இரண்டு முகாமைகளும் இருக்கின்றனர்.

பணிக்கொணா குடி தலைமைக்கு ஒரு பூசையும், ஊரிலுள்ள பணிக்கொணா குடியினருக்கு சிறப்பான ''கல்யாணக்கால் வெட்டும்'' பூசையும் இருக்கின்றது. இதனை முகாமைகள் இருவரும் மாறி மாறி ஆளுக்கு ஒரு வருடம் செய்வர். இப்போது பணிக்கொணா குடி முகாமையாக இருப்பவர்கள் திரு. ம. கேதீஸ்வரன் என்பவரும் திரு. வ. புஷ்பராசா என்பவருமாவார்கள்.

அவர்களிடம் தலைமைப் பதவி செயலாளர் பதவி என்பன இருக்க நிர்வாக உறுப்பினர்கள் என்னும் **''முகாமை''** என்போர் பிற்காலத்தில் பாண்டிருப்பிலே இருந்திருக்கின்றனர். பொருளாளர் பதவியும் பாண்டிருப்பிலே அமைந்திருந்தது. களங்கமற்ற கையுடைய கிராம விதானையார் அமரர் தியாகராஜா என்பவர் நீண்ட காலமாக பொருளாளராக இருந்திருக்கிறார்.

இதன்படி முகாமைகள் பின்வரும் குடிகளிடமிருந்தும் சமூகங்களிடமிருந்தும் ஆளுக்கொருவர் தெரிவு செய்யப்படுவர். ஆனால் பணிக்கொணா குடிக்கு மூன்று முகாமைகள் அவர்களது இனப் பெருக்கத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று கருத இடமுண்டு.

**இந்த ஆலய பரிபாலனத்தில் பங்கு பற்றும் குடிகள் சாகியங்களின் விபரம் வருமாறு:**

01. வீரச்சோலை வேளாளர் குடி
02. பெத்தான் குடி
03. பணிக்கொணா குடி
04. மூங்கில்சோலை வேளாளர் குடி
05. சருவிலி குடி (வேளாளர்)
06. படையாண்ட குடி
07. மழுவரசன் குடி
08. சின்னமடவர் குடி
09. சங்கரப்பத்தான் குடி
10. வெள்ளரசர் குடி
11. மொட்டைச் செட்டி வேளாளர் குடி
12. நாவிதர் சமூகம்
13. சாண்டார் சமூகம் (சான்றார்)
14. வண்ணார் சமூகம்
15. தட்டார் சமூகம் (பொற்கொல்லர் என்றும் அழைப்பர்)

இவர்கள் விஸ்வப்பிரம்ம குலம் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

நான் குறிப்பிடுவது மட்டக்களப்பு மான்மியம் பக்கம் 97 இல் குலவிருதுகள் கல்வெட்டிலும் 108 ஆம் பக்கம் குடி முறைகள் வகுத்த படியும் இருக்கின்ற பெயரின் படியாகும். மற்றும்படி எவரின் மனமும் புண்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களில் இருந்து ஒவ்வொருவரும் பணிக்கொணா குடியில் இருந்து மூவருமாக முகாமைகள் தெரிவு செய்யப்படுகின்றனர். ஆலய நிர்வாகத்தினருடன் சேர்ந்து அவர்களும் பரிபாலனம் செய்கின்றனர்.

இதைவிட வேறு பல கோவில்களில் இன்னும் பல குடிகள் வழங்கி வருவதைக் காணலாம். இக்குடிகள் ஆலயமும் அதனைச் சூழ இருந்த மக்களையும் கொண்டே வகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே இதிலிருந்து புலனாகிறது. அவ்வாறே ஊரில் மக்கள் குடியமர்த்தப்பட்டனர் என்பதை முன்னர் பார்த்தோம். அவற்றை விபரமாக குடிகளின் வரலாறு என்னும் பகுதியில் பார்ப்போம்.

நிர்வாகத்துக்காக முகாமைகள் தெரிவு செய்யப்பட்ட போதும், அவர்கள் ஒத்துழைத்த போதும், அதிகாரம் அனைத்தும் அவர்களிடம் இருப்பதனால் அவர்கள் தங்களிஷ்டம் போல் நிதியைக் கையாள்வதினால் ஊர் மக்களுக்கும் அவர்களுக்கும் காலங்காலமாகப் பிரச்சினை நடந்து கொண்டே வந்திருக்கிறனது. இதனால் நிர்வாகத்தைத் தாம் கைப்பற்ற வேண்டும் என்று ஊர் மக்கள் கேட்பது இயல்பே. இதன் விபரத்தை வழக்காடல் பகுதியில் பார்ப்போம்.

இந்த ஆலய நிர்வாகத்துக்கு உறுப்பினர் தெரிவு, இப்போது இருக்கும் உறுப்பினரின் மருமகனுக்கு உரித்தாக இருக்கிறது. இவ்வாறு மருமகன் ஒருத்தன் இல்லாத போது மாற்று வழி ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டி ஏற்படும்.

(இதன் விபரத்தை கீழே மருமக்கள் மான்மியம் என்ற பகுதியில் காண்க)

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. ஆலய வழிபாடும் பூசைகளும்

ஆலய வழிபாடுகளையும் பூசைகளையும் பற்றி இனிப் பார்ப்போம். இது அம்மன் ஆலயமாகும். அம்மன் ஆலயங்களில் வழிபாடுகள் பறை மேளத்துடனேயே நடைபெறுவது வழக்கமாகும். இது ஆண்டாண்டு காலமாக இந்த வழமையில் நடைபெற்று வருகின்றன. அதன் படியே ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்திலும் நடைபெறுகின்றது.

இதையும் மீறி தம் பூசைகளுக்கு மேளதாளம் எடுக்க விரும்புபவர்கள் மேலதிகமாக இதையும் எடுத்துச் சிறப்பிக்கின்றனர். பறை மேளம் பாவிப்பதற்கு காரணம் இங்கு கட்டுக்கு நிற்கும் 'தேவாதி' எனப்படுவோருக்கு உருவேற இந்த மேளச் சத்தம் அவசியம் எனக் கூறுகின்றனர்.

இந்தக் கோவிலில் அனைத்தும் மகாபாரதக் கதைப்படியே நடைபெறகின்றன. இந்த நிகழ்ச்சிகள் இங்கு நடித்துக் காண்பிக்கப்படுகின்றன என்றால் மிகையாகாது. அதில் தாதன் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அம்சங்கள் இங்கு முக்கியமாக நடித்துக் காட்டப்படும். இதில் முதலாவது அம்சம் ஆலயத்தில் கட்டுக்கு நிற்பவர்கள்:

இதில் ஐவர் ஐந்து பேர் அல்லது பஞ்சபாண்டவர்கள் எனப்படுபவர்களான, தருமர், வீமர், அருச்சுனர், நகுலன், சகாதேவன் உடன் திரௌபதியும் கிருஷ்ணரும் இருக்க மேலும் பல உதவியாளர்களும் கூடவே கட்டுக்கு நிற்பர்.

இந்த ஆலயத்தில் நடைபெறும் திருவிழா மகாபாரப் போர் நடந்த பதினெட்டு நாட்களைக் குறிக்கும் வண்ணம் பதினெட்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது.

இங்கு மூன்றாம் நாளிலிருந்து உற்சவம் முடியுமட்டும் மகாபாரதக் கதை படிக்கப்பட்டு பயன் சொல்லும் வழக்கம் ஆதியிலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு **வில்லி** பாரதமே படிக்கப்பட்டு பயன் சொல்லப்படுகின்றது. அதைவிட தாதன் கொண்டு வந்த பாரத ஏட்டுப் பிரதி இன்னும் இந்த ஆலயத்தில் இருக்கிறது.

இனி இந்த ஆலயத்தில் எந்தெந்தப் பூசைகள் எந்தெந்த குடிகளுக்குக் கொடுபட்டிருக்கின்றன என்று பார்ப்போம். ஏனெனில் இங்கு பூசைகள் குடிவழிமுறையின் படியே நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1 ஆம் நாள் | செவ்வாய் | கடல் குளிப்பு கொடியேற்றம் |
| 2 ஆம் நாள் | புதன் | ஆலயப் பூசை |
| 3 ஆம் நாள் | வியாழன் | வீரச்சோலை வேளாளர்குடி |
| 4 ஆம் நாள் | வெள்ளி | பெத்தான் குடி |
| 5 ஆம் நாள் | சனி | (தலைவர்) பணிக்கொணா குடி |
| 6 ஆம் நாள் | ஞாயிறு | வெள்ளரசன் குடி |
| 7 ஆம் நாள் | திங்கள் | மூங்கில்சோலை வேளாளர் குடி |
| 8 ஆம் நாள் | திங்கள் | இரவுசுவாமி எழுந்தருளல் |
| | செவ்வாய் | சருவிளி குடி |
| 9 ஆம் நாள் | புதன் | படையாண்ட குடி |
| 10 ஆம் நாள் | வியாழன் | மழுவரசன் குடி |
| 11 ஆம் நாள் | வெள்ளி | சின்னமடவன் குடி |
| 12 ஆம் நாள் | சனி | சங்கரப்பத்தான் குடி |
| 13 ஆம் நாள் | சனி இரவு | கல்யாணக் கால் வெட்டுதல் |
| | ஞாயிறு | பணிக்கொணா குடி |
| 14 ஆம் நாள் | திங்கள் | மொட்டைச் செட்டி வேளாளர் குடி<br>தோரணப் பூசை |
| 15 ஆம் நாள் | செவ்வாய் | நாவிதர் சமூகம் (முல்லைக்காரன்)<br>சோடனை |
| 16 ஆம் நாள் | புதன் | சாண்டார் சமூகம் (சான்றார்)<br>வனவாசப் பூசை |
| 17 ஆம் நாள் | வியாழன் | வண்ணார் சமூகம் (தண்டக்காரன்) |
| 18 ஆம் நாள் | வியாழன் இரவு | தவநிலை செல்லல் |
| | வெள்ளி | அதிகாலை தீக்குழி மூட்டல் |
| | | தட்டார் சமூகம் (விஷ்வப்பிரம்மகுலம்) |
| 18ஆம் நாள் | வெள்ளி | (மாலை) பொதுப் பூசை தீப்பாய்தல் |

அடுத்த நாள் சனி பொதுமக்கள் பொங்கலும் பால் பள்ளயமும் இரவு சுவாமி மீண்டும் ஸ்ரீ மா.பி. ஆலயம் செல்லுதல் (இளைஞர் பூசை) இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பூசை ஒழுங்குமுறை ஆலயத் தலைவர் திரு. நா. இராஜேந்திரன் அவர்களிடம் இருந்து பெறப்பட்டதாகும். இவ்வாறு தான் இவ்வாலய பூசைகள் குடிகளுக்கும் சமூகங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஒழுங்குகள் தவறாமல் இதுவரை உற்சவ காலங்களில் பூசைகள் நடைபெற்று வருகின்றன. குடிகள் பற்றிய மேலும் விபரங்களை வேறோரிடத்தில் பார்ப்போம்.

## முக்கிய பூசைகள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்:

## முதலாம் நாள்: கொடியேற்றம்

**'கொடியேற்றம்'** என்னும் நிகழ்ச்சி இன்றைய தினம் நடைபெறும் இவ்வாலயத்தின் கொடியேற்றம் புரட்டாதி மாதம் அமவாசைக்கு அடுத்தாக வருகின்ற செவ்வாய்க் கிழமை நடைபெறும் இன்றைய நிகழ்வாக **ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பூசைக்கு உரிய பொருட்களையும் வழிபாட்டுக்குரிய சிலைகளையும் எடுத்துக் கொண்டு ஊரின் வடபகுதியைச் சுற்றிக் கொண்டு கடலுக்குச் சென்று அவற்றைக் கடலில் கழுவிக் கொண்டும், கடல் குளித்துக் கொண்டும் ஆலயத்துக்கு வருவார்கள். வரும் போது நடு இரவாகி விடும். அதன் பின்னர் தான் கோவில் கொடியேற்றம் இடம் பெறும். அது தான் முதல் நாள் நிகழ்வு.**

இந்த முதல் நாளிலிருந்து ஏழாம் நாள் வரை அதிகமாக ஐவர் ஐந்து பேரும் திரௌபதிக்கு நிற்பவரும் கிருஷ்ணரும் மட்டுமே கட்டுக்கு நிற்பர். இவர்களுடன் மூன்று பூசாரிமார்களும் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் தீட்சை பெற்றிருத்தல் அவசியமாகும்.

**''கட்டுக்கு நிற்றல்''** என்னுஞ் சொல் இங்கு அடிக்கடி பாவிக்கப்படும் ஒரு சொல்லாக இருக்கிறது. ஆகவே இது பற்றிய விளக்கத்தை அறிந்திருத்தல் நலமென நினைக்கிறேன். விரதம் இருப்பவர்கள் அனைவரும் அம்மனின் மூலஸ்தானத்துக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் நிற்பர்.

அப்போது பல நிகழ்வுகள் அங்கே நடைபெறும். அவர்கள் கோவிலுக்கு வந்து நின்ற பின்னர் தங்கள் வீடுகளுக்குச் சொல்லக் கூடாது என்பது விதி. இதற்காக அவர்களுக்கு மஞ்சள் நூல் போடப்படும். ஆலயத்தில் பூசை ஆரம்பமாக முன்னர் கையில் கட்டப் பட்டிருக்கும் நூலுக்கு பூ வைக்கப்படும்.

அதனை அடுத்து அவரவர் ஆயுதங்கள் கொடுக்கப்படும். இதன் பின்னர் கமுகம் பாளை அந்த ஆயுதங்களுடன் வைத்துப் பிடித்திருப்பதற்காகக் கொடுக்கப்படும். வைஷ்ணவ முறைப்படி நாமம் சூட்டப்படும். இவ்வாறு இவர்கள் நிற்பதைத் தான் கட்டுக்கு நிற்றல் எனப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரம்

இங்கு நாமமிட பாவிக்கப்படுவது "பண்டாரம்" எனப்படும். இது சில மூலிகைகளுடன் மஞ்சளும் சேர்ந்து இடித்து எடுக்கப் படுவதாகும். இது இந்த ஆலயத்தில் மட்டுமே கொடுக்கப்படுகிறது. இது நோய் நிவாரணி என்றும் அறியப்படுகின்றது. பண்டாரம் செய்ய பாவிக்கும் மூலிகைகள் மூடு மந்திரமாக இருக்கின்றது.

தேவாதிகள் எனப்படுவோருக்கு அவர்களுக்குரிய முறுக்குச் செம்பில் வேப்பிலை வைத்துக் கொடுக்கப்படும். அதன் பின்னர் கிலுக்குவதற்கு சல்லாரி சிலம்பு ஆகியன அங்கு நிற்கும் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும். பின்னர் பூசாரிமார் சுற்றுப் பாடலைப் பாடுவர். முதலாம் பூசாரியார் பாட இரண்டாம் பூசாரியர் கூடப் பாடுவார். அதனையடுத்து கோவில் வலம் வருதல் நடைபெறும். அப்போது பாடப் படும் பாடலை இங்கே (பூசாரிமாரின் வேண்டுகோளின்படி) தரமுடியாமைக்கு வருந்துகிறேன்.

ஒரு நாள் பூசை என்பது ஒரு குடிக்கு உரியது. ஆனால் அது காலைப் பூசையையும் மாலைப் பூசையையும் சேர்த்ததாகும். சில விசேச பூசைகள் மாலைப் பூசை முடிந்ததும் இரவுப் பூசையாக இடம் பெறும் அப்போது அது அடுத்த நாள் பூசைக்காரருக்கு உரியதாக வந்து விடுகிறது. உதாரணமாக சுவாமி எழுந்தருளலையும் கல்யாணக்கால் வெட்டுதலையும் குறிப்பிடலாம்.

பூசைப் பொருட்களை முதல் நாள் மாலைப் பூசை முடிந்ததும் கொண்டு வரவேண்டும். அப்போது கோவில் பறை மேளத்தை பூசைக்காரர் எடுத்துக் கொண்டு சென்று அதனுடன் பூசைப் பொருட்களைக் கொண்டு வருவது வழக்கமாகும். அதனிலும் சற்று வித்தியாசமாக சிலர் ஒலிபெருக்கி வெடி வானம் ஆகியவற்றுடன் கொண்டு வருவார்கள். சிலர் மேள தாளங்களுடனும் கொண்டு வருவார்கள்.

## இரண்டாம் நாள்: ஆலய பூசையாகும்

மூன்றாம் நாள் மகாபாரதம் படிக்கும் ஏடு தொடங்கும் நிகழ்ச்சி ஆரம்பமாகும். இது திரௌபதியாக நிற்பவரினால் பழைய ஏடு அவிழ்க்கப் பட்டு முதல் இரண்டு பாடல்கள் பாடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்படும். இந்தப் பாடலைக் கீழே காணலாம்.

அதன் பின்னர் பாரதம் படித்துப் பயன் சொல்பவர்கள். தொடர்ந்து தினசரி படித்துப் பயன் சொல்வார்கள். பதினெட்டு நாட்களில் மகாபாரதத்தை படித்துப் பயன் சொல்லி முடிப்பார்கள். இதற்கென ஒரு பாரம்பரியம் அன்று தொட்டு இன்று வரை தொடர்ந்து வருகின்றது.

முன்னர் வெளியூரில் இருந்தெல்லாம் பாடகர்கள் வருவதுண்டு. இப்போது உள்ளூரில் உள்ளவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருப்பதால் ஊரிலேயே பாரதம் படிக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தலைமை தாங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை சிவஸ்ரீ மா.கு. கணேசதுரைக் குருக்கள் போன்றோர் ஏற்று நடத்தி வருகின்றனர்.

**திரௌபதி தினசரி பூசைகள் முடிந்ததும் படிக்கும் இரண்டு பாடல்களும் இதோ:**

நீடாழி யுலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக
வங்கூரெ முத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ!

அடுத்தது:

முருகார்ம லர்த்தாம முடியோனை
யடியார்மு யற்சித் திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை
வதனச்செ முங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து
முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கைதொ
ழுங்கோவை யுறவுன்னுவாம்!

தினசரி பூசை முடிந்ததும் விரதத்தை முடிக்கு முன்னர் இந்த இரண்டு பாடல்களும் பாடித்தான் விரதம் முடிக்கப்படும். அதன் பின்னர் தீர்த்தம் அருந்தி அவர்கள் உணவருந்த ஆரம்பிப்பார்கள்.

அவர் பாடும் அந்த இரண்டு பாடல்களையுமே மேலே தந்திருக்கிறேன்.

**மடிப்பிச்சை**

இதன் பின்னர் உணவருந்த ஆரம்பிப்பார்கள் என்று கூறியிருந்தாலும் அது அவ்வளவு இலேசானது அல்ல. உணவுக்காக உட்கார்ந்ததும், மடிப்பிச்சை ஏந்தி வருபவர்கள் தொடராக வந்து கொண்டிருப்பார்கள். அரை மணித்தியாலத்துக்கு அவர்களுக்குப் பரிமாறப்படும் உணவு அவ்வளவும் மடிப்பிச்சை ஏந்தி வருபவர்களுக்கு கொடுக்கப்படும்.

அவர்கள் அனைவருக்கும் கொடுபட்டுவிட்டதா என்பதைப் பார்த்ததும் தான் அவர்கள் உணவருந்த ஆரம்பிப்பார்கள். நாடிழந்து அரசிழந்து வனம் வந்தாலும் தம்மை நாடி வருவோருக்கு ஈயும் பழக்கம் மட்டும் அவர்களுக்கு குறையவில்லை, என்பதை வனவாசத்தின் போதும் காட்டுவாசிகளுக்கு உணவளித்த பின்னரே அவர்கள் உண்டார்கள் என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தாம் நாள்:** தலைவராக இருக்கும் பணிக்கொணா குடியின் பூசை. இது சத்தமில்லாமலே நடந்து முடிந்து விடும்

**ஏழாம் நாள்: சுவாமி எழுந்தருளல்**

இதன் பின்னர் இடம் பெறும் நிகழ்வு சுவாமி எழுந்தருளல் நிகழ்ச்சியாகும். ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவிலிலே வருடம் முழுவதும் இருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் உற்சவத்துக்காக ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயத்துக்கு எழுந்தருளும் நிகழ்வு ஆகும். இது ஏழாம் நாள் நடைபெறும். முத்துச் சப்பிறத்திலே ஸ்ரீகிருஷ்ண பகவான் எழுந்தருள்வார்.

சுவாமி எழுந்தருள்வது பற்றிக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு. ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் பாண்டிருப்பில் கட்டுவதற்கு முன்னரே ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானும் ஏனைய விக்கிரகங்களும் பெரிய நீலாவணையில் உள்ள விஷ்ணு கோவிலிலே வைக்கப்பட்டிருந்தது என்றும், அப்போது சுவாமி எழுந்தருளல் நிகழ்ச்சி அங்கிருந்தே நடந்ததும் என்பதாகும். இந்த விக்கிரகங்கள் அனைத்தும் தாதன் கொண்டு வந்ததென்பர்.

அதுமட்டுமின்றி தாதன் அங்கிருந்த ஆலமரமொன்றில் தூங்கி இறந்ததாகவும் அந்த ஆலமரம் தாதன் தூங்கிய ஆலமரம் என்ற பெயரினால் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இது எந்தளவுக்கு உண்மை என்பதை அறியக் கூடியளவுக்கு முதுமையடைந்தவர்களைக் காணமுடியவில்லை.

**எட்டாம் நாள்: நாள் கால் வெட்டுதல் நிகழ்வு**

இதனை அடுத்து இடம் பெறும் நிகழ்ச்சி நாள் கால் வெட்டுவதாகும். முன்னர் நாள்கால் வெட்டிய இடம் மக்கள் பெருக்கத்தின் காரணமாக மாற்றமடைந்து வைரமுத்து வீமர் காலத்தில் தன் சித்தப்பா மகனான அழகையா வீமர் என்பவருக்கு சொந்தமான காணியில் **நாள் கால்** வெட்டப்பட்டு வந்தது.

தம்பி அழகையாவுக்கு வீமர் பதவி வந்ததன் பின்னர், அடுத்து அழகையா வீமர் மகன் கந்தசாமிக்கும் (ராஜன்) அதன் பின்னர் இப்போது திரு. லோகிதராஜா வீமர் தன் தந்தைக்குப் பின் இருந்து இடம் மாறாமல் வீமர் வீதி என்னும் வீதியிலுள்ள இடத்தில் நான்கு தலை முறையாக **நாள் கால்** வெட்டும் நிகழ்ச்சி சிறந்த உற்சவமாக நடைபெற்று வருகிறது.

நாள் கால் வெட்டிய பின்னரே தீக்குளிக்கு விறகு வெட்டக் காட்டுக்குப் புறப்படுவர். இவை இப்போது மாற்றம் பெற்றிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரெண்டாம் நாள்: கல்யாணக் கால் வெட்டுதல்

இது பணிகொணா குடிப் பூசை. எதிலும் சிறப்பாக அமைவது கால்யானக்கால் பூசைதான். பூசைக்காரர்கள் சோடித்த பூம்பந்தலுக்குள் பூசைப் பொருட்களையும் ஒலிபெருக்கிகள் முத்துச் சப்புறம் மற்றும் வேடிக்கை வினோத விளையாட்டுக்களுடன், பெரும் வெடியோசைகளுடனும் ஆலயத்துக்கு வருவார்கள். இதற்குக் காரணம் இந்த அலங்காரங்களுடனும் வெடி வினோத விளையாட்டுக்களுடனும் தான் ஆலயத்திலிருந்து கட்டுக்கு நிற்பவர்களை கல்யாணக் கால் வெட்டும் இடத்துக்கு அழைத்துச் சென்று கல்யாணக்கால் வெட்டிய பின்னர் அவர்களை மீண்டும் ஆலயத்துக்கு அழைத்து வருவார்கள்.

இந்தக் கல்யாணக் கால் வெட்டும் நிகழ்வு பரம்பரையாக ஊரின் எல்லையில் இருக்கும் ஒரு வளவில் இருந்தே தொடர்ந்து வெட்டப்பட்டு வருகின்றது. இது தான் ஆலயத்தில் இடம் பெறும் மிகச் சிறந்த நிகழ்ச்சியாக இருக்கும்.

இதில் பெருமளவான வெடி வானவேடிக்கை என்பவும் இடம் பெறும். அதுமட்டுமன்றி அன்று வெட்டி வரும் கல்யாணக் காலை அன்று இரவோடிரவாக சோடிப்பார்கள். அதுவும் ஆலயத்துக்கு ஒரு மங்களத்தை தருவதாக இருக்கும்.

இந்தப் பூசை ஊரிலுள்ள பணிகொணா குடியாரின் இரண்டு வயித்துவாருக்கு (வம்சம்) ஆளுக்கு ஒரு வருடம் எனப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். இதை வான வேடிக்கை பலவிதமான சோடனை, சப்புறங்கள், வெடிகளுடன் கொண்டாடுவதை ஒரு சிலர் விரும்புவதில்லை என்பதையும் அவர்களுடைய பேச்சிலிருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. இது பணிகொணா குடியாருடைய சிறப்பம்சம். அதனை அவர்கள் கைவிடுவார்களா?

## பதினாலாம் நாள்: தோரணப் பூசை

தோரணப் பூசை இடம் பெறும் போது அவர்கள் வரவும் சிறப்பாக இருக்கும் காரணம் அவர்கள் தாங்கள் சோடிக்க இருக்கும் தோரணங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு ஒலிபெருக்கி வெடி சகிதம் ஊர்வலமாக ஆலயத்தை நோக்கி வருவார்கள்.

**பதினைந்தாம் நாள்** நடைபெறும் நிகழ்வு ஆலயங்களை அழகுறச் சோடிக்கும் நிழ்வாகும். இவர்களும் வெடி வான வேடிக்கைகளுடன் ஆலயத்துக்கு பூசைப் பொருட்களை எடுத்து வருவார்கள்.

## பதினாறாம் நாள்: வனவாசம்

வனவாசம் இடம் பெறும். இது மகாபாரதக் கதையில் வரும் ஒரு முக்கிய நிகழ்வாகும். இதனை தத்ரூபமாக நடித்துக் காட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நாளும் கட்டுக்கு நின்றது போலல்லாது விசேட உடையணிந்து வனவாசம் புறப்படுவர். பிரதான வீதியில் இருந்து கோயிலுக்கு செல்லும் வீதி சந்திக்கும் இடம் இப்போதும் **''வாள்மாத்தும்''** சந்தி என்றே அழைக்கப்படும். காரணம் வனவாசத்தன்று இங்கு நடைபெறும் நிகழ்ச்சியாகும். உடம்பெங்கும் மஞ்சள் பூசியிருக்கும் பீமர் அந்தச் சந்தியில் வைத்துத் தான் தருமரிடம் இருந்து வாளைப் பெற்றுக் கொள்வார். வாளைப் பெற்றுக் கொண்டதும் அவர் ஓட்டத்திலே இருப்பார். அதாவது வனவாசத்தில் இருக்கும் காலத்தில் அவர்களுக்கு உணவு தேடிக் கொடுக்கும் பொறுப்பு வாளைக் கைமாற்றிக் கொடுப்பதுடன் பீமரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இந்த ஊர்வலம் ஆலயத்திலிருந்து தெற்கே செல்லும். இதில் பெரும் தொகையான மக்கள் பங்கு கொள்வர். இது இராமர் வனம் சென்ற போது அயோத்தி மக்களும் கூடச் சென்ற காட்சியை ஒத்து இருக்கும். யுத்தம் ஓய்ந்த பின்னர் இப்போது பல்லாயிரக் கணக்கில் மக்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதன் போது பெருமளவிலான காவடி ஆட்கள் கூடவே செல்வர். இது முள்ளுக் காவடி என்று அழைக்கப்படும். முதுகிலே முள்ளுக் குத்திப் பின்னால் ஒருவர் பிடித்து இழுத்துக் கொண்டிருப்பார். கூட வருபவர்கள் காவடிச் சிந்து பாடிக்கொண்டு வருவார்கள்.

அத்துடன் தீச்சட்டி எடுப்பவர்கள் நிறையப் பேர் அவர்கள் கூடவே செல்வர். அவர்கள் தங்கள் நேர்த்தியை நிறைவேற்றுவதாக இருக்கும். ஆனாலும், இதன் பயன் அவர்கள் இருட்டிலே திரும்பி வரும் போது வெளிச்சத்தைக் கொடுப்பதாகவும் இருக்கும்.

அவர்கள் புறப்பட்டதும் முதல் சந்திக்கும் ஆலயம் அரசடி அம்பாள் ஆலயமாகும். அங்கிருந்து பீமர் இலை குழைகளைப் பிடுங்கிக் கொடுத்து விட்டு ஓடுவார். ஆலய தரிசனத்தின் பின்னர் ஊர்வலம் தொடர்ந்து கிட்டங்கி வீதியில் இருக்கும் அம்பலத்தடிப் பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடையும். அங்கு இளைப்பாறி வெத்திலை பாக்கு அருந்திய பின்னர் மீண்டும் பயணம் தொடரும். ஆனால் இவர்களை முந்தி பீமர் ஓடிச் சென்று வாழைக் குலைகளை பலாக் காய்களை மாங்காய்களை வெட்டிப் போட்டுக் கொண்டே இருப்பார்.

இவற்றை கூட ஓடிச் செல்லும் சிறுவர்களும் வீட்டு உரிமையாளர்களும் எடுத்து வந்து ஆலயத்தில் ஒப்படைப்பர். பாண்டிருப்பை ஊர்வலம் வந்து சேருமுன்னர் பீமர் பாண்டிருப்பிலுள்ள வீடுகளுக்குச் சென்று வாழைக் குலைகளை வெட்டி வருவார்.

இதனை அடுத்து கிட்டங்கி வீதியில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் இளைப்பாறி இரவு உணவருந்துவார்கள். அவர்கள் கட்டி வந்திருக்கும் உணவை அனைவருக்கும் பகிர்ந்து உண்ட பின்னர் இரவாகியதும் மீண்டும் எல்லையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைக்குடியிருப்பில் இருக்கும் காளி கோவிலுக்குப் புறப்படுவர். இங்கே தேவாதிகள் எனப்படுவோர் உருவேறி ஆடுவார்கள்.

இந்த நிகழ்ச்சி முடிந்த பின்னர் இப்போது ஊர்வலம் ஆலயத்தை நோக்கி பாண்டிருப்பு மேற்கு எல்லையூடாக வரும். வரும் போது துரியோதனின் பூமி என்று சொல்லப்படும் இடத்தில் மௌனமாக வருவார்கள். மேளமும் அடிக்கப்படமாட்டாது. பெரிய குளக்கட்டு எல்லைக்கு வரும் போது வனவாசம் போய் வரும் மக்களுக்கு தாகசாந்தி செய்வதற்காக கிடாரம் என்னும் பானைகளில் பலர் தீர்தங்களைக் கரைத்து வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள்.

அவற்றில் தாகசாந்தி செய்த பின்னர், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தரிசனம் பெற்ற பின்னர், அம்மன் ஆலயத்தைச் சென்றடைவார்கள். இவர்கள் கூடவே காவடிகளும் தீச்சட்டிகளும் வந்து சேரும். அன்று இரவு ஆலயத்தில் அன்னதானமும் (ஐவர் ஐந்து பேரினால்) மடத்தில் இடம்பெறும்.

வாள் மாற்றும் சந்தியில் வைத்து தருமரிடம் இருந்து பெற்ற வாளை ஆலயத்துக்கு வந்ததும் மிகவும் பணிவுடன் தருமரிடம் ஒப்படைத்து அவர் காலில் விழுந்து வணங்குவார் பீமர்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. தவநிலை செல்லல்

**பதினேழாம் நாள்:**

வனவாசப் பூசையை அடுத்து வியாழன் இரவு தவநிலைக்குச் செல்லல் இடம் பெறும். மகாபரத்தின் படி போரை வெல்ல வேண்டுமாயின் நீ சென்று சிவனிடம் தவம் இருந்து பாசுபதத்தைப் பெற்று வருதல் வேண்டும் என்று கண்ண பகவான் பார்த்தனிடம் கூறுவார். பார்த்தன் பாசுபதம் பெறத் தவம் இருக்கச் செல்லும் போது ஏற்படும் இடையூறுகளும், அவற்றை அருச்சுனர் வென்று பாசுபதம் பெற்று வரும் நிகழ்ச்சி இன்று இரவு நிகழ்த்திக் காட்டப்படும்.

இப்போது அருச்சுனராக இருப்பவர் அருச்சுனர் வேலுப்பிள்ளையின் பரம்பரையில் வந்துதித்த அவரது பேரன் வடிவேல் இராஜேந்திரகுமார் (குமார்) என்பவராகும். இதை இங்கு குறிப்பிடுவது பரம்பரை எவ்வாறு இவ்வாலயத்தில் நீடித்து நிலைத்து நிற்கிறது என்பதைக் காட்டத்தான்.

வியாழன் அன்று நடுநிசியில் ஆலயத்துக்குள் செல்லும் அருச்சுனர் சோடிக்கப்பட்டு உருவேற்றப் பட்டு பின்னிரவு அளவில் வெளியே வருவார். இந்தக் காட்சியைக் காண பெருமளவிலான மக்கள் ஆலய உள்வீதியில் நீக்கமற நிறைந்திருப்பார்கள்.

அருச்சுனர் செல்வதற்கான வழி மட்டுமே இருக்கும். உள் வீதி மட்டுமின்றி தவநிலையைச் சுற்றி வெளி வீதியும் சனக் கூட்டத்தினால் நிரம்பியிருக்கும்.

அவர் வீதி வலம் வரும் போது ஏலகன்னி என்னும் பெண் அவரை மறிப்பாள் (பேரண்டச்சி மறித்தல் எனவும் சொல்லப்படுகின்றது). அருச்சுனர் பெண்களைப் பொறுத்தளவில் பலவீனமானவர்.

அதனால் பெண்ணை அனுப்பி அவர் தவத்துக்கு செல்லாமல் தடுப்பதே நோக்கமாக இருக்கும். ஆனால் கொண்ட கொள்கையில் திடசங்கற்பத்தை கொண்ட அருச்சுனர் அதையும் வென்று வருவார்.

பின்னர் பன்றி ரூபத்தில் சிவனே பரீட்சித்துப் பார்ப்பார். அவரையும் வென்று பார்த்தன் முன்னேறிச் சென்று தவம் செய்யும் இடத்துக்குச் செல்வார். அதுவரை உரு ஏற்றப்பட்டு வரும் பார்த்தன் தடைகளைத் தாண்டி தவநிலைக்கு வந்ததும் உசாராக அதில் ஏறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவநிலையில் இருக்கும் பார்த்தன் சிவனை வேண்டி தவம் இருப்பார். அதன் பின்னர் பாசுபதம் வேண்டிப் பாடுவார். பாசுபதம் பெற்ற பின்னர் அவர் கீழே இறங்க அதிகாலை மூன்று மணியாகி விடும். இறங்கும் போது பழம் பலகாரங்களை போட்ட வண்ணம் இறங்குவார். அது அவரது வெற்றியைக் குறிக்கும். போருக்குத் தயார் நிலையில் வருவார் அருச்சுனர்.

**அவர் அப்போது பாடும் பாடல்களை அடுத்த அத்தியாயத்தில் தருகிறேன்:**

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. அருச்சுனர் தவநிலை செல்லலும் பாடல் பாசுபதம் பெறும் பாடல்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானை
காதலால் கூப்புவார் தம்கை!

நீடாழி யுலகத்து மறைநாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக
வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ!

முருகார்ம லர்த்தாம முடியோனை
யடியார்மு யற்சித் திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை
வதனச்செ ழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து
முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கைதொ
ழுங்கோவை யுறவுன்னுவாம்!

**அருச்சுனர் தவநிலைப் பாடல்கள்:**

அருவாகி உருவாகி அணுவினுக் கணுவாகி
மலையுமாகி ஆதியந்தமுமாகி
குருவாகி அரிய சீஷனுமாகி யிப்பெருங்
குவலயமோ டண்டமாகிஎண்ணாகியே யுயர்பு
மருவாகி எங்கும் நிறை சோதியே
எனையாள வந்தபேரின்ப வாழ்வே
மலரிலுறை திருமங்கவர்
அழகுறுஞ் சிவகுருவே! 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியுடலம் மிகவருந்தி மனமுங்
கலங்கி அறிவழிந்தேன்
வேறுகருத்துஞ் செய அயந்தேன்
வேடனெறிய அறிவழிந்தேன்
பாறுஞ் சுடரும் வெண்டலையிற்
பரிகொண் டுளரும் பரஞ்சுடரே
ஆறுஞ் சுடலை காத்தவனே
அலையா வண்ணம் அருள்வாயே! 02.

தேவர் தேவ பெருமானே
தீரா நஞ்சை உண்டவனே
ஓவாதுண்மை உரைத்த வர்தம்
உள்ளத்து றையும் உத்தமனே
மேவும் மாற்கண் டனுக்காக
விழவே நமனை யுதைத்தவனே
ஆவா என்ற டியேனை சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 03.

சாலவருந்தி அறிவழிந்தேன் தளர்ந்தேன்
உள்ளந் தடுமாறி
ஓலமிடவே அடியேனை
உணராதிருப்பது உமக்கழகோ
சீலமறிந்து திசை கெட்டு
சிந்தை கலங்கி அறிவழிந்தேன்
ஆலம் பொதிந்த கறைமிடற்றாய் சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 04.

தேவற்காக திரைகடலிற்
தீராநஞ்சை உண்டவனே
மூவற்கரிய முழுமுதலே
முத்துக்கினிய முழுமணியே
ஆவிகலங்கி அறிவழிந்தேன்
அண்ணாமலையில் அமர்ந்தவனே
ஆவிதளரமுன் அடியேனை அஞ்சலென்று சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 05.

மெய்யுங் கலங்கி அறிவழிந்தேன்
வேளந்திண்ட விளாங்கனி போல்
செய்யும் வகையொண் டறியாமல்
தியங்கி நின்றேன் சிவபரனே
கையும் அயந்து கருத்தழிந்தேன்
கண்டே அயந்தேன் கண்காணா
வையங் காத்த அரனே சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லா லெதிர்த்த வெண்பேரில்
விண்ணோர் வந்தங்கு எதிர்த்திடினும்
பொல்லா அரசர் அமர்க்களத்தில்
பொருவார் தமக்கும் புறங்காட்டேன்
மல்லார் வேடன் சிலை அளிக்க
மாயம் போன்று அறிவழிந்தேன்
அல்லார் குளல்சேர் உமைபங்கா சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 07.

தாக்கிப் பொருத வெஞ்சமரில்
தளரா நிற்கும் என்மனது
ஊக்கமிழந்து மதிகெட்டு ஒன்றும்
அறியாது உணர்வழிந்தேன்
போக்கும் மறந்து மதியழிந்தேன்
பொன்றும் படியும் ஈடழிந்தேன்
ஆக்கும் படியே சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 08.

காண்டற்கரிய கண்ணுதலே
காமனுடலைப் பொடியாக்கிக்
கொண்ட வீரங் குறையாமல்
கோலத்து றவாய் முன்னின்றாய்
தொண்டர்க்கு தவுஞ் சுந்தரனே
சூலபாணி சுடர் விளக்கே
அண்டற் கரசே சுவாமி
அலையா வண்ணம் அருள்வாயே! 09.

தொட்டவுடன் தோகை மாதர்
தொடுத்தகண் வலையிற் சிக்கித்
தெளிதரமான மாதர்
சிவஐந்தெழுத்தை ஓதப்
பாடகஞ் செய் பொற்பாதம்
பங்கயத்தமரர் காண
ஆடக மன்றுளாடும் அடியேற்குப்
பாசுபதம் அருள் செய்வாயே! 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபெருமான் சொல்லல்:**

அருளுறும் பார்த்தனேயுன்
அன்புக்கு மெச்சினேன் யான்
பொருளுறும் பாரதப்போர்
பொருது நீவெற்றி கொள்ளத்
தரப்பெறும் வரங்கள் ஈந்தேன்
தவநிலை விட்டு நீங்கிப்
பெறுவரம் பெற்றுக் கொண்டு
பேருலகாளு வீர்! 11.

**பார்த்தன் புகழ்:**

மனதுடலை மாற்றித் தனதுடலிலேற்ற
எனது பிணியாற்றித் தனது பிணியாறும்
பெருமாளே....!

**பாசுபதம் வேண்டி பார்த்தன் சொல் பதிகம்:**

தத்துவபோத ஞானசமயநூல் பலவும் கற்றேன்
பக்தியால் உன்சீர்பாதம் பரிந்துநான் தொழுதேனில்லை
முத்தியான் பெறுவதெப்போ முக்கண்ணா ஞானமூர்த்தி
அத்தனே உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே 01.

தாண்டவமூர்த்தி யுன்னைச் சரிகையால் கிரிகைதன்னால்
நீண்டதோர் யோகஞான நெறியிலே நின்றேன்இல்லை
பூண்டுன்னைத் தொழுவதெப்போ உன்பொற்பாதம்
பெறுவதெப்போ
ஆண்டருள் உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே 02.

திருத்திய கொன்றை தும்பை திங்களோடரவு தானும்
பொருந்தவே சடையில்வைத்த
புனிதனேனின் பொற்பாதம் பரிந்து நான்செய்த
தோஷம் பலவினை தொலைவதெப்போ
அருள்தரும் உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதாய் நான்செய்த பாவம் செப்பிடில் எண்ணலாமோ
நீதியாயுன்னைப் போற்றி நெறியிலே நிண்டேனில்லை
ஒப்பிலா உன்பொற்பாதம் உறுதியாய் பெறுவதெப்போ
ஆதியே உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே O4.

துலைவற்ற நெஞ்சத்துள்ளே துக்கமாங் கவலையாலே
நிலைவுற்று உன்னைப்
போற்றிநெறியிலே நிண்டேனில்லை
புலையுற்ற நாயேனுந்தன் பொற்பாதம் பெறுவதெப்போ
அலைவற்ற உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே O5.

தூக்கிய பாதந்தன்னைத் தோத்திரம் பலவுஞ்செய்து
வாக்கினால் வணங்காவண்ணம்
மலர்ப்பதம் பெறுவதெப்போ நோக்கி
அன்பற்கெல்லாம் நோக்கினால் எந்தன்
உண்மை ஆக்கிடும் உமையாள் பங்கா
அடியேற்குப் பாசுபதம் அருள்செய்வாயே O6.

தெண்டிசை நஞ்சையுண்ட தோர்தேவா உன்றன்
முண்டகத் திருத்தாள் போற்றிமுத்தி யான்பெறுவ
தெப்போ பண்டு நான்செய்த தோஷம்பலவினை
தெலைவதெப்போ ஆண்டருள்
உமையாள் பங்கா அடியேற்குப்
பாசுபதம் அருள்செய்வாயே O7.

தேரணியுடையனும் வீதி திருவருள் உகந்தமேனி
ஆரணிநரியைப் பரியா வெண்டரிய
தோர் தம்பிரானே சீரணியுன் பொற்பாதஞ்
சிக்கெனச் சிவசிவாயம் ஆரணிமன்றுளாடும்
உமையாள் பங்கா அடியேற்குப்
பாசுபதம் அருள்செய்வாயே O8.

தையலர் கங்கை தன்னைச் சடைதனில் அடைத்து
வைத்து மெய்யிலே நீறும்பூசி மிக்கவைந்
தெழுத்தை ஓதி உய்யநானி ருந்தேனில்லை
உன்பொற்பாதம் பெறுவதெப்போ
ஐயனே உமையாள் பங்கா அடியேற்குப்
பாசுபதம் அருள்செய்வாயே O9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உமையாள் சொல்லல்:**

எண்டவன் ஓதுஞ் சத்தம் உமையாள் கேட்டு
கண்டிடக் கறைமிடற்றோன் கழலினைப்
பணிந்து போற்றி பொற்றிடாத்
தம்பிரானே பூமியில் வீழாவண்ணம்
எண்டுதான் வேண்டி நின்றாள்
ஏந்திளை உமையாள்தானே! 01.

**சிவன் சொல்லல்:**

சங்கரன் அறிந்து கோபத்தையலார் முகத்தை
நோக்கி முன்புறத்தழகுங் கண்டோம்
பின்புறங் காண்போமென்ன கங்கையை
அழைத்து ஈசன்கீழ் முனியழியா வண்ணம்
பொங்கிய விசயன் தன்னைப்
பொய்கையில் வீழ்த்திட்டாரே 02.

**பார்த்தன் சொல்லல்:**

பொய்கையில்விழுந்து பார்த்தன் புலம்பி அங்கேது
சொல்வான்: ஐயனே பரனே யான்செய்த
அருந்தவம் முற்றுப்பெற்றேன்
மெய்யனே சிறியேன் செய்தமிகப்
பிழைபொறுத்து உந்தன் செய்யபொற்பாதம்
தந்தென் சென்னிசேத் தருள்செய்வாயே! 03.

**(பாசுபதம் பதிகம் முற்றும்)**

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09. அரவானைபப் பலி கொடுத்தல்

அருச்சுனர் பாசுபதம் பெற்று வந்த பின்னர் போருக்கு அனைத்து ஆயத்தங்களும் செய்யப்பட்டன. அப்போது போர்க்களத்தில் களப்பலி கொடுக்க வேண்டும். அப்போதுதான் போரில் வெல்ல முடியும் என்பது நம்பிக்கை.

அதற்கு ஒரு சிறந்த வீரனையே சிறந்த ஒரு முகூர்த்தத்தில் போர்க்களத்திற்குரிய தேவதைக்கு(காளிக்கு) முன்னால் பலி கொடுப்பவர் தவறாமல் வெற்றி பெறுவர் என்பது மரபு.

அருச்சுனனுக்கும் நாக கன்னிகை உலூபிக்கும் பிறந்தவன் அரவான். தந்தையாகிய அருச்சுனனிலும் பல மடங்கு பல பராக்கிரமங்களிற் சிறந்தவனாதலிற் அவன் ஒரு சிறந்த வீரன் என்று கருதப்பட்டு அவனையே இருபகுதியாரும் களப்பலி கொடுக்க உத்தேசித்தனர்

தருமர் அரவானைக் கேட்ட போது களப்பலிக்குச் சம்மதித்து விட்டான். ஆனால் துரியோதனன் வந்து கேட்ட போது அவனுக்கும் சம்மதம் தெரிவித்து விட்டான். அமாவாசை அன்று பலி கொடுப்பது என்று முகூர்த்த நாள் குறித்தாகி விட்டது.

இங்கே கண்ணன் தனது திருவிளையாடலைக் காண்பித்தான். சதுர்த்தசியன்று அமவாசையை வரும்படி செய்து, பிராமணர்களை கொண்டு இன்றைக்கே அமவாசை என்று கூற வைத்து அன்று இரவே குருநாடு சென்று காளிக்கு களப்பலி கொடுத்து விட்டு இரவு அங்கு தங்கியிருந்து காலையில் வந்து சேர்ந்தனர்.

அரவானைக் களப்பலி கொடுத்து விட்ட சேதி அறிந்து திரௌபதி அழுது புலம்பினாள். ஒருவகையில் அவன் அவளுடைய பெறா மகனல்லவா? அந்த புத்திர சோகம் அவளை வாட்டிற்று எனலாம்.

**திரௌபதி அம்மன் புலம்பும் பாடல் இதோ:**

விநாயகரை முன்னிறுத்தி
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன் சிரமறுக்க மனந் துணிந்தோம் 01.

பாரதப்போர் வெல்லவென்றால்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
எங்களுக்கு நீர்பகையாளி யானீரோ 02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை சிரம்பிடிக்க
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
பெற்ற பிள்ளையைநாம் கழுத்தறுத்தோம் 03.

பாரதமு மென்னாலே
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
அந்தப் படைப்போரும் என்னாலே 04

நாங்கள் பூவுலகம் ஆளவென்று
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
பெற்ற புத்திரனைக் கழுத்தறுத்தோம் 05.

மண்ணாள வேணுமென்று
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் துணித்தமடா உன்சிரசை 06

மங்களமாய் நாமிருக்க
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீமாள விதி வசமோ? 07

கூந்தல் முடிப்பேனடா
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நான் குமரரொடு சேர்வனடா 08.

கார்த்திகைப் பூப்போலே
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்மேனி காந்தியாய் நின்றதடா 09.

வீராதி வீரனல்லோ
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீவிற் போர்க்கு உருத்திரண்டா 10.

சத்துருவை வெற்றி கொண்டு
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் தனித்து அரசாள்வமடா 11.

ரோம அழகனல்லோ
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீ உருவறியும் மேகமடா 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்புயல் வண்ணருக்கும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உனக்கும் வலிமை சரியல்லவடா 13.

ஒரு கையில் காப்பிமிட்டு
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நான்ஒரு காதில் தோடுமிட்டேன் 14.

எங்கணிறை பாண்டவர்க்கும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உனக்கும் எதிரியா குமடா 15.

எங்களொற்றைப் படைகளெல்லாம்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீஒரு நொடியிற் கொல்லவந்தாய் 16.

திரி மூர்த்தி தங்களையும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீசெயிக்க நல்ல வல்லவன்டா 17.

சந்தேக மில்லாமல்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் சலியாமல் வாழ்ந்திருந்தோம் 18.

பாரதப் போர் வெல்வமடா
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
பட்டம் அரசாள் வமடா 19.

நாங்கள் பட்டம் அரசாளவென்று
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீ பலியானாய் போர்முனையில். 20.

நூற்றுவரை வெல்லவென்று
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்னை ஈன்றெடுத்தாள் நாககன்னி 21.

மாய்கையா யுன்றனையும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீமாற்றரசால் களப்பலி யானாய் 22.

பொன் மேனிப் பஞ்சவர்கள்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
இந்தப் பூலோகந் தானாள 23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரியோதனன் சிரசை
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் சுறுக்கிலே வெட்டுவண்டா 24.

சபதம் தானை முடிக்க
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
எனக் கெங்கிருந்து கிடைத்ததடா 25.

மறலியையும் மடியவைக்கும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீவலிமை யுள்ள வீரனல்லோ 26.

புயல் வண்ணரிட மாயமதால்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீ மாண்டாயோ போர்ப் பலியாய் 27.

மன்மதனை யொத்த வண்டா
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீ வாளுக் கிரையானாயோ 28.

பகைவர்களைக் கொல்ல வென்று
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்னைப் பலியாகக் கொன்றனரோ 29.

ஆண்டகை கன்னியர்க்கு
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்னை அறுத்தோ பலியீந்தோம் 30.

அங்காத்த தலையன்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
அரவுயர்த் தோன் தான்மாள 31.

மாய்கை யிருட்டதனில்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்சிரசை யறுத் தோமடா 32.

உன் வண்ணவுடல் புழுதிபட
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நீ மாண்டாயோ என்மகனே 33.

விடிய வெள்ளிக் கிழமையிலே
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
உன்னை வேணுமென்று கழுத்தறுத்தோம் 34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் புகழும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
இந்தப்போர் முகத்தில் நின்றதடா 35.

பூதலத்தில் நானிருந்தும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் போய்வாழ்வ தெவ்வுலகோ? 36.

ஆராரு வாழ்ந்து நிலை
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
ஆராரு வாழ்ந்து திருந்தார் 37.

எப்போ திருந்தாலும்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
நாங்கள் நமனுக்கிரை யாவமடா 38.

ஆச்சி யிதையறிந்தால்
என் மகனே அரவானே நாககன்னி புத்திரனே
அலறிப் புலம்புவாளே 39.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. தீப்பள்ளயம்

தவநிலை முடிந்ததும் அடுத்த நாள் மாலை தீப்பாய்தல் இடம் பெறும். இதற்காக முதல் நாளே தீக்குழி வெட்டப்படும். இக் குழிகள் இரண்டு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. ஒன்று அம்மன் குழி என்றும் மற்றையது கிருஷ்ணன்(சாமி) குழி என்றுமாகும். இக்குழிகள் வருடத்துக்கு ஒன்றாக மாறிமாறி வெட்டப்படும். திரௌபதியாக நிற்பவர் குழியை வெட்டி ஆரம்பித்து வைப்பார்.

இதன் நீளம் 20 அடி, அகலம் 3 அடி, ஆழம் 3 அடி என்றும் கூறப்படுகின்றது. தீக்குழி வெட்டியபின் நாலு மூலையிலும் நாலு மேடைகள் அமைக்கப்படும் இது **''வீரகும்பம்''** என அழைக்கப்படும். இதில் நாள் காலில் வெட்டப்பட்ட கம்புகள் அடித்து வைக்கப் படும்.

இந்த நாலு மேடைகளுக்கும் முன்னர் நாலு கோழிகள் பலியிடப்படுவதுண்டு. ஆனால் பின்னர் – பலியிடுவது நிறுத்தப்பட்ட பின்னர் இது இடம் பெறுவதில்லை. இப்போது கோழிகளுக்குப் பதிலாக நீற்றுப் பூசணிக்காய்கள் தான் வெட்டப் படுகின்றது.

அரவானைப் பலி கொடுத்த பின்னர் தீக்குழிக்கு நெருப்பூட்டல் நிகழ்ச்சி நடைபெறும். இதுவும் வெள்ளிக் கிழமை அதிகாலையிலே இடம் பெறும். இது முன்னர் பரம்பரை பிராமண குலத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ. மாணிக்கக் குருக்களால் செய்யப்பட்டு வந்தது.

அவருடைய நீண்ட ஆயுளுக்குப் பின்னர் அவர் மகன் சிவஸ்ரீ. மா. கு. சதாசிவக் குருக்கள் செய்து வந்தார். இவரும் மறைந்த பின்னர் இப்போது சிவஸ்ரீ மா. கு. கணேசதுரைக் குருக்கள் ஜே.பி அவர்கள் செய்து வருகின்றார். இனி இவரின் பின்னர் இவரின் பரம்பரையிலே ஒருவர் தான் இடம் பெற முடியும் என்று கூறுகின்றார்.

இதற்கான மந்திரப் பிரதிகள் தங்களிடமே இருப்பதாகவும் கூறுகின்றார். அத்துடன் பிராமண குலத்தவரே இதனைச் செய்ய வேண்டும் என்பதும் சிவஸ்ரீ மா. கு. கணேசதுரைக் குருக்கள் ஐயாவின் வாதமாகும்.

இதன் பின்னர் பச்சை வீரமரத்தில் ஆலயத்துக் கென்றே வெட்டப்பட்ட விறகுகள் குழியில் அடுக்கப்பட்டு எரிக்கப்படும். விறகுகள் அடுக்கப்பட அடுக்கப்பட அது தணலாக கொட்டப் படும் காட்சியைக் காணமுடியும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலையில் இருந்து கடல் குளிக்கச் செல்லுமுன்னர் அடிக்கடி பல முறை கட்டுக்கு நிற்கும் நிகழ்ச்சி நடைபெறும். தீக்குழி எரிந்து கொண்டிருக்கும் போது தீக்குழியைச் சுற்றி பலமுறை வலம் வருவர் அனைவரும். மஞ்சள் குளிக்கச் செல்லு முன்னர் 18 முறை வலம் வருதல் இடம் பெறும்.

## தீப்பாய்தல்

நெருப்புத் தணல் எல்லாம் மட்டத்துக்கு பரவிய பின்னர் **கடல் குளிக்கச்** செல்வர். கடல் குளித்த பின்னர் **மஞ்சள் குளித்தல்** கடற்கரையிலே இடம் பெறும். இந்நிகழ்ச்சி வேறு ஆலயங்களில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. பின்னர் எல்லோரும் ஆலயத்தை நோக்கி வருவர். வந்ததும் ஆலயத்தை ஒருமுறை சுற்றி வருவர் வந்ததும் தீக்குழிக்குள் பூ அரிசியை அள்ளிப் போடுவர். அது எரிந்து நெருப்புப் புகையாக எழும்பும். திரும்பவும் ஒரு கைப் பிடி அரிசியை அள்ளிப் போடுவர். இது அந்த நெருப்பில் அப்படியே கிடக்கும். அம்மாள் விடை தந்து விட்டார் என்று கருதி நெருப்பில் இறங்குவர். குழிக்கு எதிரே அம்மன் அலங்காரத்துடன் வீற்றிருப்பார். **தீப்பாய்ந்து** செல்பவர்கள் நேரே அம்மனிடம் சென்று விழுந்து விட்டு எழுந்து நீராடச் செல்வர். அங்கே தீர்த்தமும் கொடுத்து நிறைய நீர் அள்ளி வார்ப்பார்கள். அப்போது தான் அனல் அவர்கள் உடம்பை விட்டு வெளியேறும்.

## சாட்டையடி

இவர்களுடன் கட்டுக்கு நிற்கும் **தேவாதிகள்** தீப்பாய்ந்தவுடன் நேரே சாட்டை அடி கொடுக்கும் இடத்துக்குச் சென்று **சாட்டை** அடி பெற்றுக் கொண்டு தான் பின்னர் நீராடச் செல்வர்.

இந்த அரிசி அப்படி அந்த அனலில் கிடக்குமா என்பது பலரது கேள்விக் குறி. நான் தலைவர் ஆன பின்னர் தீக்குழி வாசலில் இந்தக் காட்சியை நேரடியாகவே கண்ணுற்றேன். அரிசி அந்தத் தணலில் அப்படியே எரியாமல் கிடக்கும் என்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடம் இல்லை.

இது போக, எங்கள் சிறுபராயத்தில் அப்பா வீட்டில் இருக்கும் போது கேட்போம், **''எப்படி அப்பா நீங்கள் இந்த நெருப்பில் இறங்கி எதுவித காயமும் இல்லாமல் வருகிறீர்கள்?''** என்று. அதற்கு அப்பா கூறுவார் **''தீக்குழி வாசலுக்கு வந்ததும், அம்மாள் தனது முந்தானையை விரித்துப் பிடித்துக் கொண்டு வா மகனே என்று அழைப்பது போன்றிருக்கும், அப்போது நாங்கள் பூவுக்கு மேல் நடந்து செல்வது போல் நடந்து செல்வோம்''** என்பார்.

தீப்பாய்தலுக்கு உடப்பூர் தி. அ. ஆலயமலர் கூறும் விளக்கத்திற்கு நான் ஒப்பவில்லை. எனினும் அது பற்றி நான் இங்கே விவாதிக்கவும் இல்லை. போர் வெற்றியையும் பாஞ்சாலி கூந்தலை முடிப்பதற்காகவுமே இந்த இறுதி நாள் தீப்பாய்தல் இடம் பெறுகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் பள்ளயம்

இத்துடன் தீப்பள்ளய நிகழ்ச்சிகள் முடிவடையும். அடுத்த நாள் சனிக்கிழமை பால் பள்ளயம் நடக்கும். அன்று விரதமிருந்தவர்கள் அனைவரும் பொங்கல் செய்வர். அந்தப் பாலில் அனைவரும் கொஞ்சம் கொஞ்சம் பானையில் சேகரித்து எடுப்பர். அந்தப் பானையை திரௌபதி தலையில் வைத்து சுமந்து கொண்டு தீக்குழி வாசலுக்கு எடுத்து வருவார். தருமர் முதல் அனைவரும் தீக்குழிக்கு பால் வார்ப்பர். விரமிருந்தவர்களும் பால் வார்ப்பர்.

## முடிசூட்டு விழா

அதன் பின்னர் கோயிலில் வந்திருந்து முடிசூட்டுச் சருக்கத்தினைப் பாடி முடிப்பர். அதன் பின்னர் தருமருக்கு முடி சூட்டும் வைபவம் நடைபெறும்.

## சுவாமி ஆலயத்துக்கு மீண்டும் வருதல்

இத்துடன் அன்றைய நிகழ்வுகள் யாவும் நிறைவடையும். இதனையடுத்து இன்று இரவு சுவாமி மீண்டும் ஆலயத்துக்குக் கொண்டு வரும் ஊர்வலம் இடம் பெறும்.

இது இளைஞர்களின் ஒழுங்கில் நடைபெறும். முத்துச் சப்புறத்தில் சுவாமியை எழுந்தருளப்பண்ணி ஊரின் தென்பகுதியைச் சுற்றிக் கொண்டு ஆலயத்தை வந்தடைவர். ஊரைக் காவல் பண்ணிக் கொண்டு வருவர். ஆலய உற்சவம் ஆரம்பமாகும் போது வட பகுதியைச் சுற்றி வந்தவர்கள் முடிவுறும் போது தென்பகுதியைச் சுற்றி வருவர்.

இத்துடன் ஆலய உற்சவம் இனிது நிறைவு பெறும்.

## எட்டாம் நாள் சடங்கு:

இதனை அடுத்து எட்டாம் நாள் சடங்கு வழமை போல் இடம் பெறும். அதற்கு அம்மன் கோவிலுக்கு மௌனமாக வந்து போவார். அதன் பின்னர் அடுத்த ஆண்டுதான் அம்மன் கோவிலை எட்டிப் பார்ப்பார். அதுவரை ஆலயத்தில் வெள்ளிக் கிழமை பூசைகள், விசேச பொங்கல் பூசைகள் அனைத்தும் பூட்டிய கதவுகளுக்கு முன்னாலே நடைபெறும்.

எட்டாம் நாள் உற்சவம் முடிந்த பின்னர் ஆலயக் கூட்டம் நடைபெறும். அதில் வருடாந்த கணக்கறிக்கையை நான் தான் முதன்முதலில் எட்டாம் சடங்கு கூட்டத்தில் காட்டினேன். கணக்காய்வு செய்யப்பட்ட அச்சுப் பிரதியாக இந்த கணக்கறிக்கையை எட்டு நாள்களுக்கு இடையில் காட்டினேன். எட்டாம் சடங்கு பொதுக் கூட்டத்தில் காட்டினேன். இதுதான் வழமையாக வரவேண்டும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்தேன். ஆனால் இப்போது பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறி இருப்பது புரிகிறது.

ஆலய நிர்வாகம் ஒழுங்காக நடைபெற்றதற்கு இந்த கணக்கறிக்கை தான் முக்கிய சான்றாகும். உடனே கொடுத்தால் தான் மக்கள் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வர்.

முந்திய நிர்வாகம் அடுத்த ஆண்டு கொடியேற்றக் கூட்டத்தின் போது காட்டுவார்கள். ஏனெனில் அது அவர்கள் கோவில். மக்களுக்கு கணக்கு காட்ட வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இல்லை. ஏதோ கடமைக்காகச் செய்வார்கள். அந்த நேரத்தில் இருப்பு எதுவும் இருக்காது. மக்கள் கேள்விக்கும் பதிலிருக்காது.

இப்போதைய நிர்வாகமும் பல வருடங்களாக கணக்கறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்று ஊர் மக்கள் பிரச்சினைபட்டதை கோயில் கொடியேற்றக் கூட்டத்தில் கண்ணுற்றேன். அதனால் நிர்வாகம் மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன் வைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. வர்த்தமானிப் பிரகடனம்

இலங்கையில் அம்பாரை மாவட்டத்தில் வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனப் படுத்தப்படும் ஒரே ஆலயம் பாண்டிருப்பிலுள்ள ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயமாகும்.

இந்தப் பிரகடனத்தின் மூலம் **'கேம்ப்'** பகுதி எனப்படும் ஒரு பிரதேசம் கோவில் நடக்கும் காலம் வரையும் கோவில் தலைமையின் அதிகாரத்தில் இருக்கும். அதுமட்டுமின்றி இந்த முகாம் பகுதியில் நடைபெறும் அனைத்து விடயங்களுக்கும் தீர்வு இந்த ஆலய முகாம் பகுதிக்குள்ளேயே காணப்பட வேண்டும்.

இதனால் அந்த நாட்களில் ஆலய எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் பொலீஸ் நிலையம், நீதிமன்றம், உதவி அரசாங்க அதிபர் காரியாலம், சுகாதார உத்தியோகத்தர் காரியாலயம், கிராம சேவகர்கள் காரியாலயம் என்பன அமைத்துக் கொடுக்கப்படும்.

பெரிய பதவிகளில் இருப்பவர்களும் தினசரி ஒரு தடவையாவது இங்கு வந்து செல்வர். ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் நீதவான் அங்கேயே விசாரித்து தீர்ப்பளிப்பார். இங்கு கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர் அனைவருக்கும் ஆலயம் உணவு ஒழுங்குகளையும் கவனித்துக் கொள்ளும்.

இந்த முகாம் பகுதி ஆலய தலைவரின் பொறுப்பில் இருக்கும். ஏனெனில் இந்த எல்லைக்குட்பட்ட பகுதிக்குள்ளே பெரும்பாலும் ஆலய உற்சவ நிகழ்ச்சிகள் நடைபெறும். அதனால் அதற்குள் ஆலய தலைவரின் முடிவே முடிந்த முடிவாகும். இதனைச் செயற்படுத்த வேண்டியது திறமையுள்ள ஆலயத் தலைவரின் பொறுப்பாகும்.

வர்த்தமானப் பிரகடனத்தில் திரௌபதி என்பது துரோபதை என்று குறிப்பிடப் பட்டிருத்தலைக் காணலாம். பேச்சு வழக்கில் மக்கள் துரோபதை அம்மன் என்றே அழைப்பது வழக்காகும்.

ஒரு மாதிரி வர்த்தமானப் பிரகடனத்தைப் பார்ப்போம். இது 1996 ஆம் ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

இதன் உண்மைப் பிரதியை கீழே காணலாம். இந்த பிரகடனம் ஆண்டு தோறும் பிரசுரிக்கப்படுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி (1) தொகுதி (1) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
வர்த்தமானப் பத்திரிகை 1996.09.06.

எமது இல.: கேஎம் / ரிடி / டீஎஸ் / 07 / 01 / 96.

**யாத்திரிகர் கட்டளைச் சட்டம்**

பாண்டிருப்பு ஸ்ரீ துரோபதை அம்மன் கோவில்
வருடாந்த உற்சவம் – 1996.

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் பகுதி –
அம்பாரை மாவட்டம்.

மேற்குறிப்பிட்ட உற்சவம் 1996ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் (9ம் மாதம்) பத்தாம் (10) திகதி ஆரம்பித்து 1996 ஆம் ஆண்டு செப்தெம்பர் இருபத்தேழாம் திகதி (27) பூர்த்தியடையும் என்பதை யாத்திரீகர்களுக்கும் இவ்வுற்சவத்தோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2–1951ஆம் ஆண்டின் மே மாதம் பதினோராம் திகதி வெளியிடப்பட்ட 10247ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றிற்கும் யாத்திரீகர்களும் இவ்வுற்சவத்தோடு சம்பந்தப்பட்டவர்களும் கவனத்திற்கு எடுக்கும் படி இத்தால் கேட்கப் படுகின்றீரகள்.

3. இவ்வுற்சவத்தின் முகாம் பின்வருமாறு விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

வடக்கு : பாண்டிருப்பு சேமக்காலை வீதி, பாண்டிருப்பு:
கிழக்கு : பாண்டிருப்பு கடற்றொழில் வீதி, பாண்டிருப்பு:
தெற்கு : பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதி:
மேற்கு : பாண்டிருப்பு பெரியகுளக் கட்டு பாண்டிருப்பு:

பீ. இராஜசெல்வகுமாரன்
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கல்முனை தமிழ் பிரிவு,
கல்முனை.
1996.08.14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தமானியின் பிரகடனம் மூலப்பிரதி

எமது இல : கேளம்/பிச/மளே/07/01/96

### யாத்திரிகர் கட்டளைச் சட்டம்

பாண்டிருப்பு ஸ்ரீ துரோபதை அம்மன் கோயில்
வருடாந்த உற்சவம் — 1996

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் பகுதி—
அம்பாறை மாவட்டம்

மேற்குறிப்பிட்ட உற்சவம் 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் (9 ஆம் மாதம்) பத்தாம் திகதி (10) ஆரம்பித்து 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் இருபத்தேழாம் திகதி (27) பூர்த்தியடையும் என்பதை யாத்திரீகர்களுக்கும் இவ்வுற்சவத்தோடு சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. 1951 ஆம் ஆண்டின் மே மாதம் பதினோராம் திகதி வெளியிடப்பட்ட 10247 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றிற்கும் யாத்திரீகர்களும் இவ்வுற்சவத்தோடு சம்பந்தப்பட்டவர்களும் கவனத்திற்கு எடுக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றீர்கள்.

3. இவ்வுற்சவத்தின் முகாம் பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளது:-

வடக்கு : பாண்டிருப்பு சேமக்காலை வீதி, பாண்டிருப்பு;
கிழக்கு : பாண்டிருப்பு கடற்றொழில் வீதி, பாண்டிருப்பு;
தெற்கு : பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதி;
மேற்கு : பாண்டிருப்பு பெரியகுளக் கட்டு பாண்டிருப்பு;

பீ. இராஜசெல்வகுமாரன்.
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
கல்முனை தமிழ் பிரிவு,
கல்முனை,
1995.08.14.


09-38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நிர்வாக எல்லை படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. வரை படம் – ஆலய அமைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைபட விபரம்

1. வாயிற் கோபுரம்
2. மூலஸ்தானம்
3. உள்மண்டபம்
4. வெளிமண்டபம்
5. கொடி ஸ்தம்பம்
6. கல்யாணக்கால்
7. வீரபத்திரர் கோயில்
8. காடேறி மேடை
9. தவநிலை
10. கமலகன்னி கோயில்
11. கபடா வீடு
12. காரியாலயம்
13. மகாபாரத மண்டபம்
14. பட்டாணி கோயில்
15. வைரவர் கோயில்
16. எழுந்தருளும் பீடம்
17. தீக்குழி
18. உள்வீதி
19. தீர்த்தக் கிணறு
20. கோயில் சுற்றி வரும் முறை

→ வடக்கைக் குறிக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. வழக்காடல்

இந்த ஆலயம் தாதனால் தோற்றுவிக்கப்பட்டதென்றும் அது நற்பிட்டிமுனையைச் சேர்ந்தோரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இதுவரை கண்டோம். ஆயினும் பாண்டிருப்பில் சனப் பெருக்கம் அதிகரித்த பின்னர் இந்த ஆலயத்தை தாங்களே நிர்வகிக்க வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மெல்ல மக்களிடையே தோன்றலாயிற்று.

இதற்குக் காரணம் ஆலயமும் அதை நிர்வகிக்கும் முகாமைகளும் இங்கிருக்கவும், அவர்களே பணத்தைச் செலவழித்து திருவிழாக்களை சிறப்பாகச் செய்யவும் நற்பிட்டிமுனையில் இருந்து வரும் ஒரு சிலர் பணத்தை எண்ணிச் சுருட்டிக் கொண்டு செல்வதையும் ஊர் மக்கள் விரும்பாததே இதற்குக் காரணம் எனலாம்.

இது இன்று நேற்றல்ல 1920 களில் இருந்தே இப் பிரச்சினை எழுந்து இருக்கிறது. ஆனால் நிர்வாகத்தை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இறுதியாக ஊர்மக்கள் 1929 இல் டிஸ்திறிக் கோட்டில் ஒரு வழக்கை தாக்கல் செய்தனர். அந்த வழக்கின் தீர்ப்பு 1931 இல் வழங்கப்பட்டது. இதனாலும் ஊர் மக்களுக்கு பயன் கிடைக்க வில்லை என்று கூறுகின்றனர்.

நான் முன்னர் எழுதிய ஒரு கட்டுரையில் இது பற்றி குறிப்பிட்டிருந்தேன். இது எங்கிருந்து கிடைத்தது? இது சரியானதா? என்றும் பலர் கேட்கத் தொடங்கினர். அந்த வழக்கின் பிரதியை நான் பிரதி எடுத்து வைத்துக் கொண்டுதான் எழுதினேன்.

அதனை இங்கு முழுமையாகத் தருகின்றேன். இந்த வழக்குப் பிரதியை அமரர் இளையதம்பி மார்க்கண்டன் அவர்களிடமிருந்தே பெற்றுக் கொண்டேன் என்பதையும் இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். அதிலும் ஒரு சிறு பகுதி கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாண்டிருப்பு ஸ்ரீ துரோபதை அம்மன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வழக்கின் தீர்ப்பு:**
**டிஸ்றிக் கோட்**
**வழக்கு இல: 6978**

**இவ் வழக்காளிகள் பாண்டிருப்பிலுள்ள துரோபதையம்மன், மாணிக்கப் பிள்ளையார் கோயில்களின் முகாமைக்காரர்கள்:**

அவர்கள் இவ்விரு கோவில்களினதும் பராமரிப்பைக் கையேற்று நடத்தி வரும் நிர்வாக சபையினரென்றும் இவ்வெதிரிகள் பின்னால் விபரிக்கப்படும்படி தங்கள் உருத்துக்களுக்கு இடையூறாய் வராமலும் விலக்கித் தரும்படியும் கேட்கின்றனர்.

அவர்கள் கூறுவதாவது, இவ்வெதிரிகள் இருபேரும் தங்களால் காலத்துக்குத் தக்கபடி நிலைபரம் இல்லாமல் கோயிற் காரியங்களைப் பராமரித்து வரும்படி நியமிக்கப்பட்டதாகவும் அந்நியமனப் படியே 1924, 25, 26, 27, 28, 29 ஆம் வருடங்களில் பராமரிப்பை நடத்தி வருகையில் பின்வரும் பிசகுகள் நேர்ந்தன வென்று கூறுகின்றனர்:

(1) எதிரிகள் தங்களின் பேரில் பதியப்பட்ட ரூபாய் 400/= பெறுமதியுள்ள ஒற்றி உறுதியை கோயிற் பணத்தைக் கொண்டு முடிப்பித் தெடுத்தும் இப்போது நியாயத்துக்கு விரோதமாய் அவ்வுறுதியை மாற்றிக் கோயிலுக் கெழுதவாவது, பணத்தைக் கொடுக்கவாவது மறுதலிக்கின்றனர்.

(2) எதிரிகள் கோயிற்காசு ரூபாய் 126/= ஐக் கொண்டு வாங்கித் தங்கள் பேரிற் பதிந்த ஒரு பூமித்துண்டின் உறுதியை இப்போ நியாயத்துக்கு விரோதமாய் கோயிலின் பேரிற் திரும்பிப் பதிக்க மறுதலிக்கின்றனர்.

(3) எதிரிகள் தாங்கள் பல தடவைகளிலும் வெவ்வேறு பேருக்குக் கடனாகக் கொடுத்த மொத்தப் பணம் ரூபாய் 101/17 சதம் கோயிற் காசை கோயிலுக்கு கொடுக்க மறுதலிக்கின்றனர்.

(4) இவர்களுக்கு விரோதமான மற்ற எதிர் சான்றாவது: வழக்காளிகளைக் கோயில் முகாமைக்காரராய் அதற்கேற்ற கடமைகளைச் செய்ய விடாது எதிர்த்துப் பேசிப் படுத்தித் தடுத்தது.

இப்போ இவர்கள் மன்றாடுகின்ற தென்னவெனில் எதிரிகள் தங்கள் பேரிலுள்ள ஒற்றி உறுதியையும் கிரய உறுதியையும் கோயிலின் பேரிற் திருப்பி எழுதித் தரும்படியும் முற்காட்டிய ரூபாய் 101/17 சதத்தை திருப்பிக் கொடுப்பிக்கும் படியும், தங்களை கோயில் நியாயமான முகாமைக்காரராய் உறுதிப்படுத்தி வைக்கவும் அதற்கிணங்கி எதிரிகள் தங்களிடமுள்ள கோயிற் காணியின் வரவு செலவுக் கணக்கை இவர்களுக்கு கொப்புவிக்கும் படியும் கட்டளை இடும்படியும் கேட்டுக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிரிகள் இவ்வோண்டுகோளுக்கெதிராய் கூறுவதாவது:–** வழக்காளிகள் கோயிற் திருவிழாக்களில் மாத்திரம் ஈடுபட்டவர்களேயன்றி மற்றும்படி கோயில் முகாமைக்காரராய் சரிவர நியமிக்கப்படவில்லையென்றும் உரைக்கின்றனர். தாங்கள் கோயிற் பணத்தை முற்கூறியபடி வெவ்வேறு விதங்களில் செலவிட்டது உண்மை. ஆனால், எப்போதாவது அவர்கள் உறுதிகளை கோயிலின் பேரிற்கு மாற்றி எழுத மறுதலிக்கவில்லையென்றும் நிலை நிறுத்துகின்றனர். முக்கியமாய்த் தங்களிடமிருந்து உறுதிகளை திருப்பி எழுதித் தரும்படியாகுதல் கேட்க வழக்காளிகளுக்கு நியாயத்தின் படி ஓர்வித உருத்து மில்லையென்றும் சாதிக்கின்றனர்.

இதைவிடத் தங்களுக்கும் கோயிலின் பரிபாலனத்தின் கீழ் ஓர் பரம்பரையான உருத்திருக்கென்று ஸ்தாபிக்கின்றனர். திரௌபதியம்மன் கோயில் முக்கிய கோயிலென்றும் மற்றது அதின் பரிபாலனத்தின் கீழ்க் கட்டுப்பட்டுள்ளதென்றும் தோன்றுகிறது. இக் கோயிலின் கீழ்ப்பட்ட சனங்கள் பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று குடிகளால் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வோர் குடிக்கும் ஓர் முகாமைக்காரனும் சனம் அதிகமுள்ள குடிகட்கு இரண்டு முகாமைக் காரர்களும் உண்டு. இக் கோயிலின் விசேச திருவிழாவாகிய **'தீப்பள்ளயம்'** வருஷத்துக்கொருமுறை நடைபெறும். இத்திருவிழாவுக்கு முந்திய பதினெட்டு நாட்களிலும் முன்னோர் வகுத்து வைத்த முறைப்படி பூசைகள் நடத்துவது வழக்கமாக இருந்து வருகின்றது.

**ஒரு முகாமைக்காரனின் கடமைகளை வழக்காளி பின்வருமாறு விபரித்திருக்கின்றார்.**

"ஒவ்வோர் குடியின் முகாமைக்காரன் ஒவ்வோர் குடிப் பூசைக்கே பாத்திரவாளன். குடியானவர்களிடமிருந்து அறவிட்ட பணம் போதாதாயிருந்தால் தனது பணத்திலும் போட்டு நடத்துவிப்பது வழக்கம். அறவிட்ட பணம் கூடுமானதாய் இருப்பினும் கூடிய தொகையைக் கோயிலுக்கு கொடுப்பதுமில்லை. திருவிழாக் காலங்களில் சமயோசிதமாக சிறு கடைகள் கட்டப்பட்டுக் கடைக்காரர் வாடகை கட்ட வேண்டியது. இவ்வாடகைப் பணம் பள்ளயத் தினத்தன்று கணக்கப்பிள்ளையினாலும் வண்ணக்கினாலும் அறவிடப்படும். குடி முகாமைக்காரரும் இதிற் சேர்வதுண்டு. இப்பணம் கோயிலின் வருமானத்தில் ஓர் பகுதி. கடைசி நாளில் நாங்கள் சகல பொருட்களையும் எடுத்து சனசமூகத்தில் கணக்குப் பார்ப்பது வழக்கம். **(இதில் இருந்து விளங்க வேண்டிய தென்னவெனில் இவ்வழக்காளிகளுக்குக் கோயிலில் பங்கில்லையென்பதே)**

இவர்களுடைய முக்கிய கடமை என்னவெனில் தங்கள் குடிப் பூசையை நடத்து விப்பதும். வண்ணக்குக் கடை வாடகையை அறவிடுவதில் உதவி புரிவதும் வேறோரிடத்திற் கோயிற் காரியங்களை கூடியிருந்து பேசுவதும் குடி முகாமைக்காரனின் வழக்கமென்றும் 1ஆம் வழக்காளி சொல்லியிருக்கிறார். (ஆனால் இவர்களுக்குத் தங்களின் பக்தியிலுள்ள பேச்சுக்களைக் கிரிகைகளால் மாற்றும் அதிகாரம் இல்லை என்பது எனது துணிபு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்காளிகள் நிர்வாக சபையின் அங்கத்தினர் அல்ல வென்றும் ஆனதினால் எதிரிகளிடம் கோயிற் காசுக்கும் ஆதனத்துக்கும் கணக்குக் கேட்க உரித்துடையவர்களல்லவென்றும் நான் கொள்ளுகிறேன்.

வழக்காளிகள் நிர்வாக சபையின் அங்கத்தவராய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர்கள் எதிரிகளிடம் 1924 – 1929ம் ஆண்டுகளுக்கு மாத்திரம் கோயிற் பராமரிப்பை நடத்தும்படி நியமித்து வைத்தார்களா? இதற்கு மறுமொழி சொல்லக் கோயிலின் கடந்த வருடங்களின் பராமரிப்பை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகின்றது.

திரௌபதியம்மன் கோயில் சனங்களிடமிருந்து அறவிட்ட பணத்தைக் கொண்டு அழகிப்போடி வன்னிமையாற் கட்டப்பட்டது. அழகிப்போடி வன்னிமையின் சகோதரன் சின்னத்தம்பி வன்னிமையின் குமாரன் சத்துருக்கன் போடி வன்னிமை. இவ்வன்னிமைகள் தங்கள் உத்தியோக செல்வாக்கினாலும் மற்றும் கோயிலைக் கட்டுவித்த அழகிப்போடி வன்னிமையின் உருத்தாளர் என்ற பான்மையாலும் கோயிற் குடிகளின் எல்லோருக்குள்ளும் முதலிடம் வழங்கப் பெற்றுக் கூட்டங்களின் அக்கிராசனம் வகித்து வந்தது மன்றித் தங்கள் புத்தியினால் கூட்டங்களை நடத்தியும் வந்துள்ளார்.

குடிகள் இவரை அக்கிராசனராகத் தெரிந்தவர்களல்ல. ஆனால் இவர் தாமாகவே அக்கிராசனம் வகிக்கக் குடிகள் எதிர்த்துப் பேசியவர்களுமல்ல. சின்னத்தம்பி வன்னிமையின் பின் அவர் மைத்துனர் கணபதிப்பிள்ளை வந்தார். இவர் சனங்களிட மறவிட்ட பணத்தைக் கொண்டு மாணிக்கப் பிள்ளையார் கோயிலைக் கட்டுங்காலத்தில் சொந்தப் பணம் 159/= ரூபாவையும் அதிற் செலவிட்டார். பிற்கூற்றிலே இவர் முகாமைக்காரனால் தலைமைவகிக்குங் காலங்களில் இவரின் இளைய மைத்துனன் 1ம் எதிரியும் இவருடன் ஒத்துழைத்திருக்கின்றார். முறையே இவர் சகாவும் (1ம் எதிரி) வழமையின்படி தாமே அக்கிராசனத்தைக் கைக்கொண்டார். 1ம் எதிரியின் முன்னுள்ளோர் கோயிலின் அலுவல்களில் அவ்வளவாய் ஊன்றி வரையறை வைக்கவில்லை.

கூட்டங்களில் அக்கிராசனம் வகிப்பதிலும் சனங்கட்குப் புத்தி புகட்டுவதிலும் மாத்திரமே திருப்தியடைந்தனர். கோயில்களின் சகல பரிபாலனமும் கணக்குப்பிள்ளையென்றும் வண்ணக்கென்றும் முள்ள இரண்டு உத்தியோகத்தர் மீதிற் தங்கியிருந்தது. 2ம் எதிரி 1909ம் ஆண்டுக்கு முன்னர் தொடங்கி இற்றை வரைக்கும் கணக்கப்பிள்ளை கடமை புரிந்து வருகிறார். இவர் அழகிப்போடி வன்னிமையின் ஓர் சந்ததியார்.

1ம் வழக்காளி கூறுகிறார் "கேயிலின் கூட்டப் புத்தகங்களிலிருந்து விளங்கிக் கிடப்பது முகாமைக்காரர்கள் சின்னத்தம்பி வன்னிமையின் சந்ததியின ரென்றும் கணக்கப்பிள்ளை அவர் சகோதரன் அழகிப்போடி வன்னிமையின் சந்ததியினரென்றும் உள்ளவர்களே எப்பொழுதும் இருப்பதாய் தோன்றுகிறது" இதில் நின்று தெரிகிறது யாதெனில் எதிரிகள் வழக்காளினால் அல்லது அவர்களின் தத்துவத்தினாவாகுதல் நியமிக்கப் படவில்லை. அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுசார்பாய் அவர்களே தங்களின் குடும்பத்தைக் கொண்டு தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்களென்று கூறவாகுதல் சொல்ல நான் பின்நில்லேன்.

சந்தேகமின்றி அழகிப்போடி வன்னிமை தங்களுக்குச் செய்துள்ள நல்லூழியங்களின் பயனால் கணக்குப்பிள்ளை என்னும் பதவியை ஊரார் அவரின் பிற்சந்ததியாருக்கு விட்டிருக்கலாம். ஆனால் இது ஓர் குடும்ப சுதந்திர உருத்தைக் காட்டவில்லை. அதையிட்டு 1ம் எதிரி கூறுவதாவது:

''வண்ணக்கு கணக்குப் பிள்ளை என்னும் உத்தியோகத்தரைத் தெரிவு செய்வதில் குடும்ப உருத்துக்களும் அனுபவித்து வருவது விசேசம். 'இதனால் நான் கருதுவது யாதெனில் மற்றொருவரைக் காட்டிலும் முதல் அவ்வுத்தியோகத்தைக் கையாண்டிருந்த ஒருவரின் மகன் அல்லது மருமகனுக்கே கூடக் கிடைக்கும்'

இப்போ கோயில் நடாத்துகையில் இவர்களுக்கெதிராகவுள்ள சான்றுகளைக் கவனிப்போம். 1ம் எதிரி முகாமைக்காரனாய் வந்தவுடன் கோயிலின் காரியங்கள் யாவையும் திருத்திப் பராமரிப்பைப் பெலப்படுத்தத் தெண்டித்தார். இதற்கிலக்காக 1923ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ந் திகதி இவரின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதில் ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டுகுடிகளின் வெவ்வேறு அலுவல்களை செவ்வனே முடிக்க 32 பேரடங்கிய ஓர் நிர்வாக சபை ஏற்படுத்தப் பட்டது.

2ம் வழக்காளியும் இரண்டாவது எதிரியும் வண்ணக்காகவும் கணக்குப்பிள்ளையாகவும் நியமிக்கப் பட்டனர். அச்சங்கமும் உத்தியோகஸ்தரும் இற்றைவரையும் கடமை புரிகின்றனர்.

1926ம் ஆண்டு ஐப்பசி மாதம் கூடிய ஓர் அச்சங்கக் கூட்டத்தில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. ஒற்றி உறுதி அக்கிராசனாரின் பெயருக்கும் பொக்கிஷாதிபதியின் பெயருக்கும் முடிய வேண்டும் என்பதே தீர்மானம். ஆகையால் இத் தீர்மானத்திற்கிணங்க மேற் கூறிய சாதனங்கள் இவ்வெதிரிகளின் பெயருக்கு முடியப்பட்டன. அப்படி முடியப்பட்டதும் எல்லோரின் அங்கீகாரத்துடனும் அறிமையுடனுமே ஏற்கப்பட்டன. எதிரிகள் சிறு தொகைப் பணங்களை வெவ்வேறு பெயருக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள்.

கடன் வேண்டியவர்களுள் வழக்காளிகளும் இவ்வித கடன்களெல்லாம் கணக்குப் புத்தகத்தில் பதியப் பெற்றன. ஆனால் ஊராருள் ஒருவராகுதல் இதன் உரிமையைப் பற்றிக் கேட்கவில்லை. எதிரிகள் வருடா வருடம் வருடாந்த செலவுத் திட்டம் சமர்ப்பிப்பது வழக்கம். 1929ம் வருஷத்துக்குடைய கணக்குகள் சரியாய் வைக்கப்படவில்லை என்றதைவிட வேறுவித குற்றச் சாட்டுகளை எதிரிகளின் மேல் நிலை நிறுத்தி அவர்களின் நேர்மையற்ற தனத்தை ருசுபடுத்த வழக்காளிகள் தெண்டிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் எதிரியை ஏன் கோயிலின் காரியங்களை நடத்தவிடக் கூடாது தென்பது வழக்காளிகள் கருத்தென எனக்கு விளங்கப் பொறுப்பாய் இருக்கின்றது.

15ம் வழக்காளி நல்லதம்பிப் போடி என்பவர் சொல்லுகின்றார் "1ம் எதிரி எங்களின் கோயிலில் ஏதாகுதல் செய்ய எனக்கு விருப்பமில்லை. ஊருக்கும் தேவையில்லை. அவர் தானாகவே யாவற்றையும் செய்பவர். ஊரவரின் வார்த்தைகளைக் கேட்பதும் இல்லை. ஊரின் சம்மதத்தைக் கேட்டு நடப்பாரேயாகில் எனக்கு அவரில் மறுப்பில்லை.

கண்டுமணி சொல்லுகிறார். 1ம் எதிரியை கோயிலில் ஏதும் அலுவல் செய்ய நாங்கள் விடோம். இளையதம்பி பரிகாரி பின்வருமாறு கூறுகிறார். 1ம் எதிரி நல்ல வம்சத்திற் பிறந்தவர். அவர் ஓர் வன்னிமை வம்சத்தைச் சார்ந்தவர். ஓர் நீர்ப்பாச்சல் வன்னிமை ஊரிலுள்ளவர். அவரை நன்கு மதிப்பர், காரைதீவு, கல்முனை, திருக்கோயில் மற்றும் இடங்களிலுள்ள கோயிற் கூட்டங்கட்கு அக்கிராசனம் வகிப்பவர். அன்னமலைக் கோயில் நடாத்துகையில் தகுதியற்றவரென்று கழிக்கப்பட்டார். அவருடைய ஐஸ்வரியத்தினாலும் செல்வாக்கினாலும் தான் நாங்கள் அவரை எங்கள் சங்கத்தில் அக்கிராசனராய் வைக்கச் சம்மதித்தோம்.

வழக்காளிகள் எதிரிகளின் நேர்மையீனத்தை அல்லது தவறான பரிபாலனத்தை ருசுப்படுத்தவில்லையென்பது எனது கொள்கை. இதற்கு மாறாய் 1ம் எதிரி கோயிலுக்குத் தகுந்த நல்லூழியம் புரிந்திருக்கின்றார். இதில் கோயிலுக்கு கடன்காரராயுள்ள வழக்காளினதும் மற்றவர்களினதும் சபை கடுமை காட்டி கோயிற் கடனை உடனே கட்டும்படி வற்புறுத்தியிருக்கலாம். கோயிற் பணத்தைக் கொண்டு ஆதனம் வாங்கும் வழக்கத்தை ஏற்படுத்தி விட்டவரிவரே! இவர் வருவதற்கு முன் கோயில் நிலைபரங்களிலெல்லாம் பிசகிருந்தன. கோயில் பணம் பிழையாய் வழங்கப் பட்டிருந்தது. ஆனால் இவர் சகலதையும் திருத்தி நிரைப்படுத்தினார்.

ஆனால் கோடே இதற்கு ஓர் முறைப்படி கோயிற் பரிபாலனத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அத்தியவசியமா?

நான் அப்படி நினைக்கவில்லை. 1923ம் ஆண்டு ஏற்படுத்திய சங்கமும் உத்தியோகஸ்தரும் அப்பரிபாலனத்தை பிழையின்றி நடத்தக் கூடும். வழக்காளர் வாதாடுகின்ற தென்னவெனில் 1ம் எதிரி தங்கள் கடமைகளில் பங்குபற்றக் கூடாதென்பதே. இதற்கு சார்பாக அவர் கூறிய எந்நியாயமும் அதற்கு நேர்மாறாய் 1ம் எதிரிக்கு சார்பாகவே இருந்தது. அவர் தன் கருத்துப்படி நடக்கும் ஓர் மனுஷன் தான். ஆனால் ஓர் பரோபகாரி. வழக்காளர் கோயிற் காசுகளைக் கையாடுவதில் நன்கு பயின்றவர்கள். இதற்கடையாளமாயச் சிலர் கோயிலுக்கே கடன்காரராய் இருக்கிறார்கள். 1ம் எதிரி கருமத்தை திருத்தி நடத்தவும் கோயிலின் சிதறுண்ட வருமானத்தைக் கூட்டிச் சேர்க்கவும் முன் வந்தவர். இது வழக்காளருக்கு தோதுப்படவில்லை. அதனாற்றான் அவர்களுக்கு எதிர்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெங்கும் நின்றுலாவும் சுயாட்சிப் பேச்சில் இவர்களும் பிடித்து விட்டனர். தங்கள் பணத்தை தாங்களே கையாளவும் தங்கள் கருமத்தை தாங்களே நடத்தவும் எண்ணுகின்றனர். தம் முன்னோரைப் போல் கூட்டங்களில் மாத்திரம் அக்கிராசனம் வகித்துப் புத்தி புகட்டுவதை விட்டு வேறு கறாருள்ள எவ் அலுவலையும் கொண்டு வர முன் வராவிட்டால் 1ம் எதிரியையே மிகவும் விருப்பமாக அங்கீகரித்திருப்பார்கள். ஆனால் அவர் சனசேவை செய்யவும் இச்சனங்களை ஒவ்வொருவர் வேறாவதின்று காப்பாற்றவும் தெண்டித்து வந்திருக்கிறார். இவ்வழக்கில் எழுப்பிய ஆராட்சிகட்குப் பின்வருமாறு பதிலளிக்கிறேன்

(பதில் தவற விடப் பட்டுள்ளது)

செலவுடன் களிக்கிறேன். 1931ம் ஆண்டு வைகாசி மீ 26ம் திகதி பகிரங்க கோட்டில் வாசிக்கப் பட்டது.

இந்த வழக்குத் தீர்ப்பிலிருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியது என்னவெனில் வழக்காளிகள் விட்ட தவறே என்பது புலனாகிறது. **இதன்படி :**

**(1) 1929ம் வருஷத்துக்குடைய கணக்குகள் சரியாய் வைக்கப் படவில்லை என்றதைவிட வேறுவித குற்றச் சாட்டுகளை எதிரிகளின் மேல் நிலை நிறுத்தி அவர்களின் நேர்மையற்ற தனத்தை ருசுபடுத்த வழக்காளிகள் தெண்டிக்கவில்லை.**

**(2) வழக்காளிகள் எதிரிகளின் நேர்மையீனத்தை அல்லது தவறான பரிபாலனத்தை ருசுப்படுத்த வில்லை யென்பது எனது கொள்கை**

**(3) ஊரெங்கும் நின்றுலாவும் சுயாட்சிப் பேச்சில் இவர்களும் பிடித்து விட்டனர். தங்கள் பணத்தை தாங்களே கையாளவும் தங்கள் கருமத்தை தாங்களே நடத்தவும் எண்ணுகின்றனர்.**

இந்த வழக்கில் இதை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்களை இவர்களால் சமர்ப்பிக்க முடியவில்லை என்பதாகும்.

அடுத்தது சுயாட்சிப் போக்கு 1929ம் ஆண்டுகளிலே ஏற்பட்டிருந்தது என்றால் அதன் பின்னர் எப்படி ஏற்பட்டிருக்கும் என்று நாம் ஊகிக்க முடியும்.

இதன் பின்னரும் ஒரு வழக்கு நடந்தது என்று அறிகிறேன் ஆனால் அதற்கான ஆதாரத்தைப் பெற முடியவில்லை. இருப்பவர்கள் யாராவது தந்து உதவினால் பிரசுரம் செய்ய உதவியாக இருக்கும்.

ஊர் மக்கள் பின்னரும் பல பிரச்சினைகளை எழுப்பி ஆலய பரிபாலனம் தம் கைக்கு வரவேண்டும் என்று வாதிட்டனர். ஆனால் முடிவு நன்றாக அமையவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் தங்கள் பணச் செலவில் கட்டப் பட்டது என்பதால் அது தங்களுடையது என்று வாதிட்டு வெற்றி பெறுகின்றனர். ஆனால் வழக்கு பிரதியில் **ஊர் மக்களிடம் இருந்து அறவிட்ட பணத்தில் கட்டப்பட்டது** என்று குறிப்பிட்டிருந்ததைக் காண்க.

1975 – 1978ம் ஆண்டுகளில் ''ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய புனருத்தாபன சபை'' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதுவும் ஆலய பரிபாலனம் ஊர் மக்களின் கைகளுக்கு வரவேண்டும் என்று வாதாடினர். இதன் தலைவராகவும் நானே இருந்தேன். இந்து கலாச்சார அமைச்சுக்கு விண்ணப்பித்து கல்முனை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஊடாக விசாரணைகள் நடைபெற்றது. முடிவு வெற்றி அளிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

அன்று இந்த ஊரில் சனங்கள் இல்லாததாலும் நற்பிட்டிமுனை என்னும் கிராமமே மக்கள் வாழும் கிராமமாக இருந்தபடியாலும் பணிகொணா குடியில் படித்த நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் இருந்ததாலும் இவ்வாலய பரிபாலனம் அவர்களிடம் இருந்தது. உருத்துவழி அவர்களிடமே தொடர்ந்து இருந்தது.

இந்த ஆலயத்தின் சிறப்புக்காகப் பாடுபடும் மக்களால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இவை கல்வெட்டின் படி பணிகொணா குடிமக்களிடமே இப்போதும் இருந்து வரினும் இப்போது பாண்டிருப்பிலும் அக்குடி மக்கள் நிறைந்து இருப்பதனால் இப்பதவிகள் தங்களுக்குள் வந்து சேர வேண்டும் என்று அவர்கள் கேட்பது நியாயமே.

இதனால் மீண்டும் மீண்டும் காலத்துக்குக் காலம் சர்ச்சைகள் எழுந்த வண்ணம் இருந்தன. இதன் பின்னர் வேறு சிலரிடம் இந்த முயற்சி சென்றது. ஏனோ அவர்களும் இதில் அதிகம் சிரத்தை காட்டவில்லை என்றே கூறவேண்டும்.

## ஊருக்கு ஒரு நிர்வாகம் அமைந்த கதை:

காலம் கனியும் வேளை தானாக வந்தது. உபதலைவர் இறந்த வேளை இந்தப் பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப் படவில்லை. பின்னர் செயலாளரும் மரணமடைந்தார். உதவிச் செயலாளர் மட்டுமே இருந்தார். தலைவர் கொழும்பிலே இருந்தார். அந்த வருடம் கொடியேற்றக் கூட்டம் கூடிய போது தலைமை தாங்க ஒருவரும் இருக்கவில்லை. முகாமைக்காரர் பலரும் சமூகமளித்து இருக்கவில்லை. முகாமையாக இருந்த நானும் ஒரு கல்யாண வீட்டிற்கு சென்று விட்டு வரலாம் என்று வந்த போது கூட்டம் கலைந்திருந்தது. அங்கிருந்தவர்களிடம் விடயத்தைக் கேட்டுவிட்டுத் திரும்பினேன்.

அன்று இரவு ஒரு விசேச அறிவித்தல் ஊரெங்கும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப் பட்டது. அடுத்த நாள் மாலை அனைத்து முகாமைக்காரர்களும் கூட்டத்துக்குக் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும் என்றும் வராதவர்கள் நீக்கப் பட்டு புதியவர்கள் நியமிக்கப் படுவர் என்று கடும் தொனியில் இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிவித்தல். அவ்வாறு இல்லையெனில் அந்த வருடம் கோயில் கொடி ஏறி இருக்க முடியாது. இது **'இவர்களின்'** வேலையாகத் தான் இருக்க வேண்டும் என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

உடனடியாகப் புதிய நிர்வாகம் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டு ஆலய கொடியேற்றத்துக்கு உடனே நடவடிக்கை எடுக்கும் படி பணிக்கப்பட்டது. அப்போது ஆலயத் தலைவாராக நானே நியமிக்கப்பட்டேன். கையில் கோயில் பணம் எதுவும் இருக்க வில்லை. காகிதாதிகள் இருக்கவில்லை. இவற்றிற்கெல்லாம் கடன் பட்டு வேலைகளைத் துரிதகதியில் செய்வித்தேன்.

வழக்கம் போல் கொழும்புத் தலைமை ஏழெட்டு நாட்களின் பின்னர் வந்தனர். கோயில் நடைமுறையைப் பார்த்த பின்னர் மட்டக்களப்பில் சென்று முறையிட்டனர். ஆனால் விசாரணைக்கு அது ஊருக்கே வந்தது. திடீரென என்னை மாரியம்மன் ஆலய முன்றலிற்கு வருமாறு எங்கள் ஆலய ஒலிபெருக்கியிலே அறிவிக்கப்பட்டது. அங்கு நான் சென்ற போது பழைய நிர்வாகத்தினரும் மற்றவர்களும் இருந்தார்கள்.

நடந்ததைக் கேட்டார்கள் நான் விபரித்தேன். நிர்வாகத்தினர் நம்பவில்லை. நானே ஏதோ நாடகம் நடத்தியதாகக் கூறினர். அதன் பின்னர் அவர்களுக்குள் விவாதம் நடந்தது. நான் ஒன்றும் பேசவில்லை. இந்த வருடம் உற்சவத்துக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உற்சவம் நடந்து முடியும் வரை நீங்கள் எந்தத் தடையும் போடக் கூடாது. முடிந்ததும் நடக்கும் எட்டாம் நாள் கூட்டத்தில் நீங்கள் வந்து பொறுப்பேற்கலாம் என்று கூறியதுடன் அப்போதைய தலைவர் வந்து பொறுப்பேற்பதென்றால் தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டே வரவேண்டும் என்றும் கூறினர்.

பின்னர் தான் தெரிந்தது புதிய நிர்வாகத்தை தெரிவு செய்தது மறுமலர்ச்சி சனசமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களே என்றும், அவர்கள் கோயிலின் நன்மை கருதிச் செயற்பட்டனர் என்பதும்.

அவர்கள் அதன் பின்னர் வரவே இல்லை. 1990 ஆண்டுவரை நானே தலைவராக இருந்தேன். இப்போது எல்லாப் பதவிகளும் தானே ஊருக்குள் வந்து விட்டது. நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எவரும் இப்போது பதவியில் இல்லை.

தற்போதைய தலைவராக பாண்டிருப்பைச் சேர்ந்த திரு.நா.இராஜேந்திரன் இருந்து வருகிறார். இவரும் பணிக்கொணா குடியைச் சேர்ந்தவரே. கிட்டத் தட்ட 60 ஆண்டு காலப் பிரச்சினைக்கு தீர்வு தன்னாலே கிடைத்து விட்டது.

நான் தலைவராக வந்த உடனே ஆலய வெளி வீதிக்கு மின்சாரம் இலவசமாகப் பெற்றுக் கொடுத்தேன். அது இன்றளவும் இருக்கிறது. தொடர்ந்து இருந்த போது அம்மன், தீக்குழிக்கு முன்னால் எழுந்தருளும் மேடையை அலங்கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மைகளுடன் புனரமைப்பு செய்து ஆரம்பித்து வைத்தேன். அதன் பின்னர் வந்த திரு. பேரின்பராஜா தலைவராக இருந்த போது சிறு ஆலயங்கள் அனைத்தையும் சிற்ப வேலைப் பாடுகளுடன் தற்காலத்துக்கு ஏற்றவாறு கட்டி முடித்தார்.

இப்போது இருக்கும் தலைவர் திரு. இராஜேந்திரன் அவர்கள் பிரதான ஆலய புனரமைப்பு வேலைகளைத் செய்து வருகின்றார். பாண்டிருப்புக்கு தலைமையைக் கேட்டதன் காரணத்தை இப்போது கோயிலைப் பார்ப்பவர்கள் புரிந்து கொள்வர். அவர்கள் இருக்கும் வரை கடன் பட்டு கோயிலுக்கு வெள்ளை அடித்ததைத் தவிர வேறேதும் செய்து அறிந்திருக்க மாட்டார்கள்.

இப்போதய ஆலய நிர்வாகம் கோயில் புனரமைப்பு வேலைகளைச் செய்து வந்தாலும் பல வருடங்களாக முடிவுறாமல் இருக்கின்றது. அத்துடன் கணக்கு அறிக்கை காட்டப்படாமலும் இருக்கின்றது. இதனால் ஊர் மக்களுக்கு இந்த நிர்வாகத்திலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. பட்டாணி கோவில் வரலாறு

பட்டாணியர் என்போர் முஸ்லீம்களாவர். பட்டாணியர்களுக்கு ஏது கோவில்? எங்கே இருக்கிறது? என்று வியப்பாக இருக்கிறதா? ஆமாம் இது பாண்டிருப்பில் இருக்கும் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய வளாகத்தினுள்ளே தான் இருக்கிறது என்றால் வியப்பாக இருக்கும். ஆனால் உண்மை அது தான்.

**பட்டாணியர் எப்படி வந்தனர் என்று பார்ப்போம்.**
மட்டக்களப்பிலே முன்னர் ஒரு காலத்திலே திமிலர்களுக்கும் முற்குகர்களுக்கும் சண்டை மூண்டது. அதனை அப்போதைய திக்கதிபரால் தீர்க்க முடியவில்லை. சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது. இதனால் இந்தியாவில் இருந்து பட்டாணியரை வரவழைத்து திமிலரின் கொட்டத்தை அடக்கினர் முற்குகர்கள். திமிலர் என்போர் மீன் பிடிப்பவர் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்டாணியர் அவர்கள் கொட்டத்தை அடக்கிய பின்னர் இவர்களின் உதவி பின்னரும் தேவைப்படலாம் என்று கருதியோ என்னவோ அவர்களைத் திருப்பி அனுப்பாது பாண்டுறுப்புமுனை என்னும் ஊருக்கு அண்டிய பகுதிகளில் அவர்களைக் குடியிருத்தினான். அவர்களுக்கு தமிழ்ப் பெண்களை மணம் முடித்தும் வைத்தான்.

அவர்களுக்கு ஒரு வணக்கத்தலம் தேவை எனப்பட்ட போது பாண்டுறுப்புமுனையில் இருந்த ஒரே ஆலயப் பிரதேசமான திரௌபதி அம்மன் ஆலய வீதியினுள்ளே பட்டாணி மேடை ஒன்றை அமைத்து அவர்களுக்கு வணங்கும் இடமாக அமைத்துக் கொடுத்தான். அன்று முதல் இது பட்டாணி மேடை என்றே அழைக்கப்பட்டு வந்தது.

அது புதிப்பக்கப்பட்டு இன்று அது ஆலயமாக இருக்கின்றது. அதனுள் ஒரு ஒளி விளக்கு மட்டுமே இருக்கின்றது. வேறு எந்த விக்கிரகங்களும் இல்லை.

நான் அறிந்த காலம் முதல் இங்கே முஸ்லீம்கள் வெளி வீதியில் வந்து நின்று இந்த ஆலயத்துக்கு உப்பு, கோழி என்பன தங்கள் நேர்த்தியாக ஒப்படைத்ததை நேரே கண்டிருக்கிறேன். இதற்கான ஆதாரத்தை மட்டக்களப்பு மான்மியம் முதற் பதிப்பில் காணலாம். இது பற்றி ஒரு கட்டுரையை நான் 1990க்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்துமதி சஞ்சிகையில் வெளியிட்டு இருக்கிறேன். அதன் பிரதி இப்போது கிடைக்கவில்லை.

இதில் அற்புதமான விடயம் என்ன வென்றால் இன்றும் ஆலயத்தைச் சுற்றி பூசை இடம் பெற்று வரும் போது இந்த ஆலயத்துக்கு முன்னாலும் நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகர்கள் பாடி பூசை செய்து வருகிறார்கள். இந்த கோயில் சுற்றிப் படித்து வரும் பாடலில் அந்த ஆலயத்துக்கு முன்னால் நின்று படிக்கும் பாடல் நாகூர் ஆண்டவனைப் பற்றிக் குறிப்பிடுதலைக் காணலாம்

அது இவ்வாறு அமையும்

**பட்டாணி தோத்திரம்:**

**லாகில்லாகா இல்லல்லா முகம்மது ரசூரல்லா**
**மக்கம் தொழுதபிள்ளை முகமது**
**வேதம் தொழுதபிள்ளை கொத்துவா**
**வேதமல்லோ பட்டாணியார் றாகூத்தன்**
**நாகூறாப் பள்ளியிலே மீராசாய்வு**
**நல்லவரம் வேறுபெற்றார்**
**ஐந்துநேரத் தொழுகை பட்டாணியார்**
**அயரார் ஏழு நாளும்**
**இந்தத் தருமருடைய வாசலுக்கு**
**பட்டாணியார் குணங்கொண்ட மந்திரியாம்**
**காவல் பயணமெண்டு தருமர்**
**கட்டளையும் தான் கொடுத்தார்**

(இந்தப் பாடல் ஒவ்வொரு சுற்றிலும் தினசரி பாடப்படுவதுண்டு.)

தருமருடைய வாசலுக்கு பட்டாணியார் குணங்கொண்ட மந்திரியாம் என்றும் – காவல் பயணமெண்டு தருமர் கட்டளையும் தான் கொடுத்தார் – என்றும் வருவதில் இருந்து பட்டாணியாரின் கடமை இதில் வெளிப்படுகிறது எனலாம்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. குடிகளின் வரலாறு

பாண்டிருப்பு ஸ்ரீ துரோபதை அம்மன் ஆலயம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு ஆலயமாகும். இந்த ஆலயத்தின் பூசை – திருவிழாக்களை நிறைவேற்றுவதற்காகவும் ஒவ்வொரு நாள் பூசையும் குடி வழியும் சாகியத்தின் வழியும் பிரித்தளிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். பண்டு தொட்டு இந்த வழிமுறை தவறாது ஆலய பூசைகள் இன்றுவரை நடைபெற்று வருகின்றன. இதுவே இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

**இவ்வாலயத்தில் பின் வரும் குடிகள் இடம் பெறுகின்றனர்.**

1. **வீரச்சோலை வேளாளர் குடி**
2. **பெத்தான் குடி**
3. **பணிக்கொணா குடி**
4. **வெள்ளரசன் குடி**
5. **மூங்கில்சோலை வேளாளர் குடி**
6. **சருவிழி குடி**
7. **படையாண்ட குடி**
8. **மழுவரசன் குடி**
9. **சின்ன மடவன் குடி**
10. **சங்கரப்பத்தான் குடி**
11. **மொட்டைச்செட்டி வேளாளர் குடி**
    **(பணிக்கொணா குடிக்கு இரண்டு பூசைகள் உண்டு)**

இவற்றைவிட பூசைகள் நாவிதர் சமூகம், சாண்டார் சமூகம், வண்ணார் சமூகம், தட்டார் சமூகம் என்பவர்களுக்கும் இருத்தலைக் காணலாம்.

இக்கோயிலின் நிர்வாகம் மற்றக் கோயில்களைப் போல் காலிங்கா குடிக்கு முதன்மை அளிக்கப்படாமல், (காலிங்கா குடிக்குப் பூசை இல்லை) முற்குகர் வகுப்பில் ஒன்றான பணிக்கொணா குடிக்கே வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம். அதற்குக் காரணம் இக் கோயிலை ஆரம்பித்த தாதன் என்பவனால் எழுதப்பட்ட கல்வெட்டாகும். இது தாதன் கல்வெட்டு என்று அழைக்கப் படுகின்றது.

**''பத்ததி போற்காட்டிப் பணிக்கன் குலத்தோர்க்கு**
**உற்ற புகழ் மேவ உங்களுக்கே முன்னீடு**
**ஈந்தேன் னிலங்கை எங்கு முயர்ந் தோங்க''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி ஆலய பரிபாலனத்தை தாதன் பணிக்கர் குலத்திடமே ஒப்படைத்திருக்கின்றான். அன்று முதல் இன்று வரை இவ்வாலய பரிபாலனம் முறை தவறாது நடப்பதும், பணிக்கொணா குடியிடமே இருப்பதும் இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

கல்வெட்டிலே பணிக்கொணா குடி என்பது பணிக்கன் குலம் என்று கூறப்பட்டுள்ளது நோக்கற் பாலது. இதே கல்வெட்டில் இறுதியில் கண்டியை ஆண்ட விமலதருமனென்னும் அரசன் இவ்வாலயத்தின் சிறப்புக்களை, அருமை பெருமைகளை "பணிக்கர் குலத்ததிப னேந்தலிடம்" கேட்டு அறிந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

சாதித் தெய்வக் கல்வெட்டிலும் நன்மை தீமை கும்ப வரிசை கூறுவதிலும்:

**"எதிர் நின்ற பணிக்கர் குலம் இவ்வரிசை"** என்று வருகின்றது.

இவ்வாறு பணிக்கொணா குடி பல இடங்களிலும் பணிக்கன் குலமென குறிப்பிட்டிருத்தலை நோக்கும் போது, இக் குடியினர் முற்குக வகுப்பில் பெரும் பான்மையாகவும் முதன்மைத் தானம் வகித்தவர்களாகவும் இருக்கலாம் என்று கருத வேண்டி இருக்கிறது. "முற்குகர் வன்னிமை" என்னும் கல்வெட்டும் இதனை நிரூபணம் செய்கின்றது. இதிலிருந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட குடி, குலப் பெருமைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பணிக்கணார் குடி வங்கர் குலம். இவர்களுக்கு பணிக்கள் என்று வந்ததும், வங்கர் என்று வந்தது. தேசப் பெயர் வங்கர், குலப் பெயர் பணிக்கர். இவர்கள் சாஸ்தியார். ஆரிய குலம் இவர்களுக்கும் கலிங்கருக்கும் கொள்வன கொடுப்பன. இதனை விரிவாக மட்டக்களப்பு பூர்வசரித்திரம் கூறும்.

பணிக்கொன குடி என்பதும், பணிக்கர் குலம் என்பதும், வங்கர் குலம் என்பதும், பணிக்கன்னார் என்பதும் இவர்களையே சாரும் என்பதை அறிந்து கொள்க.

பணிக்கொணா குடியினரே ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்திலும், திருக்கோவில் வேலாயுத சுவாமி கோவிலிலும் தலைவராக வரும் தகுதியுடையவர் என்பதினால் அக் குடி பற்றி சிறிது விரிவாக ஆராய்ந்தோம்.

**திருக்கோவில் வேலாயுத சுவாமி கோவிலிலும், சித்தி விநாயகர் கோவிலிலும் நடைமுறையில் பின்வரும் குடிகள் இருக்கின்றன.**

1. **கண்டடங் குடி – இது இரண்டு பிரிவாக உண்டு**
   **(அ) வெள்ளைக் கண்டடங் குடி**
   **(ஆ) கறுத்த கண்டடங் குடி**
2. **சருவிலி குடி**
3. **வைத்தினா குடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பணிக்கணா குடி
5. செட்டி வேளாளர் குடி (செட்டி குடி எனவும்)
6. குருக்கள் குடி

இவற்றில் வெள்ளைக் கண்டங் குடி, சுருவிலி குடியைச் சேர்ந்தவர்களே கோவில் வண்ணக்கராகவும், பணிக்கணா குடியைச் சேர்ந்தவர்களே தலைவர்களாகவும் காரியதரிசியாகவும், கறுத்த கண்டங் குடியைச் சேர்ந்தவர்கள் பொருளாளராகவும் வரவேண்டும் என்பது நியதியாக வகுக்கப் பட்டுள்ளது.

**இதே போன்று தம்பிலுவில் கண்ணகையம்மன் கோவிலில் பின்வரும் குடிகள் உண்டு.**

1. கட்டப் பத்தங் குடி
2. வேடர் குடி
3. சிங்களக் குடி
4. பட்டி மோட்டம்மன் குடி
5. 60 முன்னங்கைச் சவடி குடி

இங்கேயும் பின்வரும் நியதி கடைப்பிடிக்கப்படுவதைக் காணலாம். வெள்ளக் கட்டப் பத்தன் குடியைச் சேர்ந்தவர்கள் வண்ணக்கராகவும், சிங்களக் குடியில் தலைவர் பதவியும் 60 முன்னங்கைச் சவடி குடியைச் சேர்ந்தவர்கள் காரியதரிசியாகவும் வரலாம்.

இதுவரை நாம் பார்த்த குடிகளைத் தொகுத்தால் மட்டக்களப்பில் வழக்கிலுள்ள குடிகள் என்னென்ன என்றும், எத்தனை என்றும் தெரிய வரும். இவை பல்வேறுபட்ட பிரதேசங்களில் நடைமுறையில் இருந்தாலும் இவைகளனைத்தும் இன்னும் மட்டக்களப்பில் வழக்கிலுள்ள குடிகளாகும். பல பகுதிகளிலுமுள்ள எல்லா குடிகளையும் இங்கு தொகுத்துப் பார்ப்போம்:

1. கண்டப் பத்தங் குடி (இதில் இரண்டு உள்ளது என்று பார்த்தோம்
2. சருகுபில்லி குடி அல்லது சருவிலி குடி
3. கட்டப் பத்தாங் குடி
4. சங்கரப்பத்தான் குடி
5. கவுத்தன் குடி (இதில் 2 உள்ளது என்று பார்த்தோம்)
6. அத்தியா குடி
7. பொன்னாச்சி குடி
8. வயித்தி குடி அல்லது வச்சினா குடி அல்லது வைத்தினா குடி
9. கோப்பி குடி
10. போக்கன் குடி
11. செட்டி குடி அல்லது செட்டி வேளாளர் குடி
12. உலகிப் போடி குடி
13. காலிங்கா குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. படையாண்ட குடி
15. பெத்தாண்ட குடி
16. பணிக்கணா குடி
17. கச்சினா குடி
18. தனஞ்செனான் குடி அல்லது தனஞ்செயன் குடி
19. வீரச்சோலை வேளாளர் குடி
20. வெள்ளரசன் குடி
21. வேட வேளாளர் குடி
22. மூங்கில்சோலை வேளாளர் குடி
23. மழுவரசன் குடி
24. சின்ன மடவன் குடி
25. மொட்டைச் செட்டி வேளாளர் குடி
26. குருக்கள் குடி
27. சிங்களக் குடி

''பதினெண் குடி வேளாளர்'' என்று தொல்காப்பியத்தில் காணப்படுவதாக மட்டக்களப்பு தமிழக ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இங்கே இதுவரை 27 குடிகளையும் சில பிரிவுகளையும் கண்டோம்.

ஆசாரிகள் கல்வெட்டின்படி சோழ அரசன் **''பற்பல கிரண முறை சேமமொடு ஐந்தைந்து குடிகள்''** என்று இங்கு குடிகளை வகுத்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றது. இதன்படி 25 குடிகளை சோழ அரசன் வகுத்து இருக்கிறான்.

இவை சில இடத்துக்கிடம் மாறுபட்டுத் திரிந்து வேறு பெயரில் வழங்கலாம் என்பது சில பெயர்களில் இருந்து விளங்குகின்றது. இதை விடச் சில பகுதிகளில் கோவில் தேவைக்கேற்ப பல புதிய பிரிவுகளையும் உண்டாக்கியிருக்கலாம்.

பணிக்கொணா குடியென்று ஒரேயொரு குடியே இருக்கின்றது. அதுவே பணிக்கர் குலமென்றும் அழைக்கப்பட்டிருக்கின்றது. சிலர் விதண்டாவாதம் செய்வது போல் வன்னிமை பணிக்கொணா குடி என்று ஏதும் எங்குமில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டி இருக்கின்றது. தாங்கள் நினைத்த மாதிரி குடிகளை அழைக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர். அது சாத்தியமில்லை. குடிகளின் வரலாற்றை அறிந்தவர்கள் இதை ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை.

குடிகளின் வரலாறு பற்றி நான் தொகுத்து வைத்திருப்பதை இங்கு குறிப்பிட்டால் அதுவே ஒரு நூலாகிவிடும் ஆகவே அதனை ஒரு தனி நூலாக வெளியிடலாம் எனக் கருதி இத்துடன் நிறுத்துகிறேன். இறுதியாக கடற்கரைப்பள்ளி வாசல் குடிகளை மட்டும் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது குடிகளைப் போன்று கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையில் பின்வரும் குடிகள் காணப்படுகின்றன. முஸ்லீம் மக்களும் தமிழ் மக்கள் போன்று தமது பள்ளிவாசல் பணிகளுக்கு குடிமுறைகளைப் பின்பற்றி இருப்பதை இதன் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

1. மரைக்காண்ட குடி
2. **வெள்ளரசன் குடி**
3. உந்தப்பிள்ளை குடி
4. கொசுக்கட்டை குடி
5. ராசாப்பிள்ளை குடி
6. ஆலிம் குடி
7. லெப்பை குடி
8. **பொன்னாச்சி குடி**
9. **பணிக்கனா குடி**
10. **படையாண்ட குடி**
11. காம்பாறாச்சி குடி
12. ஓடாவி குடி
13. நெயினா ஓடாவி குடி
14. **சங்கரப்பத்தான் குடி**
15. மாந்தறா குடி
16. யாகுவக் குடி

இதில் பதினாறு குடிகள் இருப்பதைக் காணலாம். இதில் ஐந்து குடிகள் தமிழ் குடிகளின் பெயர்களைக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இதிலே தமிழ்க் குடிகள் இருப்பதைக் காட்டவே குறிப்பிட்டேன்.

மேலும் விபரங்களை குடிகளின் வரலாறு என்னும் நூலில் பார்ப்போம்.

கிழக்கிலுள்ள ஆலயங்களில் எல்லாம் குடி முறைப்படியே பதவிகளும் பூசைகளும் நடை பெற்று வருகின்றன.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. பஞ்சாயத்து சபை

நீண்ட வரலாற்றையும் பரம்பரையைக் கொண்ட இவ்வாலயம் பல முக்கிய நடவடிக்கைகளை கொண்டிருந்திருக்கிறது. அதில் ஒன்று பஞ்சாயத்து சபையை இந்த ஆலயம் நடத்தி வந்திருக்கிறது என்பதாகும். இதைப் பலரும் அறிந்திருக்கவில்லை.

நான் தலைவராக வந்த பின்னர், ஆலய பெட்டகங்களின் திறப்பு கிடைத்த பின்னர் பார்த்த போது அதிலே பஞ்சாயத்து சபை நடத்தியதற்கான சான்றுகள் கிடைத்தன. இந்த ஆலயமே ஊரிலே பெரிய ஆலயமாகும். இதைவிட இந்த நேரத்தில் வேறு ஆலயங்கள் இருக்கவில்லை. ஏனைய ஆலயங்கள் பின்னர் கட்டப்பட்டவையே. இந்த ஆலயத்தில் தலைவர் மூலமாக ஊர் நிர்வாகம் நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

இதற்கு உடந்தையாக ஊர்ப்போடியார் என்னும் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். நான் அறிந்த வரை ஊர்ப்போடியாராக இருந்தவர் பணிக்கொணா குடியைச் சேர்ந்த அமரர் திரு. கிருஷ்ணபிள்ளையாகும். அவர் சிறந்த ஆளுமையுள்ளவர். அதிகாரம் செய்யக் கூடியவருமாவார். அவர் தான் சாகியங்கள் குடிகளுக்கு செய்யும் சேவைக்கு கோவிலால் தீர்மானிக்கப்படும் ஊழியத்துக்கான செலவை குடிமக்களிடம் இருந்து பெற்றுக் கொடுப்பவர். அவருக்குப் பின்னர் அவருடைய மருமகன் நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த இடத்துக்கு இன்னும் சரியான ஒருவர் கிடைக்கவில்லை என்பதே பொருந்தும்.

தலைவருடன் சேர்ந்து இவரும் பஞ்சாயத்து சபையை நடத்தியிருக்கலாம் என்பது என் அபிப்பிராயமாகும். எதிராளிகளை, சாட்சிகளை அழைக்கும் அழைப்பிதழ்கள் அச்சிட்டு இருந்ததைக் கண்டேன். அதில் பஞ்சாயத்து சபை என்ற தலைப்பிட்டு இருந்தது. இது எதைக் காட்டுகின்றது என்றால் ஆலய நிர்வாகம் மட்டுமின்றி ஊர் நிர்வாகமும் ஆலயத் தலைவரினாலேயே நடத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதாகும்.

ஆலயத் தலைவர்கள் ஊரில் இல்லாது வெளியூரில் வசிக்கத் தொடங்கியதும் இந்த நிலமை மாறியிருக்கலாம் என்று எண்ண வேண்டி இருக்கிறது.

ஆலய உற்சவ காலத்தில் எவ்வாறு ஆலய நிர்வாக எல்லைக்குள் தலைவரின் செயற்பாடு இருந்ததோ அதே மாதிரி ஊரிலும் அனைத்துக் குடிமக்களினதும் சாகியங்களினதும் பிரச்சினைகளை தலைவரே தீர்த்து வைத்திருக்கின்றார் என்பதும் புலனாகிறது. காலப்போக்கில் தரமற்றவர்கள் குடும்ப உரிமையைக் கொண்டு நியமிக்கப்பட்டதினாலும் அவர்களுக்கு இவற்றை எல்லாம் கவனிக்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேரம் இல்லாது போனதாலும் இது கைவிடப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

இறுதியாக இருந்து மூன்று தலைவர்கள் ஒருவர் பொறியியலாளர், மற்றர் கணக்கியலாளர், மற்றவர் பொலீஸ் உத்தியோகத்தர், இவர்கள் மூவரும் வெளியூரிலே வசித்ததால் இவற்றைக் கவனிக்க நேரம் இல்லாது போயிருக்கலாம். இவர்கள் வருவது கடைசி சில தினங்களில் மட்டுமே. அது வரை கோயிலை நடத்துவது உதவித் தலைவரே. அவர் எதற்கும் பதில் தராத தலைவர். அவரால் கூட்டத்தை கொண்டு நடத்த முடியாதிருக்கும். கூச்சல் குழப்பத்திற்கு மத்தியில் கூட்டத்தை முடித்து விட்டு எழுந்து நடந்து விடுவார்.

இப்படிப்பட்டவர்கள் எவ்வாறு பஞ்சாயத்து சபையை நடத்த முடியும் அதனால் இந்த நடைமுறை வழக்கொழிந்து போயிருக்கலாம். அது மட்டுமின்றி முன்னர் போல் மக்கள் இவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இப்போது இல்லாதிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆயினும் ஒரு பஞ்சாயத்து சபையை அமைத்து நடத்துவது சிறுசிறு பிரச்சினைகளை நமக்குள்ளே தீர்த்து வைப்பதற்கு நல்ல உபாயம் என்று கருதுகிறேன். இப்போது இருக்கும் தலைமை இதற்கு நடவடிக்கை எடுத்தால் நல்லது. ஏனெனில் காலத்துக்குக் காலம் பலவித நியாயாதிக்க சபைகள் நியமிக்கப்பட்டு நடந்த போதும் சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தாலும் அவற்றால் தொடர முடியவில்லை. அவற்றைப் போல் அல்லாது கோவில் நிர்வாகம் நிலையாய இருப்பது. அது மட்டுமின்றி எல்லாக் குடிமக்களினதும் முகாமைகள் அங்கம் வகிப்பதனால் மக்கள் கட்டுப்படுவர் என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயத்திற்குப் பின்னர் பாண்டிருப்பில் கட்டப்பட்டிருக்கும் ஆலயங்களாவன

01. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.
02. ஸ்ரீ அரசடி அம்மன் ஆலயம்.
03. ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலயம்.
04. ஸ்ரீ பெரிய தம்பிரான் ஆலயம்.
05. ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்.
06. ஸ்ரீ முருகன் ஆலயம்.
07. ஸ்ரீ மகா விஷ்னு ஆலயம்.
08. ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயம்.

இனி மேலும் வெவ்வேறு ஆலயங்களைக் கட்டாமல், இருக்கும் ஆலயங்களை சிறப்புற நடத்திச் செல்வது நல்லது எனக் கருதுகின்றேன்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. மருமக்கள் மான்மியம்

**இவ்வாலயத்தில் பின்வரும் நிர்வாக உத்தியோகத்தர்கள் சேவையில் இருக்கிறார்கள் அவர்களாவன:**

1. தலைவர்
2. உப தலைவர்
3. செயலாளர்
4. உப செயலாளர்
5. பொருளாளர்
6. வண்ணக்கர்
7. ஊர்ப்போடியார்
8. **முகமைக்காரர்கள்** – 15 குடிகள் சாகியங்களிலிருந்து இருந்து 16 பேர் நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்படுவர். (பணக்கொணா குடியில் இருந்து இருவர் – குடி விபரங்கள் மேலே தரப்பட்டுள்ளது)

இவர்கள் அனைவரும் முன்னர் கூறப்பட்ட படி தத்தம் குடிகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இவர்களில் யாராவது நீங்க வெற்றிடம் ஏற்படும் போது அந்த இடத்துக்கு அவருடைய மருமகன் தெரிவு செய்யப்படுவர். இது எல்லாப் பதவிகளுக்கும் பொருந்தும். வழக்கு தீர்ப்பிலும் இதனை நீதிபதியவர்கள் உறுதிசெய்துள்ளனர்.

ஏன் இவ்வாறு மருமகன் தெரிவு செய்யப் படுகின்றார்? மகன் தெரிவு செய்யப்படாமல்? என்பது நியாயமான கேள்வி தான். தனது பரம்பரை வரவேண்டும். அது மாறுபடாமல் இருக்க வேண்டுமானால் அது தனது அக்கா அல்லது தங்கையின் மகனே வரவேண்டும். குடி வழிகள் தாய்வழியே பார்க்கப்படுகின்றன. "வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்பார்கள். இதற்கொப்ப குடிவழி தப்பாதிருக்கும் பொருட்டு தாய்வழி மூலம் இதனைத் தெரிவு செய்து வரும் வழக்கம் பண்டு தொட்டு நிலவி வருகின்றது. இதனால் பாரம்பரிய பழைய முறைகள் இன்றும் வழுவாமல் நிலைபெற்று நின்று வருகின்றது.

**உதாரணமாக:** ஒரு பணிக்கொணா குடிப் பெண்ணும் ஒரு சங்கரப்பத்தான் குடிக் கணவனும் மணம் முடிக்கும் போது அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் பணிக்கொணா குடிக்கு உரியவராகி விடுவர். தந்தை மட்டுமே சங்கரப்பத்தான் குடிக்கு உரியவராக இருக்க தாயும் குழந்தைகளும் பணிக்கொணா குடிக்கு உரியவர்களாக இருப்பர். இப்போது இந்தப் பெண்ணின் சகோதரன் ஒருவன் பதவியில் இருந்து நீங்கும் போது அந்த வெற்றிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுடைய ஆண் மகன் ஒருவனால் நிரப்பப்படும்.

திருமணம் முடிக்கும் போது இதைப் பற்றி யாருமே சிந்திப்பதில்லை. ஆலய உற்சவத்தின் போதும் வேறு நிர்வாகப் பிரச்சினைகள ஏற்படும் போது மட்டுமே இது கவனிக்கப்படுகின்றது. சந்ததி வளர்ப்பது பெண் தான்.

இவ்வாறு ஒரு மருமகன் இல்லாத போது வேறு குடும்பத்தில் இருந்து ஒரு மருமகன் முறையானவனோ அவ்வாறு இல்லாத போது மகனையே நியமிக்க வேண்டி ஏற்படுவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பம் மிகக் குறைவு. அதிகமாக மருமகனையே நியமிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. அதனால் இது மருமக்கள் மான்மியம் என்று அழைக்கப் படுகின்றது.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. திரௌபதையம்மன் வழிபாடு (உடப்பூர்)

## – ஓர் அறிமுகம் –

**ஆக்கம்: செல்வி. அம்பிகை வேல்முருகு B.A.(Hons)**

இஃது உடப்பூர் தீ மிதிப்பு விழா சிறப்பு மலரிலிருந்து எடுக்கப்பட்டது. இம் மலரை ஆக்கியோருக்கும் அமைப்பாளர்களுக்கும் இக்கட்டுரை ஆசிரியருக்கும் நன்றி.

..........................

இதிகாசமாகவும் அதே நேரம் இந்தியக் காப்பியமாகவும் கருதப்படுகின்ற மகாபாரதத்தின் கதாநாயகியகத் திரௌபதை விளங்குகின்றாள். துருபத மன்னன் குழந்தை வரம் வேண்டி மேற்கொண்ட வேள்வித் தீயிலிருந்து இவள் வெளிப்பட்டவள் என்று கருதப்படுகின்றது. திரௌபதைக்கு வைதேகி, பாஞ்சாலி, கிருஷ்ணி, யக்னசேனி, பரிஷதி என வேறு பல பெயர்களும் வழங்கப்படுகின்றன.

பராக்கிரமம் மிக்க உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள் திரௌபதை. சந்தர்ப்ப வசத்தால் பாண்டவர்கள் ஐவரையும் இவள் மணக்க வேண்டி ஏற்படுகின்றது. திரௌபதைக்கென்று நடாத்தப்பட்ட சுயம்வர தினத்திலே அர்ச்சுனன் அவளைக் கரம்பற்றி வீட்டுக்கு அழைத்து வந்து தாயை அழைத்து "அம்மா இன்று நாங்கள் உங்களுக்கு ஒரு சிறந்த பொருளைக் கொண்டு வந்துள்ளோம். வந்து பார்" என்று அழைக்கின்றான். அதற்கு குந்தி "பார்க்க என்ன இருக்கிறது? எதுவானாலும் ஐவருமாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்." என்கிறாள்.

பிறகு தான் வந்திருப்பது பெண் என்று அவளுக்குத் தெரிகிறது. இருப்பினும் தன் வாக்கைப் பொய்யாக்காது ஐவரையும் அவளை மணக்கும்படி கூறுகிறாள். இதுவே திரௌபதை ஐவருக்கும் உரியவளாகுவதற்கு முக்கிய காரணமாகிறது. ஐந்து சகோதரர்களுக்கு மனைவியாக இருந்தாலும் திரௌபதை அவர்களது ஒற்றுமைக்கும் உறுதிக்கும் காரணமாக இருந்தாள். ஆனால் மகாபாரதத்தின் முடிவுவரை திரௌபதை பலரினாலும் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகின்றாள்.

திரௌபதைக்கு ஏற்பட்ட துன்பம் திரௌபதை என்ற பாத்திரப் படைப்பிலே மக்கள் ஈடுபாடு கொள்வதற்குக்காரணமாக அமைந்தது. இந்த ஈடுபாட்டின் காரணமாகத் திரௌபதை தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரௌபதையம்மனாக வழிபடப்படுகின்றாள். தென் இந்தியாவில் பல பகுதிகளிலும், இலங்கையின் சில பகுதிகளிலும் இத்தகைய திரௌபதையம்மன் வழிபாட்டை இன்னும் நாம் காணக் கூடியதாக உள்ளது. பாரம்பரிய சக்தி வழிபாட்டின் தாற்பரியங்களை இத் திரௌபதையம்மன் வழிபாடு உணர்த்தி நிற்கின்றது.

திரௌபதியம்மன் வழிபாட்டின் தோற்றம் குறித்த வரலாற்றைச் சுருக்கமாக இங்கு நோக்குதல் அவசியம். கி.பி. 670 ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வந்த பல்லவ மன்னனான முதலாம் பரமேஸ்வரவர்மன் காலத்திலே போருக்கு ஏராளமான வீரர்கள் தேவைப்பட்டார்கள். எனவே ஊர் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டி அவர்களைப் போரிலே ஈடுபட வைப்பதற்காகக் கோயில்களிலே பாரதக் கதையை படிக்க இம்மன்னன் ஏற்பாடு செய்தான்.

இத்தகைய பாரதக் கதையைப் படிக்கச் செய்த பல்லவ மன்னன் காலத்திலேயே திரௌபதியம்மன் ஆலய வழிபாடு தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றும், தெய்வத்தோடு தொடர்பு படுத்தினால் தான் தன் முயற்சி வெற்றியடையும் என்ற நோக்கில் திரௌபதியம்மன் கோவில்கள் முதலாம் பரமேஸ்வரவர்மனால் நிர்மாணிக்கப் பட்டிருக்கலாம் என்றும் துளசி இராமசாமி ''தெருக்கூத்து'' என்ற தமது கட்டுரையில் கருதுகின்றார்.

பல்லவர் காலத்திற்கு முன்னர் ஊர்ப்புறங்களில் மக்கள் நாட்டுப்புற மரபுத் தெய்வங்களையே வணங்கி வந்தார்கள். இத்தகைய கோவில்கள் பல்லவர் காலத்தில் திரௌபதியம்மன் கோவில்களாக மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் துளசி இராமசாமி கூறுகின்றார். இத்தகைய வழிபாட்டு முறையே இந்திய மக்களால் இலங்கைக்கும் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள உடப்பு, முந்தல் ஆகிய ஊர்களிலும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மண்முனை, பாண்டிருப்பு, புளியந்தீவு, போரதீவு ஆகிய ஊர்களிலும் அமைந்துள்ளன. இத் திரௌபதையம்மன் வழிபாடு சடங்கு நிலைப்பட்ட வழிபாட்டு முறையாக விளங்குகின்றது. மேலும் இச்சடங்கு முறையில் நாட்டுப்புற அம்சங்களும் கூத்து அம்சங்களும் விரவிக் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் திரௌபதையம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய பாரதக் கதைப் படிப்பு தனித்தும் பிரிந்த நிலையிலும் கதாகாலேட்சேபமாகவும் (உடுக்கடிப்பாட்டு) தெருக்கூத்தாகவும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. ஆனால் இலங்கையில் இவ்வழிபாடு அதனுடைய பாரம்பரியத் தன்மையை இழக்காத வகையில் பாரதக் கதைப் படிப்புடன் தொடர்புறுத்தப்பட்ட நிலையிலே இன்றும் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாட்டார் இயலின் தன்மைகள் நிறையப் பெற்று ஒரே நேரத்தில் நாடகங்களாகவும் சடங்காகவும் நிகழ்த்தப்படுவதனாலேயே மக்களை இலகுவில் ஈர்க்கின்ற வழிபாட்டு விழாவாக இது காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதமும் இராமாயணமும் மகாகாவியங்களாகக் கருதப்பட்ட போதிலும், மகாபாரதத்தின் கதாநாயகியான திரௌபதை நாட்டுப்புற மக்களிடையே பெற்ற செல்வாக்கை இராமாயணக் கதாநாயகியான சீதையாற் பெற முடியவில்லை. என்பதை இங்கு நாம் மனங் கொள்ளல் வேண்டும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் திரௌபதைக்கென அமைக்கப்பட்ட கோவில்களிலும் பார்க்கச் சீதைக்கென அமைக்கப்பட்ட கோவில்கள் மிகச் சிலவே உள்ளன. இதற்கான காரணம் ஆராய்தற்குரியது.

சீதை திரௌபதை ஆகிய இருவரின் வாழ்க்கையும் ஒவ்வொரு வகையில் அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. மகாபாரதம் இராமாயணம் ஆகிய இரு இதிகாசங்களுக்கிடையில் எதிரிடையான பல வேற்றுமைகள் காணப்பட்ட காரணத்தால் கதாநாயகியான சீதை, திரௌபதை ஆகிய இருவருக்கிடையிலும் எதிரிடையான வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இருவரது கற்புக்கும் ஒவ்வொரு வகையிற் களங்கம் ஏற்படுகின்றது. சீதையை இராவணன் என்ற அரக்கன் இலங்கைக்கு தூக்கி வருகின்றான். இதனால் அவள் துன்பத்துக்கு ஆளாகின்றாள். ஆனால் அவளுடைய துன்பம் கற்புக்கு களங்கம் ஏற்படும் நிலையிற் தோன்றியதல்ல. சீதையை வாட்டுவது காதலினால் ஏற்படுகின்ற பிரிவுத் துன்பம். இராவணன் சீதையிடம் காதறபிச்சை கேட்டு இரந்து நிற்கின்றானேயொழிய அவளை எச்சந்தர்ப்பத்திலும் தீண்டவில்லை.

அதற்கு முற்றிலும் எதிரிடையானதாகத் திரௌபதையின் நிலை காணப்படுகின்றது. திரௌபதையின் துன்பம் யதார்த்தமானதாகவும் மனிதத் தன்மை கொண்டதாகவும் அமைந்துள்ளது. பாரதக்கதை முழுவதுமே திரௌபதை அவமானத்துக்கு மேல் அவமானம் அடைகிறாள். அவள் ஐந்து பேருக்கு மனைவியாக இருந்த போதிலும் விதவையைப் போன்றது அவளது நிலை. ஒவ்வொரு முறையும் அவள் அவமரியாதையை அனுபவிக்கும் போது அவளுடைய கணவர்களும் மாமனார்களும் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

சீதை எப்போதும் ஒரு உயர்வான பெண் பாத்திரமாகவே படைத்துக் காட்டப் படுகின்றாள். ஆனால் திரௌபதை மக்கள் பார்க்கும் படியாக வீதிவழியே துச்சாதனனால் பிடித்திழுத்து வரப்படுகின்றாள். சபையோர் கூடியிருக்கின்ற மன்றத்திலே துச்சாதனனால் ஆடை களைய முனைந்து அவமரியதை செய்யப்படுகின்றாள். இங்கு திரௌபதை என்ற பாத்திரத்தினூடாக மனித பலவீனங்களும் குரூரச் செயல்களும் உள்ளது உள்ளபடியே சித்தரிக்கப்படுகின்றன.

திரௌபதைக்கு நடந்த அநீதி சமுதாய நடப்புகளோடு இணைந்தும் பிணைந்தும் காணப்படுகின்றது. சீதைக்கு நடந்த அநீதி விசித்திரமானதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் கற்பனையாகவும் காணப்படுகின்றது. இதனாலே திரௌபதையின் துன்ப நிலை மக்கள் மனதில் மிக இலகுவில் இடம் பிடித்து விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரௌபதை போன்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலையுண்ட அல்லது தற்கொலை புரிந்து கொண்ட பெண்கள் சிலரின் நினைவாகத் தென்னிந்தியாவிலே திரௌபதையம்மன் கோவில்கள் தோற்றம் பெற்றுள்ளமையை நாம் காணலாம்.

இலங்கையில் உடப்பு திரௌபதையம்மன் கோவிலானது பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட கமலக்கன்னி என்ற பெண்ணின் நினைவாகவே எழுப்பப்பட்டுள்ளது என்பது கர்ணபரம்பரைக் கதையாகும். எனவே நாட்டுப்புற மக்கள் பாலியல் வன்முறை காரணமாகவே இறந்த தம் முன்னோர்களுட் சிலரைத் திரௌபதையுடன் தொடர்புபடுத்தித் திரௌபதியைத் தமக்குரிய தெய்வமாகப் போற்றி அவளுக்கென்று பல கோவில்களை எழுப்பினார்கள் எனலாம். இதுவே நாட்டுப்புற மக்கள் மத்தியில் திரௌபதை வழிபாடு அதிக அளவில் செல்வாக்குப் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

மேலும் திரௌபதையம்மன் வழிபாடு நாட்டுப்புற மக்களிடையே செல்வாக்குப் பெறுவதற்கு வேறும் சில காரணங்களை இங்கு சுட்டிக் காட்டலாம். மகாபாரதத்திற் பெண்கள் பலதாரமணம் செய்தல் எடுத்துக் காட்டப்படுகின்றது. திரௌபதை பஞ்ச பாண்டவர்கள் ஐவருக்கும் பொது மனைவியாக விளங்குகின்றாள்.

இவ்வாறு ஒரு பெண்ணை பல ஆண்கள் மணக்கும் முறை இந்தியாவின் பலபாகங்களிலும் இன்னும் நடைமுறையில் உள்ளது. வட இந்திய இமாலயப் பழங்குடிகளிடமும், தென்னிந்திய திராவிட இனப் பிரிவுகள் பலவற்றுள்ளும், நீலகிரி மலையில் வாழும் கோத்தர்கள், தோடர்கள், படகர்கள், வலைஞர்கள் முதலியோரிடமும் கேரளத்தில் நாயர், இரவான், கம்மாளர், தியன்கள் முதலியோரிடமும் பெண்கள் பலதாரமணம் செய்தல் இன்னும் நடைமுறையில் இருந்து வருதலை அறிய முடிகின்றது. தென் இந்தியாவிலுள்ள ஆரூர் வட்டாரத்தில் ஒரு சாதியினரிடையே சகோதரர்களைப் பலதாரமணம் செய்தல் இன்றும் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இக்காரணத்தால் வாழ்க்கையில் ஒருவன் — ஒருத்தி என்ற கொள்கையை வலியுறுத்தும் இராமாயணத்தைவிட பலதார மணத்தை ஆதாரமாகக் கொண்ட பாரதக் கதையானது இந்தியக் கிராமப்புற பிற்படுத்தப்பட்ட மக்களிடையே பெரிதும் செல்வாக்குப் பெற்றிருக்கலாம்.

மேலும் தென்னார்க்காடு, செங்கல்பட்டு முதலிய தமிழகத்தின் வட மாவட்டங்களிலே ஏராளமான திரௌபதையம்மன் கோவில்கள் உள்ளன. இக்கோவில்களுக்கு வன்னியர்கள் பூசாரிகளாக உள்ளனர். விழா எடுப்பதும் இவர்களே. தாங்களும் பாண்டவர்களைப் போல் நெருப்பிலிருந்து தோன்றியவர்கள் என்று வன்னியர்கள் கருதுகின்றனர். எனவே பாரதக் கதைக்கு இவர்கள் முதன்மை கொடுத்து திரௌபதையம்மனைத் தெய்வமாக வழிபடுகின்றார்கள். இங்கு பாரதப் பாத்திரங்கள் மக்களினால் தங்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றோடு பிணைத்து எண்ணப்படுவதனைக் காணலாம். இதே பண்பு இலங்கையிலுள்ள உடப்பு கிராம மக்களிடையேயும் காணப்படுகின்றது. தாம் பாண்டவர்களது வம்சத்தினர் என்று உடப்புக் கிராம மக்கள் பெருமையோடு கூறுவர். உடப்புத் திரௌபதையம்மன் கோவில் விழாவிலே படிக்கப்படுகின்ற பின்வரும் பாடல் இதனை உணர்த்தி நிற்கின்றது.

> **''குருகுலத் தாதிபன் தரும வீமன்**
> **கோவிந்த மைத்துனனாம்**
> **பரிமள நகுல சகாதேவன்**
> **பஞ்சமர் நாங்கள்''**

திரௌபதையம்மன் வழிபாடானது பாமர மக்களின் அன்றாட வாழ்வோடு கலந்த ஒன்றாகப் பாரதநாடு முழுவதும் பரவியுள்ளது. இலங்கையிலும் இது குறிப்பிடத்தக்க அளவில் தனது செல்வாக்கைச் செலுத்துகின்றது. அத்தெய்வத்தின் வழிபாட்டிற்கு உகந்த சிறப்பு நாளாகத் திங்கட்கிழமை கருதப்படுகின்றது. பெரும்பாலான திரௌபதையம்மன் கோவில்களிலே உட்புறத்திலே திரௌபதையம்மன் சிலையும், பாண்டவர் சிலையும், கிருஷ்ணர் சிலையும் காணப்படுகின்றன. திரௌபதையின் வாகனமாக அன்னப்பறவை கருதப்படுகின்றது.

திரௌபதையம்மன் கோயில்களில் ஆண்டுக்கு ஒருமுறை பதினெட்டு நாட்களுக்குத் தொடர்ந்து திருவிழா நடாத்தும் வழக்கம் உள்ளது. இந்நாட்களில் பாரதக் கதைப் படிப்பும் கூத்தும் நடத்தப்படும். கோயிலின் முன்புறத்திலே பாரதக் கதை படிப்பதற்கான மேடை ஒன்றினை அமைத்து பதினெட்டு நாட்களும் இரவில் சுமார் ஒன்பது மணிமுதல் ஒரு மணிவரை மகாபாரதக்கதையைத் தகுந்த இசை விற்பனர்களைக் கொண்டு சொல்லச் செய்கின்றனர். பாரதக் கதையைக் கூறுவோர் சில வேளைகளில் பாரதக் கதையைச் சாராத துணைக்கதைகளாக நகைச்சுவைக் கதைகள் சிலவற்றையும் கதையைக் கேட்போர் உற்சாகம் பெறவேண்டிக் கூறுவார்கள்.

தமிழிற் பாரதக் கதையைப் படிப்பவர்களிற் பெரும்பாலானவர்கள் தங்களின் கதைக்கு ஆதரவாக **வில்லிபுத்தூராழ்வாரின் மகாபாரதத்தையே** கொள்கிறார்கள். கதைப் படிப்பை நிகழ்த்தும்போது முதலில் வில்லிபாரதப் பாடல்களை இசை கூட்டிப் பாடிப் பின்னர் அதற்குப் பொருள் கூறுவார்கள். கதைப்படிப்பை நிகழ்த்துகின்ற பிரதான பாட்டுக்காரரின் முன்னால் பிற்பாட்டுக்காரர் ஒருவர் அமர்ந்திருந்து கதையின் முக்கியமான இடங்களில் 'ஆமா' 'ஆஹா' 'அப்படியா' போன்ற சொற்களைக் கூறுவார். அத்தோடு உரையாடல் மூலமாகக் கதையின் போக்கை வளர்க்கவும் கதையைத் திருப்பிச் சொல்லவும், இடையிடையே தனிப்பாடல்கள் சிலவற்றைப் பாடவும் வல்லவராக இவர் இருப்பார். இதைவிடப் பக்கவாத்தியக்காரர்களாக ஓரிருவர் அமர்ந்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதக் கதைப்படிப்பின் முடிவில் ஐந்து நாட்களுக்குக் கூத்துக்கள் நடாத்தப்படும். திரௌபதை கல்யாணம், துகிலுரிதல், பஞ்சபாண்டவர் வனவாசம், அர்ச்சுனன் தபசு, கிருஷ்ணன் தூது, தேத்தரசன் கோட்டை பிடித்தல், அரவான் களப்பலி, திரௌபதை கூந்தல் முடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் கூத்து வடிவில் நிகழ்த்திக் காட்டப்படும். இதுவே 'பாரதக் கூத்து' எனப்படுகின்றது. கோவிலுக்குக் கோவில் நிகழ்த்தப்படும் கூத்துக்கள் வேறுபடும். சில கோவில்களிற் கிருஷ்ணன் தூது,அரவான் களப்பலி, தேத்தரசன் கோட்டை பிடித்தல், போன்றவை கூத்தாக நிகழ்த்திக் காட்டப்படுவதில்லை. காலம் பொருள் வசதி முதலியவற்றைப் பொறுத்து இக்கூத்துக்கள் நிகழ்த்தப்படும் நாட்கள் தீர்மானிக்கப்படும்.

திரௌபதையம்மன் விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இறுதி நாள் திருவிழாவின் போது நிகழ்த்தப்படுகின்ற தீமிதிப்பு உற்சவம் விளங்குகின்றது. இதுவே இவ் வழிபாட்டின் உயர்வான நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இது தனியான ஒரு நாள் விழாவாகப் பெரும்பாலான திரௌபதையம்மன் கோவில்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. தீ மிதிப்புச் சடங்கு இரண்டு காரணங்களை முன்னிட்டு நடாத்தப்படுகின்றது.

இவை வருமாறு:

1. மகாபாரதத்தின் கதாநாயகியான திரௌபதை துருபத மன்னன் செய்த தவத்தின் காரணமாக யாகாக்கினியில் தோன்றியவள் என்று கருதப்படுகின்றது. அதை நினைவு கூருமுகமாக இந்தத் தீ மதிப்பு உற்சவம் மேற்கொள்ளப் படுகின்றது.

2. சந்தர்ப்ப வசத்ததால் திரௌபதை பஞ்சபாண்டவரையும் மணக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. பஞ்சபாண்டவர்களுக்கும் மனைவியாக இருந்தாலும் ஒருவருடன் தனது ஒருவருட வாழ்வை வாழ்ந்ததன் பின்னர் மற்றவருடன் மறுவருடம் இணைந்து வாழ்வதற்கு முன்னர் தீயின் மீது நடந்து தனது கற்பின் தூய்மையை நிரூபிப்பது திரௌபதையின் வழக்கம். எனவே அடியவர்களும் தீமிதித்துத் தெய்வீகத்தின் மீதான தமது பக்தியை நிரூபித்து வருகின்றனர்.

திரௌபதையம்மன் வழிபாடு தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்றுள்ள அளவிற்கு இலங்கையில் பிரசித்தி பெறவில்லை என்பது மனங்கொள்ளத் தக்கது. காலவோட்டத்திலே பல்வேறு காரணங்களால் இவ்வழிபாடு இலங்கையில் செல்வாக்கு குறைந்து கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. புத்தளம் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் வாழும் இந்து சமய மக்களில் பெரும்பாலானோருக்கு இத்தகையதொரு வழிபாடு இலங்கையில் நிலவுகின்றது என்றோ இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாரியல் அம்சங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது என்றோ தெரியாத நிலை காணப்படுகின்றது.
திரௌபதையம்மன் வழிபாடும் அதனுடன் தொடர்புடைய பாரதக் கூத்துக்களும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாக உள்ளன. இல்லையேல் இவை கால வெள்ளத்தில் அழிந்தொழிந்து போகலாம்.

(இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் ஆக்கியோரது தனிப்பட்ட கருத்தாகும்)

*****

## குறிப்பு:

*பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய உற்சவத்துக்கும் உடப்பூர் திரௌபதையம்மன் கோவில் திருவிழா நடைமுறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நம் மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இக்கட்டுரை இங்கு மீள் பிரசுரம் செய்யப் படுகின்றது.*

*இதைவிட வேறு கோவில்களிலும் கூட வேறுபட்ட நிகழ்வுகள் இடம் பெறலாம். அதை அறியத் தந்தால் அடுத்த பதிப்புகளில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. பின்னிணைப்பு

பின்னிணைப்பு 01

ஆலய படங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீப்பள்ளத்திற்கு தீக்குழியில்
தீக் கட்டைகள் எரியும் காட்சி



கட்டுக்கு நிற்பவர்கள் தீக் குளிக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூலஸ்தானமும் கட்டுக்கு நிற்பவர்களும்




மகாபாரத மண்டபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பின்னிணைப்பு 02
ஏனைய படங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முடிவுறாதிருக்கும் கட்டிடங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 03

திரௌபதி அம்மன் சம்பந்தமான காவியம், அகவல்கள், தாலாட்டு முடிசூட்டுச் சருக்கம் என்பன இந்தப் பின்னிணைப்பில் இடம் பெறுகின்றன. அம்மன் சம்பந்தமாக வாய்வழி இருக்கும் இந்த விடயங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்னும் நோக்கோடு இவற்றையும் இங்கு தொகுத்துத் தருகிறேன்

### 03. திரௌபதி அம்மன் அகவல்:

அரிஓம் நமோ பகவதி ஓம் பராசக்தி
அக்கினியில் அனலை அடக்கி
ஓம் குண்டலத்தில் உதித்த வீரசக்தி
பாஞ்சாலன் தனக்கு பணிவுறு
பிள்ளையாய் அன்றவதரித்து
அருச்சுனனை மாலையிட்டு
குந்தம்மா தேவியின் குலமருமகளாய்
ஐவர் தம்முடன் அன்புடன் இணைந்து
ஐந்து புதல்வரை அன்புடன் பெற்று
மண்ணதை யாண்டு மகிழ்வுடன் இருந்தீர்
வஞ்சகன் துரியன் நாடது கவர
வஞ்சக சூது வலிபெற ஆடி
ஐவரும் தோற்று அகமெலிந்திருக்க
உம்மை இழுத்து உரிந்தனர் துகிலை
கண்ணனை நீரும் கருதி யழைக்க
மாயனருளால் மாயாத் துகிலாய்
கூடியவரைக் குவிந்தது துகிலும்
வெஞ்சினம் கொண்டு வீமன் கதையை
தாவி யெடுக்க தனஞ்சயன் அப்போ
வில்லதை எடுத்து விண்மண்ணதிர
தருமருமதனை தயவாய் தடுக்க
தாயே நீரும் கூறிய சபதம்
தாவியே இழுத்த தன்னெடுங் கூந்தலை
கண்ணிலான் தலைமகன் தன்னுடன் துணைவரும்
களத்தில் வீழ்ந்தபின் கூந்தலை முடிப்பேன்!
என்றுமே கூற எழில் பெறுவீமன்
துரியோதனனொடு துணைவர் தம்மையும்
கொல்லும் வரையில் குணமாய் நீரை
அள்ளியே அருந்தே னென்ன
காண்டீபன் தானும் கன்னனைக் கொல்வேன்
என்றே கூறிச் செய்தார் சபதம்!
சபையில் இருந்தோர் தன்மனம் கலங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறினர் அங்கே கண்ணிலான் தானும்
ஐவரை அழைத்து அன்பாயவனும்
இழந்த நாட்டை ஏற்பீர் என்றே
துரியோதனன் சகுனி துணைவரும் கூடி
மறுத்தே உரைக்க மண்ணதை மீட்க
ஆடினீர் சூது அயன் அருளால்
சூதினை வென்றீர் துணைவரைக் காத்தீர்
பன்னிரெண்டு ஆண்டு பாங்காய் வனத்தில்
ஏகியே வாழ்ந்து வருடமதொன்று
மறைவாய் இருந்தே வந்தால்
ஈகுவேன் நாடு என்றுமே சொல்ல
ஏகுனீர் வனத்திலங்கு – மாங்கனி
தன்னை மன்னவன் தன்னிடம்
விரும்பியே கேட்க விசயன் தானும்
குறித்துமே சரத்தால்
தானே அறுக்க உத்தமர் தருமர்
கனியின் உயர்வை அறிந்து துயருற
மாயவன் தோன்றியங்கு உங்கள் எண்ணமறையென
உரைத்த போது மாங்கனி தானும்
மரத்தில் பொருந்த நன்றென மாலும்
தன்னகரேகினர் மலரின் மணத்தை
மாதா நீயறிந்து வீமன் தன்னிடம்
நீரும் விரும்பியது கேட்க தருகிறேன்
என்றவர் தானே நடந்தான்
அனுமனைக் கண்டு அவன் சுயரூபம்
கண்டு கண்டு மகிழ்ந்து கனவுறவாடி
மலரின் தன்மையை மன்னனுக் குரைக்க
சென்றான் வீமன் போரது புரிய
எதிரியுமங்கு புறமுதுகு காட்ட
தருமர் நடந்து தானே யிங்கு
குபேரனைக் கண்டு குற்றம் பொறுமென
அங்கவன் தானும் அகமிக மகிழ்ந்து
மலரினை ஈந்தான் மகிழ்வுடன் பெற்றீர்
மறைந்தேனென மன்னவன் விராடன்
தன்னகரேகி தாதி நீராகி
வண்ணமகளாய் மலர் கொய்யும் நேரம்
மன்னவன் கீசகன் மயங்கியே உன்னை
பெண்ணாய் அணையப் பிரியம் கொண்டு
கேட்கவே யவன்தன் கீழ்த்தரமான
சொல்லைக் கேட்டு சீறியெழுந்து
பலாயன் தன்னிடம் பரிவுடன் சென்று
விபரம் தன்னை விரிவாய்க் கூற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீமன் கேட்டு விரைந்தே எழுந்து
கருமிரு எதனில் கையது பற்றி
கழுத்தைத் திருகி வனத்தில் எறிந்தே
விராடனின் ஆநிரை துரியன் கவர
பசு நிரை தன்னை பரிவுடன் மீட்க
உத்தரன் தன்னொடு உதவியாய் பேடியை
அனுப்பவே பேடிதன்னுரு பிரியச் செய்து
பசு நிரை மீட்டு வரும்வரை விராடன்
பகடை கண்ணாட கங்க பட்டருடன்
கருத்தினானவனும் வெற்றிமுரசு வெகுவாய் ஒலிக்க
வென்றது உத்தரன் என்றான் விராடன்.
கங்கருமப்போ கவனமாக வென்றது வோடி
என்றுரைக்க விராடன் தானும்
விரைந்தே எறிந்த பகடையும் தெறிக்க
சிந்திய ரெத்தம் நிலத்தில் விழாமல்
பரிவுடன் தடுத்தாய் பத்தினித் தாயே!
மாயனைத் தூது மகிழ்வுடன் அனுப்பி
நாடது கேட்க துரியனும் மறுக்க

நூற்றுவர் ஐவர் தாக்கியே போர் புரிய
வீமன் கையால் துரியனும் அவன்தன்
துணைவரும் வீழ்ந்தபின் கூந்தல் முடிந்த கோதையே
சரணம் நவகோண நாயகியே
பத்தினித் தாயே பாவாய் சரணம்
அடியார் செய்த அரும்பிழை தன்னை
குற்றம் பொறுப்பாய் குணமாய் தாயே!
நாடது செழிக்க நன்மழை பெய்ய
நீதியாய் மன்னர் நெறியுடன் வாழ
உன்னருள் தந்து காத்தே அருள்வாய்!
உன்கழல் சரணம் உன் தாளிணை நமஸ்தே!

(அம்மன் அகவல் முற்றும்)

இந்த திரௌபதி அம்மன் அகவல் முன்னாள் அம்மன் கோவில் அர்ச்சகர் அமரர் சபாபதி கணபதிப்பிள்ளை அவர்களால் ஆக்கப்பட்டது. இதற்கு ஆதாரம் வில்லி பாரத நூலாகும். பாரதப் பாடல்களில் மிகுந்த தேர்ச்சியுள்ள அவர் இந்த அகவலை ஆலய உற்சவ காலங்களில் படிப்பதற்காக ஆக்கியுள்ளார்.

அடுத்து வழமையாக அங்கு பாடப்படும் திரௌபதி அம்மன் காவியத்தையும் பார்ப்போம். இது ஐவர் காவியம் என்றும் அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 4

### 04. திரௌபதி அம்மன் காவியம்
### (ஐவர் காவியம்)

திருமருவு குருநாடு தனிலரசு புரியுந்
துய்யமதி வங்கிஷத் தைவர் தன்மீது
கருமருவு செந்தமிட் கவிதையுரை பகரக்
கரிமுகமு மழகுபொழி வதனகன தனமும்
அருள்பெருகு மிருசெவியு மைந்துநற் கரமும்
ஆனகுரு முனிசொல்ல மேருவினி லெழுதும்
பருதிநிக ரனையவெண் மருப்புமுயர் தந்திதன்
பாதமலர் மனதிலொரு நாளும் மறவேனே! 01.

மனதுலெழு திடமுடைய ஐவர்தன் மீது
வளர்தமிழ் பாமாலை வகைதனை உரைக்க
வசனமலர் தன்னிலே வருமயனு மாலும்
மதிசூடும் மரனுவ ரிடமுறையு மாதும்
புனமதனில் வேங்கைமர மாகிநின் றவரும்
புகழ்மேவு தெய்வானை குறமாது தானும்
அனையதொரு மங்கலரு மலரினுறை மாதும்
அன்பினுட னேநிதமு மருள்புரிகு வாரே! 02.

அருள்பெருகு குருநாடு தன்னிலே யென்றும்
ஐவரும் நூற்றவரு மரசாளும் நாளில்
பரிவுட னேசூது பொரவாரு மென்னப்
பாண்டவரு டன்துரியோதனனு ரைக்க
சுருதிமுறை வழுவாத தருமருமவிரும்பியே
தொல் லுலகை யொட்டமிட் டேசூது பொரவே
வருசகுனி சூதுகயி றாய்உருண்டு டிடவே
மானகரி யிழந்துமட மானதையுற் றனரே! 03.

மடமாது தன்னைவைத் தேசூது பொரவே
மறுகாலு மேசகுனி கயிறா யுருண்டான்
திடமான சூதுதிளந் தேயவரி ருக்கையிற்
சேயிளையு மேசூது பொரமனதி லெண்ணி
உடல்மீள வேசூது பொருதுவென் றேதான்
உலகுதனை மீளவினி நாம்பொருவ மென்னக்
கடிகமள் மின்னாருடன் பொருவதிலை யென்று
கண்ணிலி மகன்மனதி லுன்னியோ தினனே 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதரிய துரியோதனன் தானும் அப்போ
உயர் தம்பி துட்சாதனனை அழைத்து
மாதுதுயில் தன்னையே நீயுரியு மென்ன
மாயவனும் மன்னேரம் மேமனதிரங்கி
கோதுகுழல் மாதுதுகில் ஒளியாமலேதான்
கூறறிய சாபமதுதான் அழிந்திடவே
வேதமுகில் வீமனும் தண்டதை யெடுத்தான்
மேவரிய பார்த்தனும் வில்லெடுத்தனனே! 05.

வில்லெடுத்தே அவர் எழும்ப வுன்னுகையில்
மேன்மைபெறு தருமரும் தானதை விலக்க
முல்லை நகை மூராலான் அப்போ தெழுந்து
மோதுசமர் தன்னிலே வீமனது கையால்
கொல்லவிழு துட்சாதனன் தனது மார்பில்
கூறரிய கால் மிதித்தே நின்றுயானும்
சொல்லரிய கூந்தலை முடித்திடுவே னென்று
துரோபதையும் சபதவுரை ஓதி நின்றனளே 06.

நின்றவுடனே துரியோதனனும் அப்போ
நேசமுடனே கானில் நீரேகுமெனவே
தண்டமிழ் பெருகுபுகழ் தருமருடன் நால்வரும்
தார்குளலு மேலவன் தன்னிலே யேகி
நன்றி பொறவே யவர்கள் இங்கிருந்தே தான்
நாடுபுகழ் தருமர்தன் தாய்தனை அணைத்து
வென்று புகழ் நல்லதினை வாங்கிவா வென்று
மேவுதுரி யோதனனி டத்தனுப்பினரே 07.

இடமருவு குருநாடு தனிலரசு புரியும்
ஏகமுறு கண்ணிலி குமாரனிட மேபோய்
திடமான நல்ல தினை நீதாருமென்று
செய்ய குந்தவிதேவி ஐயமற வோத
இடறு செய்யவேணு மென்றே தினைதனை
ஏரிதணலி லேகருக வேவறுத் தவனும்
மடமாதின் திடமாக நல்லதினை யென்று
வல்லதுரி யோதனன் சொல்லிவிட் டனனே 08.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டபின் தினைதன்னை வாங்கியே வந்து
மேன்மையுறு தருமரிட மேகொடுத் திடவே
திட்டமுடனே தருமர் நல்லதினை யென்று
செய்ய தினைதனை அவர்கையால் விதைக்க
இட்டமுடனே தினை முளைத்தே யெளுந்து
இன்பமுறு தொண்ணூறு நாளில் விளைந்து
கட்டாயமாகவே நற்தினை யறுத்து
நாயகியுடன் கானில் வீற்றிருந்தனரே 09.

இருந்தவுடனே துரியோதனனும் மப்போ
ஏகமுடன் நீராடும் வேளை தனிலேதான்
பொருந்து கிறபுள் ளெடுத்தே தருமர்
வாளும் பூங்காவனத்திடையே கொண்டுவரவே
மருந்துகமள் தருமர் வாழ் தருமரும் கண்டு
வாய்த்தபுகழ் பார்த்தனிடம் உணர்த்திடவே
வருந்துகிற வில்வளைத்தே புள்ளுவிள வெய்து
மன்னவனை நாடதனில் மீளவிட்டனரே 10.

மீளவந் தேதுரி யோதனனும் மப்போ
மேவுபுகழ் காள முனிதனை அழைத்து
நீர்புவியில் மீதிலே பூதமது தன்னை
நீமேவி ஐவரையு மேவதையு மென்ன
காளமாமுனி போகிறதை மாயனு மறிந்து
காலனை அழைத்து நீ காடதனி லேகி
தாழ்வு வராதபடி ஐவர்களை நீயுந்
தற்கார் எனச்சொல்லி மாயனே வினனே! 11.

ஏலவே காலனும் எழுந்தோடி வந்து
இட்டமுடனே கானில் மானாக வரவே
கானவர்கள் கானதனில் மானைத் துரந்தைவர்
கடினமுறு நஞ்சுநீர் தன்னா லிறந்தார்
பாவலர்கள் போற்று சிறி ராமர்தன் னருளாற்
பஞ்வர்கள் மீளவு வெழுந்தினி திருந்து
மேலவர்கள் மாளவே பாசுபதம் வாங்க
விசயனார் விமலரின் தவசது புரிந்தார் 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிதவசின் பெருமை அரனுமை அறிந்து
போதரவ தாகவே வேடனென வந்து
பொருவரிய பன்றியென தென்றே உரைக்க
போர்மலைய வெய்யவன் வில்லால் அடிக்க
பெரியதொரு தவசுபுரி வானயர னப்போ
புகழ்மேவு வானமதி லேயெறிந் திடவே
அரியதொரு மலைமகளை மனதிலி றைஞ்ச
அரனுமையு மேகங்கை தனை யழைத்தனரே! 13.

தனை யழைத்திடவே யவன் அமிழ்ந்தி யேதான்
தகமைதுபெற வேவிழுந் தேவிசைய னப்போ
எனதுதவ சழியுதே யென்றவனு நிற்க
ஏகவுரு வாகவேயரன் எதிர்நிற்க விஜயன்
மனது தயவாகவே மலர்தூவி யவனும்
மதிசூடு மரனடியை மனதினிலி றைஞ்ச
அனையபுகழ் மேவுசிவ பரனுமன தன்பாய்
அரியதொரு பாசுபத மேயளித் தனரே! 14.

பாசிபதம் நல்கியே பரமசிவ னப்போ
பாரதம் முடித்துலகை யாள்வாய் யெனவேதான்
பேசரிய நல்வரம ளிக்கவிசய ன்தான்
பேர்பெரிய முப்புரம் எரித்த திருவம்பை
நேசமுட னேநீ ரெனக்கருளு மென்ன
நேரலரு டன்பொருது வேளைதனி லேதான்
மாசறு சொல்லம்பு உனக் கேயருள்வன் னென்று
மாவிசய னுக்குவர மானதை யளித்தார்! 15.

வரமளித் துடவிசயன் வானுலகில் வந்து
மாவலிய காலகே சர்களைவ தைத்பின்
சிறியோர்கள் நீழ்புவியில் தருமர் வாழும்
செய்ய பூங்காவதனில் அய்யமறவே தான்
தரைமீதிலே தருமர் தம்பிமா ருடனே
தக்க புகழ் விஜயனெதி ரொக்கவே வந்து
வரைதங்கு தோழனைய மகிபனைத் தழுவி
மனமகிழ்ந் தேயவர்கள் வனமோ டிருந்தார் 16.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான கானகன் றேநாடு தன்னில்
வளமைசெறி மச்சவள நாடதனை யணுகத்
தேசமதை யாளம்வி ராடரா சன்றான்
செய்யபுகழ் விசயனை ஆநிரை மீளுமென்ன
பாசமதில் முன்னாளி லன்னையவ ளிட்ட
பண்புசெறி சாபமதி னாற் பேடு ரூபம்
வாசுமிகு மாடிலுயணி தோள்விசய னப்போ
வாதைசெறி பேடுருவம் மாறினானே! 17.

மாறியே நூற்றுவர்கள் தங்கள்படை கிழிய
மாறுபடவே பொருதி ஆநிரை திருப்பித்
தேறுநெறி யாகவே பேடுரூபம் மாறி
செய்யதோர் உருத்திர னுடன்கூடி வந்து
பேறுறு விராட புரம் மேவியே தான்
மேவரிய பாரதமி னிப்பொருவ மென்று
பேறுபுகழ் தருமருடன் நால்வரும் மெளுந்து
பேசரிய சக்கரவி யூகமிடு மென்றார்! 18.

சக்கர முடன்தண்டு சூலமுடன் நேமி
தாரைவாள் கையம்பு ஈட்டி மழுவுடனே
மிக்கபுகழா யுதம் மெடுத்தேவி நிற்க
மேவரிய பார்த்தனு மப்போ தெழுந்து
தக்க பதினெட்டக்கு ரோனிபடை யுடனே
தானுமே சக்கரவி யுகமது செய்து
ஒக்கவே தாரை தவில் மிக்கவிரு தூத
ஓதரிய போர்தனிலே எதிர்த்து நின்றனரே 19.

எதிர்த்தார்க ளைவருடன் னூற்றுவரு மேதான்
மேவரிய தருமரும் வில்லதை எடுத்து
பதிக்கிரண மரமுடி தரித்த முரசக்கொடி
பார்த்திபன் னூற்றுவரை சமரில் வென்று
மதிக்கவொரு மொன்னலர்க களைச்சமரில் வென்று
மால்பதம் நினைத்து மலர்தூவி அருள்கூர்வோன்
ஆதிக்க மாதுறை முகத்தழகு மேவிவளர்
அன்புநிறை தருமர் பதம் நாளும் மறவேனே 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாம லேமாய னிருபாதம் நினைவோன்
வன்பொருதி யாயுலகையே அரசு புரிவோன்
துறவோர்க ளுக்குமிக வருளாய் அளிப்போன்
துய்யபல நீதிநெறி அருளும் நேசன்
அறமே அளித்து லகையாளும் அருளாளன்
ஆயர்பத மேநிதமு மோதியருள் புரிவோன்
திறமான சைவநெறி சிவசமயம் உள்ளோன்
செய்யபுகழ் தருமர் பதம் நாளுமறவேனே! 21.

நாளிலே கீசகனை யேயுயிர் வதைத்தோன்
நாடுபகனா ருயிரையும் மாளவதை செய்தோன்
தூளிசம ராடியிடும்பனை வதைத்தேன்
துய்யபுகழ் கோசலரா சன்தனை முடித்தோன்
வாளுமுண் டகமல ரெடுக்கவே வந்தோன்
வாதுபுரி ராட்சதரை நீறெழவ டித்தோன்
கூடிநட மாடவே வீமரு மெழுந்து
கொடியபோர் தன்னிலே சமரது புரிந்தார் 22.

புரியவே தண்டெடுத் தேசாடி யேதான்
புகழ்மேவு துரியோத னன்தம்பி மாரை
உரியதொரு வானமதி லுயிர்போக ஒற்றியே
ஓதரிய அறுபது கடகமது கரியை
பெரியதொரு வானமதி லள்ளியே யெறிந்து
பேசரிய படைதனிலே சாடியே வென்ற
அரியதொரு வீமரா சன்பதம் அன்புடன்
நெஞ்சில் னென்னாளும் நினைவேனே 23.

நினைவு பெறவே அருச்சுனனார் ரெழுந்து
நேசமுடனே திருமால் தனை நினைந்து
எனது சமர் காணவே நீர் வருக வென்று
இன்பமுடனே விசயனும் தொழுது திறைஞ்ச
மனதுதய வாகவே மால் தேர் கடாவவே
வாண்மை செறி வீட்டுமன் தனைஉயிர் வதைக்கத்
தனதுமுன் னவனென்னத் தான்பேர் படைத்த
தரமரிய கன்னனுயிர் தன்னையும் அழித்தான்! 24.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையும் அழித்தவர்கள் தன்படை வளைத்து
சாரதியி லாமலே தேரது நடத்தி
என்னுமனு மக்கொடி பறக்கவே தேத்தரசை
ஏகமுறு சமராடி யேகொல்வே னென்று
துன்னுபுகழ்ச் சக்கரந் தன்னையே விட்டுத்
தாவுகதி ரோனையவர் தான் மறைத்திடவே
வின்மையறு தேத்தரசு தன்னுயிர் வதைத்த
விஜயனார் பாதமலர் நாளு மறவேனே! 25.

மலர் மாலையணி மாயவன் தேர்கடவா
வாய்தனிலே வலம்புரி முழங்கிடவே
தரைமீதிலே பொய் சொல்லாத் தன்மிதரு மிப்போ
தக்கதொரு பொய்சொல்லித் துரோணரெதிர் நிற்க
சிலையதனை யாசாரி மண்ணிலே போட்டு
சிவன் நினைவ தாய்நிற்க யாகபுத் திரனும்
கொலையாகவே அவன் கைவாளி னாலே
கூறுசெய் தாசாரி தன்னுயிர் வதைத்தான்! 26.

தன்னுயிர் வதைக்க வசுவத்தாம னப்போ
தாவுபுகழ் சேரவர் தன்மேல் எதிர்த்து
மன்னுபுக ழாயுதந் தன்னை யேவிடவே
வானிவிமை யோர்கள்புகழ் வீமராசன்தான்
துன்னுபுக ழாயுதம் தன்னையே விடவே
தூளிகள் ளெளும்பியிரு பாணமும் எதிர்த்து
பொன்னுலகு மன்னுலகு மோர் நெருப்பாக
பூமகள் நடுங்கவே போர் புரிந்தனரே! 27.

போர்புரியும் வீமனை ஆயனும் விலக்க
பூமிதனி லாயுதம் போட்டவர்கள் நிற்கத்
தானேகு பாணமும் தானேதி ரும்பத்
தக்க துரியோதனன் தம்பியென வந்த
பார்மேவு துச்சாத னன்தன்னை வீமன்
படுகளம் தன்னிலே உயிர்தனை வதைக்க
கார்மேவு கூந்தலைக் கன்னியவள் நெஞ்சிற்
கால்மிதித் தேயிரு கரங்கொடு முடித்தாள் 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தபின் பாரதம் முடிந்ததென வெண்ணி
மேசமுறு குருநாடு தன்னிலே ஐவர்
படித்துறை தன்னிலே விண்டுட னரனும்
பண்புசெறி உம்பர்தொழு மும்பர் நாடனெவே
கடித்தபழ னங்களிலோர் நெற்கதி ருளக்குக்
காணவும் மாதமும் மாரிபெய் திடவும்
துடித்தவர் நடுங்கிடச் செங்கோல் செலுத்தித்
துடனினிய அரிராமர் பாதம்நினை வானார்! 29.

நினைவு செறி அரிராம ராமசிவாயநம
நிலகருடன் மீதில் வருகோவே சிவாயநம
அனையதியால் மழைதடுத்தாய் சிவாயநம
சேரிதனிலே வெண்ணை யுண்டாய் சிவாயநம
எனது பிணி தீரவரு கோவே சிவாயநம
ஏகஉருவாய் நின்ற ஆதிவஷ்ணுவே சிவாயநம 30.

ஆதியெனு மூலஒளியானாய் சிவாயநம
ஆனதொரு பூமி மணவாளா சிவாயநம
நீதிசெறி வைகுந்த வாழ்வே சிவாயநம
வாதுசெய் முனியை எதிர்த்தாய் சிவாயநம
வாசவன் தேவர் தொழவந்தாய் சிவாயநம
தானுமீரேழுலகும் மளந்தாய் சிவாயநம
அனைவரும் வந்து தொழும் ஆதிவிஷ்ணுவே சிவாயநம 31.

தானினிய வாசமலர் வெண்கல மாதே
தாரணித மைக்குமுகில் கோதுகுழல் மாதே
தேனினிய நல்லமிர்த மானதிரு மாதே
செய்யகுல ஐவர்தனை ஈன்றதிரு மாதே
வானினிய குழல்சேர் மடந்தையெனு மாதே
வாகான குந்தம்மா தேவியெனு மாதே
கானினிய குழல்சேர் மடந்தை யெனும் மாதே
கருத்துடைய பாண்டவர் தனக்கினிய மாதே 32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதெனயெ பொக்கிஷம் தன்னிலுதித் தாயே
வரியாக சேனன் மகளாகவந் தாயே
காதல்செறி கீசகனி னுயிர்வதைத் தாயே
காசினியில் ஐவர் மனையாகவந் தாயே
நீதியுடன் ஏழு பிறப்பும்பிறந் தாயே
நீடரிய பாலமிர்த மாகவந் தாயே
கோதுகுழல் நெஞ்சில் மிதித்தே முடித்தாயே
கோதையே நாரணன் தங்கையா னவளே! 33.

நாராய ணர்க்குநீ நல்ல தங்கச்சி நீ
நால்வேத மூர்த்தி நீ வேதாக மத்தினிநீ
பாரணப ணத்தினி பரலோக சக்திநீ
பாரதம் முடித்துலகு தாரணி தழைத்தநீ
தாரணித னத்திநீ சாலோக மூர்த்திநீ
சாரூப சக்தி நீ சாயுச்ச பத்திநீ
நீறணி புயத்திநீ மாயனது தங்கையே
நெருப்பினில் உதித்திடும் யாகபத் தினியே! 34.

நீதிசெறி மட்டக்க ளப்புநகர் வாழி
நேசமாய் மாதமும் மாரிமழை வாழி
வேதவிதி யாகமும்பு ராணமிக வாழி
மேதினியில் உள்ளோர்கள் யாவரும் வாழி
தீதகலவே யரசர் செங்கோலும் வாழி
தேனுநெறி யாகமறை யோர்கள் மிகவாழி
தாதுதுவள் மலர்மாலை மாயனுடன் ஐவரும்
தையல் துரோபதையும் வாழ வாழியவே! 35.

சீர்வாழி சீர்சமய வேதமும் வாழி
செப்பரிய மட்டக்களப்பு நகர் வாழி
பாமாலை பாடினோர் வாழி
பைந்தொடியை யென்றும் மோதினோர் வாழி
கார் வாழி கூர் வாழி
கமலத்தில் உறைந்த பத்தினித் தாயும் வாழி
பாண்டிமா கோவிலுறை தையல் வாழி!
துரோபதையும் வாழ வாழியவே! 36.

(ஐவர் காவியம் முற்றும்)

**30,31,36 ஆம் பாடல்கள் சில பிரதிகளில் காணப்படவில்லை. ஆலய பிரதியில் காணப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 05

### 05. திரௌபதியின் தாலாட்டு

ஏற்கனவே திரௌபதியின் அகவல், திரௌபதியின் (ஐவர்) காவியம் கிடைத்திருந்தது. இப்போது திரௌபதியின் தாலாட்டும் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அதனையும் பின்னிணைப்பாகச் சேர்க்கலாம் என்று நினைக்கிறேன். ஆகவே அதனை இங்கு தருகிறேன்:

தாயே துரோபதையே சங்கரியே வாருமம்மா
துரோபதையின் தாலாட்டை துரிதமுடன் நான் பாட
அருகிருந்து காருமம்மா அம்மை துரோபதையே
வாக்கில் குடியிருந்து வரந்தர வேணுமம்மா
அறியாத நான் பாடுகின்றேன் அம்மை அருள்புரிவாய்
ஆறுதப்பு நூறுபிழை அறியாது நான் செய்ததெல்லாம்
பொறுக்கக் கடனுனக்கு பெற்றவளே மாதரசே!

**வேறு.**

ஓங்கார முக்கோணம் வன்னமகள் துரோபதை நாயகமே
ஓம் நமசிவாயமென்று

பாங்காசன மிருந்து வன்னமகள் துரோபதை நாயகமே
பறந்தோடி வா தாயே

ஐவருக்கும் தேவியல்லோ வன்னமகள் துரோபதை நாயகமே
அழியாத பத்தினியே

பாஞ்சாலன் பெற்றபிள்ளை வன்னமகள் துரோபதை நாயகமே
பசுங்கிளியே பத்தினியே

கொங்கு நாடு தன்னிருந்து வன்னமகள் துரோபதை நாயகமே
கொம்பனையே வந்திறங்கி

பாண்டிருப்பு தன்னிடத்தில் வன்னமகள் துரோபதை நாயகமே
பாவையரே வந்தமர்ந்தாய்

ஐவரையும் காத்தது போல் வன்னமகள் துரோபதை நாயகமே
அனைவரையும் காருமம்மா

பஞ்சவரைக் காத்ததுபோல் வன்னமகள் துரோபதை நாயகமே
பாலர்களைக் காருமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலில் பள்ளிகொள்ளும் வன்னமகள் துரோபதை நாயகமே
பச்சைமால் உன்தமையன்

அலைகடலில் பள்ளிகொள்ளும் வன்னமகள் துரோபதை நாயகமே
ஆதிகிருஷ்ண ருன்தமையன்

நடுக்கடலில் பள்ளிகொள்ளும் வன்னமகள் துரோபதை நாயகமே
நாராயண ருன்தமையன்

ஆதிசிவன் தேவியல்லோ வன்னமகள் துரோபதை நாயகமே
அழியாத பத்தினியே

உன்னை மன்றாடமன்றாட வன்னமகள் துரோபதை நாயகமே
மனமிரங்க வேணுமம்மா

அக்கினியில் நீ பிறந்தாய் வன்னமகள் துரோபதை நாயகமே
அறிவுள்ள பத்தினியே

நெருப்பம்மா உன்சடலம் வன்னமகள் துரோபதை நாயகமே
நின்றளிக்கக் கூடுதில்லை

உன்அனலைத் தணியம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
அக்கினியை வேறுபண்ணேன்

தங்கத்தா லம்மானை தாயே வன்னமகள் துரோபதை நாயகமே
தட்டிவிளை யாடனம்மா

வெள்ளிப் பிரம்பு கொண்டுதாயேவன்னமகள் துரோபதை நாயகமே
வினையறுக்க வாறனென்றாய்

வெண்ணீறு கொண்டல்லோ வன்னமகள் துரோபதை நாயகமே
கண்ணூறு தான் கழித்தாய்

உன் பண்டாரம் போனவிடம் வன்னமகள் துரோபதை நாயகமே
பழுதொருநாள் வந்ததில்லை

பஞ்சாட் சரமுடையாள் தாயே வன்னமகள் துரோபதை நாயகமே
பன்னிருகை வேலுடையாள்

வாழ்த்தி விடைகொடம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
வாளுருவி கைக்கொடம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டாவாம் வெண்ணீறு வன்னமகள் துரோபதை நாயகமே
துலங்கரித்தாய் தேகமெல்லாம்

மக்களைக் காருமம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
மகராசி வாருமம்மா

சிங்கச் சிலையாளே வன்னமகள் துரோபதை நாயகமே
சிவனுடைய மைத்துனியே

பத்தாத பத்தினியே வன்னமகள் துரோபதை நாயகமே
பழுதுபடா ரெத்தினமே

சிலம்பு கலகலவென வன்னமகள் துரோபதை நாயகமே
செஞ்சிலம்பு ஓசையிட

வளையல் கலகலவென வன்னமகள் துரோபதை நாயகமே
வான்கமுகு பூச்சொரிய

பகலிலே பஞ்சவர்ணம் வன்னமகள் துரோபதை நாயகமே
இரவிலே ராட்சதத்தி

வாளொருகை சூலமம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
வலது கையில் சக்கரமாம்

சக்கரத்தை தானெடுத்து வன்னமகள் துரோபதை நாயகமே
சதுராட வாறனென்றாய்

தருமருடன் கூடியல்லோ வன்னமகள் துரோபதை நாயகமே
சதுராட வாறனென்றாய்.

வீமனுடன் கூடியல்லோ வன்னமகள் துரோபதை நாயகமே
வீரசப தம்முடித்தாய்

வில்லை வளைத்ததினால் வன்னமகள் துரோபதையே
விசயனுக்கு மாலையிட்டாய்

நகுலசகா தேவருடன் வன்னமகள் துரோபதை நாயகமே
நண்ணுதலே வந்தமர்ந்தாய்

குண்டுபோல் கட்டைவெட்டி வன்னமகள் துரோபதை நாயகமே
கோபுரம்போல் தீவளர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுமுளக் கட்டைவெட்டி வன்னமகள் துரோபதை நாயகமே
நலம்பெறவே தீவளர்த்தாய்

மலைஉயரக் கட்டைவெட்டி வன்னமகள் துரோபதை நாயகமே
வான்முட்டத் தீவளர்த்தாய்

சந்தனக் கட்டைவெட்டி வன்னமகள் துரோபதை நாயகமே
சாம்பிராணி தூபமிட்டாய்

தெண்டாயுதந் தானெடுத்து வன்னமகள் துரோபதை நாயகமே
துற்சாதனனை கொல்வனென்றாய்

பாரதப்போர் வெல்லவென்று வன்னமகள் துரோபதை நாயகமே
பாருலகில் தான்பிறந்தாய்

பாரதமும் உன்னாலே வன்னமகள் துரோபதை நாயகமே
படைப்போரும் உன்னாலே

அன்னநடை நடந்து வன்னமகள் துரோபதை நாயகமே
ஐவரிட கொலுதனிலே

சின்னநடை நடந்து வன்னமகள் துரோபதை நாயகமே
சீக்கிரத்தில் வாறாவே

மாறாதநோய் பிணியை வன்னமகள் துரோபதை நாயகமே
மாற்றிவிட வாறாவாம்

தீராதநோய் பிணியைதாயே வன்னமகள் துரோபதை நாயகமே
தீர்த்துவிட வாறாவாம்

திருநீறு தானெடுத்து வன்னமகள் துரோபதை நாயகமே
தீவினையை நீக்கிவிடம்மா

பத்துது பத்துதென்று வன்னமகள் துரோபதை நாயகமே
பதறுதிங்கே பாலரெல்லாம்

எரியுதெரியு தென்று வன்னமகள் துரோபதை நாயகமே
ஏங்குதம்மா உன்னடிமை

தண்ணிதண்ணி என்றுசொல்லி வன்னமகள் துரோபதை நாயகமே
தவிக்குதம்மா வுன்னடிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னமிறங்க வாம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
ஆத்தாளே கண்பாரும்

ஊட்டத்தை நீகொடுத்து வன்னமகள் துரோபதை நாயகமே
உத்தமியே காருமம்மா

கும்பத் தழகியம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
கோபாலன் தங்கையரே

கும்பத்தின் மீதிருந்து வன்னமகள் துரோபதை நாயகமே
கொஞ்சுமம்மா பெற்றவளே

வாதபித்த சீதசுரம் வன்னமகள் துரோபதை நாயகமே
வல்பிணியை மாற்றிவிடு

காய்ச்சல் கறுப்புகளை வன்னமகள் துரோபதை நாயகமே
கண்ணோயை மாற்றனம்மா

இரங்கிரங்கும் தாயே வன்னமகள் துரோபதை நாயகமே
ஏந்திளையே கண்பாரும்

சரணம் சரணம் அம்மா வன்னமகள் துரோபதை நாயகமே
உன்தாளிணை யில்நான் சரணம்

(இதே போன்று இன்னுமொரு பழைய எழுத்துப் பிரதியில் ''வண்ணமகள் துரோபதையே'' என்று வரிக்கு வரி காணப்படுகின்றது.

நான் ''வன்னமகள் துரோபதை நாயகமே'' என்ற இரண்டு அச்சுப் பிரதிகளைப் பார்த்தேன். அதனால் அந்தப் பிரதியைத் தான் இதில் கையாண்டு இருக்கிறேன்)

(அம்மன் தலாட்டு முற்றும்)

*முக்கிய குறிப்பு:*

பின்னிணைப்புகளில் அடங்காத பாடல் ஆலயச் சுற்றுப் பாடல் மட்டுமே. அதனை வெளியிடுவதில் சில சிக்கல்கள் தோன்றியதால் அதனைத் தவிர்த்துக் கொண்டேன். அனைவரும் மன்னிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரௌபதியம்மன் துதி

தர்மமே நித்தியம் தர்மமே முத்தியும்
தருமருங் கொலுவிருக்க
தாஷ்டீக வீமனுடன் அருச்சுனன் நகுலன்
சகாதேவன் அருகிருக்க
வரமுடைய பாஞ்சாலி ஐவர்க்கும் பாரியாய்
வரிசையாய் அமர்ந்திருக்க
ஆயிநீ யொருவருக்கும் பாரியு மல்லகாண்
மற்பொருது பார்க்கவந்தாய்
சாருற்ற போர்தனில் ஐவரையுங் கொடுவந்து
சபதம் முடித்த வுமையே
சங்கரி சாம்பவி யுந்தனிட மகிமையைச்
சாற்றவும் முடியுமோதான்
வர்மகுண வஞ்சியே மாயவன் சகோதரி
வந்தென்னை ரெட்சித்திடும்
வளர்கிளி கதம்பமணி குங்கும வசந்தநெறி
மதிரூப பாஞ்சாலியே!

**(பின்னர் கண்ட அம்மன் துதி இது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 06

## 06. மகாபாரதம்
## முடிசூட்டுச் சருக்கம்

எஞ்சலில் உலகம் யாவும் இகலறம் வளர்க்கவேண்டி
விஞ்சிய உயிர்களெல்லாம் வாழ்வினில் விளங்கத்தக்கோர்
சஞ்சித தவத்தின் வீரத்தருமனும் தம்பிமாரும்
மஞ்சன மாடுநீதி மரபினாற் கூறலுற்றேன். 01.

அருமறை தன்னைநான்கா யமைத்திடு மந்தணாளன்
குருகுலம் விளங்கவந்து குறுகினான் குறுகலோடுந்
தருமனுந் தம்பிமாருந் தழல்வரு தையலாளும்
பெருகிய வன்போடந்தப் பெரியவன்தாளில் வீழ்ந்தார். 02.

வணங்கினார் வணங்கிப்பின்னை மாமணித் தவிசின மீதே
மணங்கிளர் தாரினானும் வைத்தபின் கடன்கள் யாவும்
இணங்கிடச் செய்துநின்றே ஏத்தினர் தம்மை நோக்கி
குணங்களா லுயர்ந்தோன் ஆசிகூறின னன்புகூர 03.

நீலமாமுகி லன்னானும் நினைத்தது முடித்துத் துய்ய
சீலமாத்துவரை நின்றுஞ் சேர்த்தனன் எழுந்து போற்ற
மாலுமார் பழுந்தப்புல்லி மகிழ்வுட னினிதிருந்த
ஞாலமாமாது பாரநல்வினை யகற்றிச் செய்தான். 04.

அருமறை அந்தணாளர் முனிவர் மற்றரசர் தங்கள்
மரபினாற் சிறந்தோர் கற்ற வமைச்சர் மற்றடைந்தோர் யாரும்
பரவியேவணங்கிச் சூழ்ந்தார் தருமனும் பரிவினாலே
விரவினா ரெவர்க்கு மின்சொல் விளம்பினான் விளம்பவல்லான். 05.

கருமுகிலனைய செந்தாமரை மலர்க் காடுபூத்துக்
கருமையோர் வடிவுகொண்டு கண்ணுக்கு மெளியனான
மருவிதுளப மாலைவியாதனும் மகிழ்ந்து நோக்கி
மருவினார் தம்மைக் காக்கும்மாதவா கேண்மினென்றான். 06.

புகலடைந்தோரைக் காக்கும் புனிதநீ தருமன்றன்னை
வகலிடந் தன்னையாள வருள்புரிந் திடுதல் வேண்டும்
தகமையால் விளங்கத்தக்க குருகுலத்தானு மென்று
சுகனருள் தாதையானச் சுதனொடு சொல்லினானே 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றுநன்றென்று மாயன் நயந்தருள் கேட்டோர்க் கெல்லாம்
குன்றென வளர்ந்த தோள்கள் குளிர்ந்தன விதயமங்கந்
துன்றிய புளகம்போர்ப்பப் புனல்விழி சோரியாறு
வின்றுதந் தெமதேபூமி யென்றனர் இன்பமுற்றார் 08.

மாருதி தன்னை நோக்கி மாயவனு ரைப்பானையா
வாருதி யேழு நாளும் வனைகடற் புனலுங் கங்கைச்
சீரிய நதிகளேளின் தீர்த்தமுஞ் சேரக் கொண்டு
சாருதி கடிதினென்னுஞ் சொல்லினைத் தலைமேற்கொண்டான் 09.

சண்டவே கத்தின்மிக்க தாதையுஞ் சாலநாண
மண்டல நடுங்க மேனி வானுறநிமிர்ந்து வீங்கி
கொண்டல்க ளிழியமோதுங் குரைகட லிரைப்புந்தீர
வண்டமுங் கிழியப் பாய்ந்தா னைம்பெரும் பூதமொப்பான் 10.

ஆனவன் போனபின்ன ரம்புயத் தடங்கண்ணானு
மேனிக லூகந்தன்னைக் கிருபனை வியந்து நோக்கி
யூனமில் சடங்கமெல்லா மமைத்திரென் றுவந்து நோக்கி
வானவர் தச்சன்றன்னை வருகவென் றெண்ணினானே 11.

வந்தனன் தச்சன்வந்து மாயனை வணக்கஞ் செய்ய
வந்தமில் மணிபொன்னாற் றூணாயிரமைந்த கூடத்
தந்திடும் விரைவி லென்னச் சமைத்தன னொடியிலம்மா
செந்திரு மார்பினானுந் திகைத்திடத் திகழச் செய்தான் 12.

கணிகைநூன் மாந்தர் தம்மை யழையெனக்க கடுதின் வந்தா
ரணியுமா முகூர்த்த மொன்றிங் கமைத்திரா லென்னலோடுந்
தணிசெனன் றெண்ணிப் பார்த்துச் சாற்றுவா ரெவருங்கூடி
மணிவணாநாளை நன்னாளென்றனர் மகிழ்து மன்னோ 13.

அத்தினபுரியை யாருமலங் கரித்திடுமி னென்ன
வத்தினந் தன்னில் யாருமணிந்தன னென்பமன்னோ
வந்தினகரனை மாவின் மணியினை யணியுண்டாக
வித்தகச் சாலைதன்னில் வேகடஞ் செய்யதென்ன 14.

மரகதம் பவளநீல மாணிக்க முத்துவச்சிர
நிரைபடத் தாமநாற்றி ணீணெடுங் கமுகுவாழை
குருமணிக் கும்பம் வைத்துக் குங்குமம் சாந்தும் பன்னீர்
தெருவெலாம் விளங்கச் செய்து தீபமும் ஏற்றினாரே 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகருவே முதலாவுள்ள தீபமுமைம் பொன்னாலே
மகரதோ ரணமுநாட்டி மலரினாற் பந்தல் வேய்ந்து
புகரிலா மறைத்தூண் பட்டாலுறைகளும் பொதிந்து துய்ய
நிகரிலாக் கவரியாடி நிரைபட நாற்றினாரே 16.

இரதமுமத மாச்சாரி பதினெட்டினியல் பினென்னுந்
துரகமும் பண்ணமைத்துத் தூயவெண் சங்கநாதம்
பரவுபல்லியங் களார்ப்பப் பணிலங்கள் முழங்கவெங்குந்
திரைகட லுவாவுற்றென்னச் செழுநகர் கிளர்ந்ததன்றே 17.

அன்னமே முதலாயுள்ள தானங்க ளந்தணாளற்
கின்னரும் பொருள்களெல்லா முவந்துவந் துதவுகிற்பார்
மன்னவர் மறைவல்லாளர் வணிகர்மற் றுள்ளோர் யாரும்
துன்னியே யானந்தன்னிற் றுவன்றியே வந்து சூழ்ந்தார் 18.

கடிகைநூ லுணர்ந்தமாந்தர் கண்ணனை வணங்கி யையர்
முடிபுனை முகூர்த்தம் வந்து முன்னிய தென்ன லோடுந்
நெடியவ னெவருஞ்சூழ நீண்டமண்ட பத்திற் சேர்ந்து
சடிலநூல் முனிவர்யாருஞ் சடங்கம தியற்று கென்றான். 19.

தண்டுலம் விரித்துவைத்துத் தருப்பையுஞ் சாத்திக் கோள்கள்
மண்டபம் வகுத்துத் துய்ய மலர்களும் பொதிந்து பின்னர்
மண்டலம் புகழச் செய்து வளர்கிள ரங்கி மூட்டி
பண்டைய மறையினாலே பரிவுடனினிதிற் செய் 20.

இந்திர னயல்மானீச னெண்ணில் விண்ணவர்களோடும்
அந்தர வானமெங்கு னெருங்கின ரணிகளாக்கி
கந்தமா மலர்மொழிந்து களித்தனர் காணவந்தார்
அந்தமா மறைகள் யாவு மருநடனங்கள் செய்ய 21.

— வேறு —

தருமனு மங்கி தருத்திரு மானு
மிருவரு மங்கிமு னெய்தி யிருந்தார்
குருமணி யாசன மீது குனிப்போ
டொரு வரு போகமு யோகமு மொத்தே 22.

அங்கியு மாகுதியும் மெனலாகித்
திங்களு ரோகினி சேர்வது போல
அங்கமு நான்மறையும் மெனலாகிப்
பொங்கு மருந்தவமும் பொறையும் போல 23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனன் மாருதி வாருதி யேழுஞ்
சந்தனுவின் மனையாண் முதனீரும்
நந்திரை யுண்டன நன்கொடு யாவும்
தந்தன நீர்கள் தனித்தனி மாதோ 24.

பூரணமாகவே பொற்குடந் தொறு
மாரண மந்திர மோதி யமைந்தார்
நாரண னேமுதல் நற்றவ முனிவர்
நேரணியாக நெருங்கின ரன்றே 25.

காசிப னத்திரி கௌசிகன் முதலோர்
ஆசறு வேதமமைத் தவன் யாரும்
பூசனை யங்கி பெறும்படி பூணத்
தேசிகர் யாவரும் வந்து திரண்டார் 26.

நவமணி நாளி யழுத்தி விளங்குந்
திவகர னைப்பொரு சேரரி பீடத்
துவகை முகத் தருள் தருமனை யோங்கக்
குவலய முங்களி கொள்ள விருத்தி 27.

சங்கொடு தாரை தளங்க உருப்போ
வங்கண் விசிம்பிடை யைந்து முழங்கத்
துங்கமறைப் பொருள் தூய வியாதன்
மங்கள மாமுறை மஞ்சன மாட்டி 28.

ஆவியெனித் துகில் வர்க்க மணிந்து
மேவிய வைங்கல வைப்பொடி மென்மேல்
பூவியல் பாவியல் தொங்கல் புனைந்து
மாவுற ஆபரணத் திரள் மான 29.

எங்குமணித் திருள் கீறி யிலங்கும்
வெங்கட லான வினைப்பவம் நீக்கும்
புக்கமிகுந் திருநீறு புனைந்தே
அங்கையின் நெல்லியின் யாவையு மாய்த்தே 30.

சூரியராயிர கோடி துலங்கும்
பாருயர் மண்டப மீது படிப்போர்
வீரவில் மன்னர் வியந்து நெருங்க
கார் வெளி கற்பக நாண்மலர் கால 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவுருவாகிய செங்கண் முகுந்தன்
தவமுயர் வாகிய சடில வியாதன்
அவயகலும் படி ஆனன பார்க்க
உவகை யினா லவன் ஓங்கி யெழுந்தே 32.

– வேறு –

மணிமுடி யெடுத்து நீட்டமங்கல மரச மார்ப்பத்
துணிவுகொண் டெவரும் வாழ்த்தச் சுரர்களும் பணிந்து போற்ற
பணிமுடி நெளிய வாடும் பதமலர்க் கருணை மூர்த்தி
அணிமுடி அரங்கனென்றே யணிந்தனன் தனது கையால் 33.

சூட்டலும் வானோர் நாதச் சுருதிகள் துள்ளி யார்த்தார்
கோட்டமில் லறங்களார்த்த குரைகடலேழு மார்த்த
வாட்டமில் தவத்தோர் யாரும் மகிழ்ந்தன ராடி யார்த்தார்
ஈட்டமா முலகத் துள்ளோர் யாவரும் விரைவினார்த்தார் 34.

பூமியின் பாரந்தீரப் புரிந்தனர் யாவுமெண்ணித்
தீமைகள் ஒழிக்க நன்மை திரண்டனர் பெற்றேயோங்க
தோமுறு கண்ணி லானும் விதுரனுந் துயரந்தீர
மாமரு தொடித்தோன் பாதம் வணங்கினன் தருமன் மைந்தன் 35.

வணங்கிய மன்னர் மூன்று மழைமதக் கரடமாவி
லிணங்கிய தம்பிமார்க ளீரிரு புறத்துஞ் சேரக்
குணங்களா லுயர்ந்த மாயன் குஞ்சரப் பிடியின் போதப்
பணங்கிளர் அரவமேந்தும் பாரிடத் தரசர் சூழ 36.

கவரிகள் நிழற்றக் கொற்றக் கவிகைவெண் மதியஞ்சேரப்
பவுரிகொண் டெவரும் வாழ்த்தப் பல்லியங் கடலில் விம்ம
புவனங்க ளெல்லா முய்யப் புரிநகர் வலமாய் வந்து
மிவரெழின் மண்டபத்தி னிந்திர னிவனே யென்னா 37.

அருமணிப் பீடந்தன்னி லரகவீற் றிருந்த பின்னர்
வருமுறை யரசர் யாரும் வந்து வந்திறைஞ்ச வானோர்
பெரியவா ரமுதம் போலப் பேரமு தெவர்க்கு நல்கித்
தரும தேவதையும் பாருந் தழைக்க மும்மழையும் பெய்ய 38.

இந்திரன் குபேரன் மன்னரேதுதான் வேண்டவப்போ
சுந்தரம் வந்து நல்க வாயிரம் பேரோன் சிந்தைச்
செந்திரு வுடனே கூடிச் சேர்ந்துடன் வாழப்பார்வை
முந்தினம் போலப் பூமிமுழுதையும் காத்தான் மன்னோ 39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசெலாந் திறைகள் கொட்ட அமரர் பூமழைகள் கொட்ட
வரைசெறி முனிவர் யாகு முவகையா சிகளின் வாழ்த்தத்
தரைபுகழ் சத்திய வாய்மைத் தருமராசன் குமாரன்
புரைதவிர்ந் துலக மேத்தப் புவியெலாம் புரந்தான் மன்னோ 40.

ஓதவே நன்றுநன்றென்று ரைப்பவ ருதவி செய்வோர்
நீதமாம் பொருள்க ளாய்ந்து நெறிபிறளாது சொல்வோ
ரேதமாம் பிறவிதீர்ந்தே யிமயவர் வணங்கப் பூமி
நீதமாய் வாழ்ந்து பின்னர் நித்தியம் பெறுவர் மாதோ 41.

– வேறு –

இப்பராண மிசைத்துடன் கேட்பவர்
தப்பிலாது படிப்பவர் தாமெலாம்
முப்புராரி முதல்வன ருளினாற்
செப்பொணாத சிவபதஞ் சேர்வரே 42.

– வேறு –

இக்கதை யுரைக்கவே யியம்பி னோன்றனை
மிக்கவேள் விடையவ னென விளம்பியே
தக்கவா றவனடி தாழ்ந்து வஞ்சகப்
புக்குவிட் டதிகபொன் பணிகள் நல்கியே 43.

செய்யபட் டாடையிற் சேர்த்திச் செங்கையின்
மையறு மாளிகள் வழங்கி மாலை வேய்ந்
துய்யவெண் கவிகைகள் அணிந்துள் ளன்பினால்
மெய்மையாய் நகர்வலஞ் செய்ய வேண்டுமால் 44.

பாரகத் துயிரெலாம் பரிந்து வாழியே
கார் பெய்து நீதிமன் களித்து வாழியே
நாரணன் கதையினை நாடிக் கேட்டவர்
வாரவிந் திரனென வாழி வாழியே 45.

– வேறு –

முடிபுனைச் சருக்கந் தன்னை முன்கையான் மொழிந்தானென்ன
வெடிமலர்ப் பங்கயத்தார் வேன்வளைக் கொங்கணேசன்
அடிபுகழ் மைந்தனான சதாசிவன் அறைந்தான் வென்றிப்
படிபுகழ் புலவரெல்லாம் பரிந்தருள் செய்வர் மாதோ 46.

(பாரத முடி சூட்டுச் சருக்கம் முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

மகாபாரத நூல்களில் முடிசூட்டுச் சருக்கம் காணப்படவில்லை. இதனை அமரர் செந்தமிழ் திலகம் வி. இரத்தினசிங்கம் (அதிபர்) ஐயா அவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் பதிப்பித்து மகாபாராதம் படிப்போர் அனைவருக்கும் வழங்கியிருந்தார்கள்.

இது அவருடைய தந்தையார் காலத்தில் ஆக்கப்பட்டது என்று அறிந்தேன். இது இப்போதைய பாரதம் படிப்போர் பலரிடம் இல்லை. அந்தக் குறையை நிறைவேற்றும் பொருட்டு இதனையும் இதில் சேர்த்துள்ளேன். இந்தப் புத்தகத்தை வைத்திருப்போர் அனைவரிடத்திலும் இனி அரிதாகக் கிடைக்கும் பாடல்கள் அனைத்தும் கைவசம் இருக்கும்.

**(இதில் ஏதும் பாடபேதம் இருப்பின் அது அச்சுப் பிரதியில் காணப்பட்ட படியென்க)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 7

### 07.தீப்பள்ளயம்

**(இது அமரகவி பாண்டியூரன் அவர்களின் கவிதை)**

பள்ளயம் பாண்டிருப்பில்! பார்ப்பவர் உள்ளத் துக்கும்
பள்ளயம்! துரோபதையின் பதிவிர தாநோன் புத்தீப்
பள்ளயம் பார்க்கப் பார்க்கப் பயத்தொடு பக்தி யூட்டும்
பள்ளயம் புள்ளயம்மா புறப்படு பார்க்கப் போவோம்! 01

வெள்ளம்போ லன்பர் கூடும் விசித்திரத் திருவிழாவே
பள்ளயம் பலவாண்டாகப் பார்த்திடக் கிடைக் கவில்லை
தெள்ளமு தொத்தாள் கற்புத் திரௌபதி அருளைக் காண்போம்
புள்ளயம் மாநீ வாகா புரளிகள் குறைந்த காலம்! 02

பதினெட்டாம் போரின் பின்னே பார்மகள் குளிர்ந்தா ளென்றார்
கொதிபரந் திருந்த மண்ணில் கொட்டிய இடி மழைக்குப்
புதியவோர் பசுமை யெங்கள் பூமியில் அரும்பக் கண்டோம்!
அதனையிப் பள்ள யத்தில் அனுபவிக் கலாங்கா மச்சாள் 03

பள்ளயம் பார்க்க ஆசைப் படுவது நியாயம்! நம்முள்
உள்ள பேராசை ஆளும் உரிமையிற் பார பட்சம்..
எல்லாமித் திருவிழாவில் இயம்பிடும் பாரதப் போர்!
புள்ளயம்மா பல் லாண்டு போயிற்று பார்ப்போ மின்றே! 04

பதினெட்டு நாட்க ளிந்த பள்ளய விழா நடக்கும்
புதினமோர் மூன்று நாட்கள் புரளிதான் கோவில் வீதி
அது வனவாசம் கீர்த்தி யர்ச்சுனன் தவநிலை, பின்
புதுமை தீப் பள்ளயம் போய்ப் பார்க்கலாம் புறப்படன்டீ! 05

துரியர்கள் மலிந்த மண்ணில் துரோபதை யம்மன் போரில்
திருவிழாப் பார்த்து யாகத் தீயிலே பிறந்தாள் கற்புத்
திருவருள் வேண்டி நிற்போம்! தீயவர் சரிவர், பார்த்தர்
பெருகுவர் கோடி கோடி பிறந்திடும் சுபீடசம் நாட்டில்! 06

உரிமையைப் பறித்தான், ஐவர் உடமையைப் பறித்தான், சேலை
உரிந்து பாஞ்சாலி கற்பை உலகுணர்ந் திடத்தீ தொட்டான்!
அரியரி கிருஷ்ணா நாமும் ஆடையை இழந்தாள் போல
உருவகம் பெற்றோம், சாபம் ஒரு தினம் பலிக்கும் புள்ளேய்! 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு நாமந் தந்த ஒப்பரும் பள்ளயங் கா
பாரதம் பயிலுங் காட்சி பதினெட்டு திருநாள் மாட்சி!
வேரெனக் கீதை போதம் விளங்கிடும் விளக்கம் கேட்போம்
சீர்திகழ் திருவிழா வித் தீப்பள்ளயத் தின் பேறாம்! 08

பதினெட்டாம் போர் நடந்து பாரதம் முற்றுமாப் போல்
பதினெட்டாம் நாளி னுச்சிப் பகல்சரி பொழுதில் வேள்வி
யிதுமிக வுச்சமாக இலங்கிடும் உற்ச வந்தான்
மதியுளார் மெய்சி லிர்க்க வருமித் தீப் பள்ளயங்கா! 09

விந்தையே யுரிமை கேட்டல் விழல்! விடு வனத்தை யாளும்
குந்த வீடைந்தும் இங்கே கொடேனிவர் பாண்ட வர்க்கு
அந்தநாள் துரியன் சொன்னான் அழிவினைத் தழுவிக் கொண்டான்
சுந்தரம் பொலிய ஈற்றில் சுதந்திரம் மலரக் கண்டோம் 10

ஈயமர் இடமும் ஐவர்க் கில்லையென் றுரைத்த தீயோன்
நாயினுங் கீழாய் மாண்டு நாட்டையே யிழந்தா னென்ற
சாயல் தீப் பள்ளயம்! நம் பாண்டவர் வெல்வர் ஓர் நாள்!
போயதைப் பார்ப்போம் கூடப் புறப்படு புள்ள யம்மா! 11

வேலியை யிழந்த வேளாண் பியிரென மேயப் பட்டோம்!
தாலியை யிழந்தோம் அன்புத் தனியரை யிழந்தோமே பாஞ்
சாலியின் தலத்தில் பார்த்த சாரதி தயவைப் பெற்றால்
சோலியில் லாமல் வாழ்வில் சுதந்திரம் காணலங் கா 12

அறந் திகழ் தருமன் வீமன் அருச்சுனன் ஏனையோர் போல்
திறம்பிடா மனத்த ராகித் தீயோரின் தீயைத் தாண்டி
மறந்திகழ் மானிடர் போல் வாழ்பவர் வெல்வ ரென்ற
திறத்தினைப் புகட்டுந் தூய தீப்பள்ள யத்தைக் காண்போம்! 13

மலையெனக் குவிந்த வீரை மரங்கள் கௌவரவாய்ப் பற்றி
நிலை தணலாக வோங்கி நின்றிடும்! தூய வண்ணக்
கலை திகழ் மஞ்சள் பூசிக் கற்பினை யுறுத்தி ஐவர்
அலையெனத் தேவாதீகள் அத்தணல் மீது செல்வர்! 14

விற்பனர் பரதவேத விரிவுரை யமுதம் பெய்வர்
கற்பூர விளக்கு முள்ளுக் காவடி யோடும் அங்க
அர்ப்பணப் பிரதட் சனையும் அன்னையர் மடிப்பிச்சை யும்
அற்புத நேர்த்தி யாகும் அமளிகள் காணலாங் கா! 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— வேறு —

தருமன் முன்னே நடக்க பின் தம்பிமாருந் துரோபதையும்
தருமம் வெல்லும் சத்தியத்தைத் தலையாய் கொண்டு தீ மிதிப்பர்
அருமை! அருமை! அற்புதமே! அகிலங் காணும் பள்ளயமே!
ஒருநாள் பார்த்தா லூழிவரை உள்ளம் உருகும் புள்ளயம்மா! 16

அண்ணன் தம்பி யுறவுக்குள் ஆதிக்கப் போர் வெறிகொண்டு
எண்ணம் வாக்குச் செயல்மூலம் இடர்செய் யெவர்க்கும் கண்ணன்போல்
கண்முன் பாடம் கற்பிக்கும் கனலின் வேள்வி பள்ளயமாம்!
பண்ணா ரின்பம் உருவாகும் பகமை யழியுஞ் சத்தியத்தில் 17

வாகா மச்சி புள்ளயம்மா வனவா சத்துக் கின்றுசெலின்
தோதா யிருக்கும் தவநிலையும் தீப்பள்ளயமும் பார்பதற்கு
தாதன் சமைத்த கோயிலிது 'தாதன் கோயில்' எனச் சொல்வார்
நாதன் கண்ணன் திருவருளின் நாட்டம் இவ்வூர்க் கமுதம்டீ 18

பழமை வாய்ந்த மட்பாண்டம் பச்சைக் கறிகாய் யாழ்ப்பாண
அழகுத் திராட்சை பாய் பெட்டி ஆசைக் குகந்த பனங்குட்டான்
இளகாப் பனாட்டு இனிப்பு வகை இன்னும் பண்டம் பலகாரம்
சுளகு கரும்பு சருபத்து சுவைக்க லாங்கா புள்ளயம்மா! 19

காப்புச் சீப்பு கண்ணாடி கதைக்கும் பொம்மைக் கடைகொள்ளை
சேப்பில் சல்லி மிகவுண்டேல், தேர்ந்து தாச்சி செம்பு வட்டா
சாப்பாட்டுப் பீங்கான் கோப்பை சருவக் கிடாரம் குடம் விளக்கு
'சேப்பாய்' பார்த்து வாங்கிடலாம் செலவோர் முறைதான் வருடத்தில் 20

கவனம் வேறு திசைபோனால் கர்மம் வெல்லா புள்ளயம்மா
அவமாய்ப் போகும் திருமாலின் அழியாக் குறிக்கோ ளஃதேபோல்
தவமாய்க் கொண்டே பள்ளயத்தின் தலைவா லறிதல் பயனன்றோ?
கவலை வேண்டாம் காசெதற்கு? காதுகுளிரக் கதைகேட்போம்! 21

பதினைந்தாம் நூற் றாண்டினில் இப்பாராள் தலைவன் எதிர்மன்னன்
அதிகாரத்தில் 'தாதன்' எனும் அறவோனமைத்த கோவிலிது!
மதியிற் சிறந்தோர் உரைக்கின்றார் மகிமை யிதற்குள் பலவுண்டாம்
பதியா லெழுந்த பெயர்ஊர்க்கும் பரவுஞ் செல்வப் பாண்டிருப்பு 22

தாதன் வடநாட்ட வனென்பார் தண்ணார் துளப மார்போனைப்
பாதம் பற்றி வழிபட்ட பண்ணார் விஷ்ணு பக்தனென்பார்
தோதா யமைந்த நிலமென்றே துணிந்து சமைத்தான் தலமொன்றை
தூது சென்ற திருமாலின் துதியே யிங்கு வழிபாடாம் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்ட வர்க்குப் பதியான படியா லிவ்வூர் பாண்டிருப்பே
நீண்ட பழமை வரலாறும் நிலத்தின் பழைய குடியமர்வும்
ஆண்டாண் டாகப் பள்ளயமும் அமைந்த பெருமை யிவ்வூர்க்கே
தோண்டச் சுரக்கும் பு+வல் இத்தூய தலத்தின் அருளன்றோ? 24

ஆண்டொவ் வொன்றும் புரட்டாதி அமையுஞ் செவ்வாய் அமவாசை
ஆண்மிக் குந்நாள் கொடியேற்றம் அடுத்துப் பதினெட்டுத் தினமும்
கொண்டாட் டந்தா னுற்வசங்கள் குடிகள் பதினா றிதைச் செய்வார்
கண்டோர் வியக்கும் திருநாளே கடைசி நிகழ்தீப் பள்ளயமாம்! 25

ஐவர் கொலுவைக் கண்டிடலாம் அவருள் துரியர் ஏனில்லை?
மெய்யா யவர்கள் வேடத்துள் விளங்கு முண்மை யாரறிவார்?
உய்யக் கேட்கும் பாரதத்தில் உள்ள தனைத்தும் உள்ளத்தில்
வையம் எதிர்த்து வந்தாலும் வாழும் தா்மம் தலைதூக்கி 26

கண்ணன் எழுந்தருள் காட்சி களைபூண் டிலங்கும் ஏழாம்நாள்
கணன்னுக் கினிய திருநாளே கல்யா ணக்கால் பனிரெண்டில்
பண்ணிப் பதினாறாம் நாளில் பாண்டவர்க்கு வனவாசம்:
புண்ணி யஞ்செய் தவநிலைக்குப் போவான் பார்த்தன் பதினேழில் 27

தீப்பள் ளயமே பதினெட்டாந் தினவெள் ளாப்பில் தீமூட்டல்
மூப்பி லிளமை பொலிவிக்கும் முகுந்தன் நாமப் புகழ்பாடி
கூப்பா டெழுப்பத் தேவாதிக் குலவிக் கொலுவோர் வலம்வந்து
தீப்பாய்ந் திடுவர் பாண்டவரும் தேவாதிகளும் சிலிர்க்கும் மேல்! 28

தீயோர் அழிய தெய்வீகத் தேசம் பொலிய தருமத்தின்
வாசல் குளிர வையகத்தில் மழையும் பொழிய வருநோய்கள்
ஓய செல்வ ஒளிகால உண்மை உரிமை ஓங்க, தீப்
பாயுங் கால்கள் பனிதீண்டப் பரந்தா மன்கண் பதிக்கின்றான்! 29

தருமன் வெற்றி காண்கின்றான் தணலைத் தாண்டி முடிக்கின்றான்
பெருமைக் குரிய முடிசூடல் பிறக்கும் மறுநாள் சனிவாரம்
அருமை பரவுமித் திருநாள் அதுவே பாற்பள்ள யமென்பர்
ஒருவ ரிருவர் மட்டில்லை உலகே யன்று பால் வார்ப்பர்! 30

**கருமாதிகள்:**

கருமஞ் செய்வோர் பூசகர்கள் கட்டாடி யென்ற ழைக்கின்றார்
ஒருவர் இருவர் மூவரென ஒழுங்குப் பதவி பெறுகின்றார்
பரவும் வணக்க முறைசைவம் பாவனை யாவும் வைணவமாம்
திருநீ றணிதல் தீட்சை முறை தீட்டுந் நாமம் திருமாலாம்! 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை மாலைப் பூசைகளும் கட்டுக் கென்றே நிற்கின்றார்
மாலை மூன்றாந் நாள் ஏடாம் மறைநூல் பாரதம் அவிழ்ப்பர்
சீலம் மிகுந்த காப்பணிந்து தீயில் இறங்குந் நோற்பெடுப்பர்
சூலம் தண்டு வாள் வில்லுச் சுமப்பர் படையாய் பாண்டவர்கள் 32

பண்டா ரச்சிமிழ் பொடி மஞ்சள் பக்குவமான சின்னங்கள்
தண்டை சிலம்பு வெண்பிரம்பு சாட்டைக் கயிறு இவையாவும்
பண்டைத் தாதன் பொகிஷமாம் பரவிப் பணியும் சொத்துக்களாம்!
என்றும் இவைகள் பூசையிலே இலங்கும் சக்திச் செல்வங்கள்! 33

புல்லர் பொய்யர் என்றாலும் புரளிக் கசட ரென்றாலும்
ஓல்லும் வகையில் ஐவர்கொலு வுரிமை பெற்றே யுள்ளிட்டால்
பொல்லாஇரும்பும் பொன்னாகப் போதல் போலபுடம்பூண்பார்
எல்லாம் கண்ணன் திருவருளென் றெவரும் மெச்ச விளங்கிடுவர் 34

வீமன் வனவா சத்தன்று வெட்டும் வாழை, பலா, மாங்காய்
தாமம் பரவும் கனியாகத் தருவர் எட்டாஞ் சடங்கன்று
ஆமாம் அன்றும் பெருவேள்வி அமையும் அறுதிச் சடங்கிதுவே
ஏவர் தெய்வம் ஆடுதற்கென்று இங்கண் றெழுவர் எங்கிருந்தும் 35

பண்டை வழமைப் படியிங்கே பலிகள் கொடுத்த தோர்காலம்
இன்றிங் கில்லை எவ்வுயிரும் இறைவன் சொத்தென் றேற்றுள்ளார்
கொண்டை யவிழப் பேயாடும் குரலிலும் 'கட்டுக்' கூறுவதும்
இன்றுந் தெய்வ வாக்காக ஏற்கக் கேட்பாய் புள்ளயம்மா 36

– வேறு –

பாஞ்சாலி சபதம் முற்றிப் பாலினை வார்த்துக் கொள்வாள்!
தீஞ்சுவைப் புற்கை தின்று தேசமே குளிரும் உள்ளம்
பூஞ்சுமை மஞ்சம் மீது புரள்வதை ஒக்கு மின்பம்!
நாஞ் சென்று பார்க்க லாங்கா நமக்கிது தூரமில்லை! 37

ஊழ்வினை யுறுத்தும் தூய உள்ளொளி யிருளை வெல்லும்
வாழ்வுதான் தெய்வம் மாந்தர் மனத்திலே துரியர் சூழ்ந்தால்
பாழ்படும் இன்பம் என்றே பாரதக் கதை புகட்டும்
ஏழ்பிறப் பெடுத்தா லும்தீ எரிக்கு மென் றியம்ப லாமே! 38

வெள்ளம் போல் துரியர் மாடர் வீறுகொண் டெழுந்திட் டாலும்
உள்ளத்தி லுறுதி பூண்ட ஒப்பரும் பாண்டவர் களைவர்
வள்ளலாம் கருணைக் கண்ணன் மலர்விழித் தயவால் பூமி
வெல்லப் போர் புரிவர் நாமும் வெற்றியில் மூழ்க லாமே! 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதொருக் காலும் வெல்லா சுதந்திரச் சுடருந் தேயா
மாதரின் கற்புக் கண்ணீர் வாளென அறுக்கும் சூழ்ச்சி
ஏதெவர் இழைத் தாரோ அவ் வெழியவர் இழிந்து மாள்வர்
போதனை பள்ள யத்தில் பொதிந்தது பொருந்தும் நம்முள்! 40

சிவபெரு மானும் விஷ்ணுத் தேவனும் ஒன்றே யென்று
தவநெறி யிந்து மார்க்கம் சாற்றிடுந் தத்து வத்தைக்
கவனமாய் வகுத்த வேத காவலன் வியாசன் வாக்கு
நவமெனக் காட்டும் காட்சி நாமிதைக் தள்ள லாமோ? 41

வயிரண்ணன் குடும்பத் தாரும் வண்டிலைப் பூட்டு கின்றார்
அயர்ந்திடா வண்ணம் நாமும் அவர்களோ டிணைந்து கொள்வோம்
உயிருட னிருக்கும் போதே உரியதை ஓம்பி வாழ்வோம்
பயமில்லைப் புள்ளயம்மா பச்சை மால் பாலிப் பானே! 42

(நிறைந்தது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிதி நிறைந்தவர் பொற்குகை தாரீர்!**
**நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !!**

இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன் கட்டிடங்கள் இதுவரை பூர்த்தியாகவில்லை. வருடாவருடம் பெறப்படும் நிதியிலிருந்தே இது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. நலம் விரும்பிகள் எவரும் விரும்பினால் இதற்கு நிதியுதவியை வழங்கலாம்.

கட்டிட அபிவிருத்திப்படங்களை நீங்கள் இந்த நூலில் காணலாம்.

பணம் அன்பளிப்புச் செய்ய விரும்பும் அன்பர்கள் பின் வரும் தேவஸ்தானக் கணக்குக்கு வைப்புச் செய்யலாம். எந்த நிர்ப்பந்தமும் இல்லாமல் நீங்கள் விரும்பும் போது விரும்பிய தொகையை வைப்பிலிடலாம். ஆனால் பணம் எவ்வளவு விரைவாகக் கிடைக்கிறதோ அவ்வளவு விரைவாக கட்டிடங்கள் நிறைவு பெறும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

பணத்தை வைப்புச் செய்தவர்கள் பின்னர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டால் இதற்கான இரசீதையும் கணக்கறிக்கையையும் பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்கு: ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம்
வங்கி : தேசிய சேமிப்பு வங்கி. கல்முனைக் கிளை.
கணக்கு இலக்கம்: 1 0047 02 26416

**அன்பு உள்ளங்கள் அனைத்திற்கும் நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரௌபதி அம்மன் ஆலய பாடல் குறுந்தகடு

திரௌபதி அம்மன் மீது பாடப்பட்டு இந்தியாவிலே பதிவு செய்யப்பட்ட புதிய பாடல்கள் அடங்கிய குறுந்தகடு, பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றத்தினால் இப்போது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

இதனைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றத்துடன் தொடர்பு கொண்டு இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:**

ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார், ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய இந்து இளைஞர் மன்றம் பாண்டிருப்பு. கல்முனை. இலங்கை.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு

முடிவாகப் பாடும் பாடலும் இதுவே. ஆகவே நமது முடிவின் போதும் இந்தப் பாடல்களுடன் நிறைவு செய்வோம். இதை மனனம் செய்து வைத்திருப்பவர்கள் நல்ல பலனைப் பெறுவர்.

ஆகவே இதனை இந்நூலின் பல இடங்களில் நீங்கள் காணலாம். இவை வில்லிபாரத நூலிலும் இடம் பெற்றுள்ளது.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ!

முருகார்ம லர்த்தாம முடியோனை யடியார்மு யற்சித் திறம்
திருகாமல் விளைவிக்கு மதயானை வதனச்செ ழுங்குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதேவ ருங்கைதொ ழுங்கோவை யுறவுன்னுவாம்!

(நிறைந்தது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-54011-1-1
9789555401111

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org